www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

ප්‍රදීය ප්‍රම


Puthiya Poomi

சுற்று 11 | நவம்பர் 2004 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 74


# இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு

## உடன்படிக்கை எதற்காக?









இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடுவதற்கான முழுமை பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. இத்தகைய உடன்படிக்கை ஒன்றிற்கான அத்திபாரம் கடந்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியினாலும் இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தினாலும் இடப்பட்டதாகும்.தற்போது இலங்கையிலும் இந்தியாவிலும் ஆட்சிகள் மாறியுள்ள போதிலும் மேற்படி பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை இரு அரசாங்க உயர்மட்டப் பேச்சுக்களுக்கு உள்ளாக்கப்பட்டு இறுதி வடிவத்தைப் பெற்றுள்ளது. பெரும்பாலும் இவ்வருட முடிவிற்குள் இரு நாடுகளின் தலைவர்களால் கைச்சாத்திடப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இப்பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன் படிக்கை எத்தகைய அம்சங்களை உள்ளடக்கி இருக்கின்றது என்பதை முன் கூட்டியே புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இந்தியா இலங்கையுடனான தனது பலதரப்பு விவகாரங்களில் நடந்து கொண்ட விதங்களின் ஊடே பார்க்கும் போது பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை என்பது சமத்துவமானதாகவோ நட்பு ரீதியான அயல் உறவைப் பேணுவதாகவோ அமைய மாட்டாது என்பது நிச்சயமானதாகும். ஏனெனில் இந்தியா நமது பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்துவதற்கு முனைந்து நிற்கும் ஒரு வல்லரசாகும். இந்தியாவின் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு ஆளும் வர்க்கம் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமது பிராந்திய வல்லரசு ஆதிக்க நோக்கையும் அதற்கான போக்கையும் மாற்றிக் கொள்ளவோ கைவிடவோ தயாராக இல்லை. தென் ஆசியப் பிராந்தியத்தில் இடம்பெறும் எதுவும் தன்னைக் கடந்து செல்லமுடியாது என்ற மேலாதிக்கப் போக்கையே இந்தியா கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கடைப்பிடித்து வருகின்றது. சார்க் நாடுகள் எனப்படும் தென்னாசிய நாடுகளுடனான உறவில் மேற் கூறியவாறே இந்தியா நடந்து வருகின்றது என்பது மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் காணக் கூடியதேயாகும்.

இலங்கை இந்தியாவில் இருந்து குறுகிய நீர் நிலை எல்லையால் பிரிக்கப்பட்டிருக்கின்ற அதே வேளை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் கொண்ட இடத்தில் அமைந்திருக்கின்றது. திருகோணமலையின் இயற்கை துறைமுகம் பிராந்திய ஆதிக்கத்திற்கும் அல்லது உலக மேலாதிக்கத்திற்கும் அவசியப்படும் துறைமுகமாகும். மேலும் இலங்கையின் வடக்கு கிழக்கை தமிழர்கள் தாயகப் பிரதேசமாகக் கொண்டு வாழ்வதாலும் குறுகிய தூரத்தில் பாக்கு நீரிணைக்கு அப்பால் எட்டுக்கோடி தமிழர்களைக்கொண்ட தமிழகம் அமைந்திருப்பதாலும் இந்திய ஆளும் வர்க்க ஆதிக்கக் கண்கள் எப்பொழுதும் விழிப்புடனேயே இருந்து வருகின்றன. காரணம் இன்று வடக்கு கிழக்கில் இடம் பெறும் தேசிய இன விடுதலைக்கான போராட்டத்தின் பொறிகள் தமிழகத்திற்கும் தெறித்து விடுமோ என்ற அச்சத்துடன் நோக்கப்பட்டு வருவதாகும்.இது மட்டுமன்றி எதிர்காலத்தில் இன்றைய போராட்டம் நாளை சுயநிர்ணய உரிமைக்கான புரட்சிகரப் போராட்டமாகவும் அதன் வளர்ச்சி இலங்கை முழுவதற்குமான விடுதலைப்போராட்டமாகவும் வளர்ச்சியும் மாற்றமும் பெற்று விடுமோ என்ற தூர நோக்கிலான அச்சம் இந்திய ஆளும் வர்க்கதிற்கு இருந்து வருகின்றது.தமது கவலையீனத்தாலேயே இன்று நேபாளத்தின் விடுதலைப் போராட்டம்

தொடர்ச்சி 12ம் பக்கம்

## சந்திரிகாவிற்கு பிரதமராக வேண்டும் ரணிலுக்கு ஜனாதிபதியாக வேண்டும்

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ஜனாதிபதிப்பதவியில் பத்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்யப் போகிறார்.அரசியலமைப்பின் கீழ் இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதிப் பதவி வகிக்க முடியாது.ஆதலால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா அம்மையார் போட்டிக்கு நிற்க மாட்டார். அதேவேளை அவரது பக்கத்தில் யார அப் பதவிக்கு நிற்பது என்பதில் போட்டியும் இழுபறியும் உள்ளூர இடம் பெற்று வருகிறது. அதே வேளை இன்றைய அரசியலமைப்பை மாற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். ஆனால் ஆளும் ஐ.ம.சு முன்னணிக்கு அத்த கைய பெரும்பான்மை இல்லை. எனவே ஜனாதிபதி சந்திரிகா வேறு வழிவகைகள் மூலம் அரசியலமைப்பை மாற்றுவதற்கு முயற்சி செய்கிறார். அதில் ஒன்றாகவே சர்வசன வாக்கெடுப்பை நடத்தலாமா என்றும் ஆராயப்பட்டு வருகிறது. இதற்குத் துணையாக நீதித்துறை யையும் வளைத்துப் பயன்படுத்தலாம் என்றும் சிலர் சட்ட ஆலோசனை வழங்கி வருகின்றனர். இவற்றின் மூலம் அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று

தொடர்ச்சி 12ம் பக்கம்

## வடக்கு கிழக்கில் நடைபெறும் சத்தம் இல்லாத யுத்தம்.

வடக்கு கிழக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் யுத்த நிறுத்தமும் நடைமுறைக்கு வந்து இரண்டரை வருடங்கள் கழிந்து விட்டன.இது வரை 1600க்கு மேலான யுத்த நிறுத்த மீறல் முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன.அதே வேளை 160க்கு மேலான கொலைகள் இடம் பெற்றுள்ளன. ஆட்கள் காணாமல் போவது மற்றும் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.கொலைகளில் பெரும் பகுதி கிழக்கு மாகாணத்திலேயே நடைபெற்றுள்ளன.இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டி நிற்கும் யுத்த நிறுத்தத்திற்குள் ஒரு யுத்தமும் அமைதி என்பதற்குள் ஒரு அமைதியீனமும் தொடர்கிறது. இதனை வடக்கு கிழக்கில் இடம் பெறும் சத்தமில்லாத யுத்தம் என்றே கூற வேண்டும்.இது தொடருமானால் மீண்டும் ஒரு யுத்தம் வெடித்து விடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் பரவி வருகின்றது.

## தோ.தொழிலாளர்களுக்கு 14 ரூபா சம்பள உயர்வு சுத்த ஏமாற்று!

### முதலாளிகளும் தொழிற்சங்கங்களும் கூட்டுச் சதி

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் சில தொழிற்சங்கங்களும் கைச்சாத்திட்டது கூட்டு ஒப்பந்தமல்ல. தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான சம்பள உயர்வை மறுக்கும் அவர்களை ஏமாற்றும் கூட்டுச் சதியாகும்.

25 சதவீத சம்பள உயர்வை பெற்றுத்தரப்போவதாகத் தம்பட்டம் அடித்துவிட்டு தற்போது 10 சதவீதத்திற்கும் குறைவான 14ரூபா சம்பள உயர்வுக்காக கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்கள் கம்பனிகளுக்கு விலை போய்விட்டன. இத்து ரோகத்தை தோட்டத் தொழிலாளர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமான ரூபா 121 இற்கு மூன்று கிலோ அரிசி வாங்கக்கூடியதாக இருந்தது. தற்போது விலைவாசி உயர்வுகளுக்கு பிறகு நாளாந்த சம்பளம் ரூபா 135 ஆக அதிகரிக்கப்பட்டநிலையில் 2 1/2 கிலோ அரிசியை மட்டுமே வாங்கக்கூடியதாக இருக்கிறது. எனவே இந்த 14 ரூபா சம்பள உயர்வால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கப்போவதில்லை.

70 சதவீத சம்பள உயர்வை வழங்குவதே நியாயமானது என்று அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கும் போது 10 சதவீதத்திற்கும் குறைவான 14 ரூபா சம்பள உயர்வு என்பது சுத்த ஏமாற்றாகும்.

நாலுமாதங்களாக இழுபட்ட பேச்சுவார்த்தையை அவசர அவசரமாக முடிவிற்கு கொண்டுவரும் வகையில் இந்த சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. வரவு செலவு திட்டத்தில் ஏனைய ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள சம்பள உயர்வு நிச்சயமாக இந்த 14 ரூபா சம்பள உயர்வை விட அதிகமானதாகவே இருக்கும். வரவு செலவு திட்டத்திற்குப் பின்னர் இந்த சம்பள உயர்வை அறிவித்தால் தோட்டத்தொழிலாளர்கள் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற பயத்தினாலேயே வரவு செலவு திட்டத்திற்கு முன்பு இச்சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தோட்டத்தொழிலாளர் வெகுவிமர்சையாகக் கொண்டாடும் தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒரு சில தினங்களே இருக்கையிலே இச சம்பள உயர்வை அறிவித்திருப்பது இன்னொரு தந்திரோபாயமாகும். ஏனெனில் தீபாவளிக்கு பணம் தேவைப்படும் போது ஏதாவதொரு தொகையையும் கொடுத்து அதனை ஏற்றுக் கொள்ளும் படி தோட்டத் தொழிலாளர்களை நிர்ப்பந்திக்க முடியும் என்ற குள்ளத்தனமான எண்ணத்திலேயே இச்சம்பளஉயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சம்பள உயர் வழங்கும் கூட்டு ஒப்பந்தத்தை தோட்டத் தொழிலாளர்கள் நிராகரிக்க வேண்டும். அனைத்து தொழிலாளர்களினதும் அனைத்து தொழிற்சங்கங்களினதும் விருப்பங்களையும் அபிலாசைகளையும் உள்ளடக்காது இந்த புதிய கூட்டு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## தோழர் நவத்திற்கு புரட்சிகர இறுதி அஞ்சலி.



புதிய – ஜனநாயக கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் சி.நவரட்ணம் கடந்த 8.10.04 அன்று இயற்கை எய்தினார்.மாரடைப்பு அவரது உயிரைக்கவ் கொண்டு விட்டது. அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் அவரது யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆத்திசூடி இல்லத்தில் இடம் பெற்றன. 10.10.2004 அன்று பி.ப 3 மணிக்கு எவ்வித மதக்கிரிகைகளும் இன்றி புரட்சிகர இறுதி அஞ்சலியாக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன. கட்சியின் பதாகையின் கீழ் அவரது உடலைத் தாங்கிய பேளை வைக்கப்பட்டது. அவரது உடலின் மேல் கட்சியின் அரிவாள் சம்மட்டி பொறிக்கப்பட்ட செங்கொடி கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களால் போர்த்தப்பட்டு மத்திய குழுவின் புரட்சிகர இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின் குடும்பத்தவர்கள், கட்சி தோழர்கள்

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்கள் எக் கேடுகெட்டாலும் ஆறுமுகத்திற்கு தேவை அமைச்சர்பதவி !

இ.தொ.கா தலைவரும், பொதுச்செயலாளரும் நுவரெலியா பாராளுமன்ற (ஐ.தே.க) எம்.பியும் மான ஆறுமுகன் தொண்டமானுக்கு இலங்கை முழுவதற்கும் பொறுப்புடைய அமைச்சுப் பொறுப்பு வேண்டுமாம்.

ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள தோட்ட உள்ளக கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சு போதாதாம். அதனால் வீடமைப்பு நகர அபிவிருத்தி பொதுவசதிகள் அமைச்சை கேட்டுள்ளார்.

ஜனாதிபதியிடம் இதுபற்றி ஆறுமுகன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். விமானப் போக்குவரத்து அமைச்சை கொடுப்பதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார். தான் கேட்ட அமைச்சு கிடைக்காததால் என்ன செய்வதென்று ஆறுமுகன் யோசித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் பொதுவசதிகள் அமைச்சை கேட்பதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே. நீர்ப்பாசன வடிகாலமைப்பு சபை நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தும் உடன் படிக்கையை இந்திய கம்பெனியொன்றுடன் செய்து கொண்டு அதனை முன்னெடுப்பதில் அவர் மிகவும் ஆவேசமாகவே இருக்கிறார். அவ்வுடன்படிக்கையினால் பெருந்தொகை கமிஷனாக கிடைக்குமென்று பத்திரிகைகள் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தோட்டக்கம்பனிகளுடணான கூட்டு ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்விற்கான குரல்களும், போராட்டங்கள் பற்றி இ.தொ.கா. தலைவர் கவலைப்படுவதாக இல்லை.

மேல் கொத்மலை திட்டத்திற்கு இ.தொ.கா தெரிவித்துவந்த எதிர்ப்பும் தற்போது அடக்கியே வாசிக்கப்படுகிறது.

அத்துடன் தோட்ட இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது.

எது எப்படியிருப்பினும் இ.தொ.காவிற்கு அமைச்சுப் பதவிகளிலேயே அக்கறை என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஐ.ம.சு.மு. அரசாங்கத்திற்கு நிபந்தனையில்லாது ஆதரவு வழங்குவதாக இ.தொ.கா. தலைமை கூறியிருந்தபோது அமைச்சுப் பதவிகளின்றி அதனால் நேராக நிற்கமுடியாது.

# வட்டுக்கோட்டையில் சாதிவெறியர் அட்டகாசம்

வடபுலத்தில் சாதியத்தின் கொடுரம் அவ்வப் போது வெளிப்பட்டே வருகின்றது இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிவெறி அட்டகாசங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.இதனை அங்குள்ள அரசியல் கனவான்களும் பத்திரிகைகளும் கண்டு கொள்வதில்லை.தனிநபர்களின் பிரச்சனை என்றும் கோஷ்டி மோதல் என்றும் பூசி மெழுகிக் கொள்வார்கள்.அண்மையில் வட்டுக்கோட்டை மேற்கு பகுதியை அடுத்துள்ள பகுதியில் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஒரு சாதிவெறிக் கூட்டம் தாக்குதல் நடாத்தி அட்டகாசம் புரிந்துள்ளது.இந்த வெறியர்கள் நடாத்திய தொடர் தாக்குதலில் மூன்றுபேர் படுகாயங்கள் அடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன் தெங்கு பனம் பொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்க கள்ளு விற்பனை நிலையமும் எரிக்கப்பட்டுள்ளது. சில தொழில் நிலையங்களும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. மேற்படி தாக்குதல்கள் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பேபியன் என்பவரது தலைமையிலான சாதி வெறிக் கோஷ்டியாலேயே நடாத்தப்பட்டுள்ளாதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.உள்ழூர் சண்டியன் என்றும் கடந்த தேர்தலுக்கு முன்பு இடம் பெற்ற தேர்தல்களில் மகேஸ்வரனின் ஐ.தே.கட்சியின் பட்டியலில் வேட்பாளராக நின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சாதிவெறி கக்குவது, தாழ்த்தப்பட்ட மக்களை ஏசுவது, நக்கல் செய்வது அவற்றை திருப்பிக் கேட்டால் தாக்குவது இவ ரது தலைமையிலான கோஷ்டியின் தொடர் செயல்களாகும். முன்பும் இது போன்ற சம்பவங்கள் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. தற்போதைய சூழலில் பொலீசும் வழமை போன்று சாதி வெறியர் பக்கமே நின்று வருவதாக மக்கள் சுட்டிக்காட்டி வருகின்றார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் சாதியின் பெயரால் தாக்கப்பட்டாலும் பழிக்கப்பட்டாலும் தூஷிக்கப்பட்டாலும் கேட்டுக் கொண்டும் பொறுத்துக் கொண்டும பணிந்தும் நடந்து கொள்ள வேண்டுமே தவிர எதிர்த்த எத்தகைய செயல்களிலும் ஈடுபடக்கூடாது என்றே சாதி ஆதிக்கவாதிகளும் அவர்களது அரசியல் சக்திகளும் விரும்புகின்றன. பொலீசும் அவ்வாறே எதிர்பார்க்கின்றது. சாதி வெறியின் மூலமான தாக்குதல் என்றோ சாதிய மோதல்கள் என்றோ கூறப்படுவதை ஆதிக்க சக்திகளும் பத்திரிகைகளும் விரும்புவதில்லை . அவர்களுக்கு இவை சிறுசிறு விடயங்களாகவே இருக்கின்றன.

ஆனால் விடுதலைப் போராட்ட சூழலிலும் நீண்ட கொடிய யுத்தத் திற்குப் பின்பும் சாதிவெறி வடபுலத்தில் தாண்டவமாடுகின்றது என்றால் அதன் அர்த்தம் என்ன? இன்றும் சாதிய அமைப்பும் ஒடுக்குமுறையும் நீடித்து வரும் யதார்த்தத்தையே எடுத்துக் காட்டுகின்றது.இதனை எதிர்த்து நிற்க தாழ்த்தப்பட்ட மக்கள் மீண்டும் தங்களை ஐக்கியப்படுத்தி போராட்டப் பாதையில் அணிவகுக்க வேண்டிய தேவையையே ஏற்படுத்தியுள்ளது.

# ஓமந்தை – வவுனியா பஸ் பயனிகள் அவதி

ஓமந்தையிலிருந்து வவுனியாவரை மினிபஸ் காரர்களின் அடாவடித்தனங்களால் பிரயாணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ9 பாதையினூடாக சோதனைகள் பதிவுகள் போன்றவற்றை சந்தித்து களைத்துப் போய் ஓமந்தையை வந்தடையும் பிரயாணிகள் அங்கிருந்து வவுனியாவிற்கு பிரயாணம் செய்வதற்கு அதிகமாக தனியார் மினிபஸ்களிலேயே ஏற வேண்டியிருக்கிறது பிரயாணிகளை ஏற்றுவது இருக்கைகளில் அமர்த்துவது பயணப்பைகளை ஏற்றுவது பிரயாணிகளை இறக்குவது பயணப்பைகளை இறக்குவது போன்ற விடயங்களில் மினிபஸ் சாரதிகளும் நடத்துநர்களும் அவர்களது அடியாட்களும் பிரயாணிகளை பெரும்சிரமத்திற் குள்ளாக்கின்றனர். மிளகாய்ப் பொதிகளை ஏற்றுவது போன்று பிரயாணிகளை பஸ்களில் அடைக்கின்றனர். பயணப்பைகளை அங்குமிங்கும் தூக்கி வீசுகின்றனர் பிரயாணிகளை மரியாதைக் குறைவாகப் பேசுகின்றனர். அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை பஸ்களிலிருந்து இறக்கியும்விடுகின்றனர்.

இவ்வாறான அடாவடித்தனங்களால் சில பிரயாணிகள் அவர்களது பயணப்பைகளை இழந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறே வவுனியாவிலிருந்து ஓமந்தைக்கு மினிபஸ்களில் பிரயாணம் செய்பவர்களும் மினிபஸ்காரர்களால் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். அவர்களை தட்டிக்கேட்பதற்கு எவருமே இல்லை. அவர்கள் தமிழ் மொழியிலே பேசுகின்றனர், இருந்தும் தமிழ்ப்பயணிகளையே அவர்கள் பெரும்பாடுபடுபத்தி விடுகின்றனர்.

அத்துடன் வவுனியாவிற்கும் ஓமந்தைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்களில் அதிகமானவை நல்லநிலையில் இல்லை. பழுதடைந்த உடைந்த பஸ்களாகவே இருக்கின்றன. அதனாலும் பிரயாணிகள் பெரும் துன்பப்படுகின்றனர்.

ஓமந்தை-வவுனியா பாதையில் சேவையில் ஈடுபடும் தனியார் மினிகஸ்களும் போக்குவரத்துச் சட்டம் ஒழுங்கு விதிகள் பிரயாணிகள் பாதுகாப்பு விதிகள் போன்றவைகளுக்கு அப்பாற் பட்டதாக இருப்பதாகவே தெரிகிறது.

இதுகுறித்து போக்குவரத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கடலில் குதிக்கப்போகிறாராம் ஜனாதிபதி

எண்ணெய் விலை அதிகரிப்பை பார்க்கும் போது கடலில் குதிக்க வேண்டும் போல் இருப்பதாக இலங்கையின் ஜனாதிபதி சந்திரிபண்டாரநாயக்ககா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

உலகசந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பதனாலேயே அத்தியா வசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாகவும், எண்ணெய் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலை அதிகரிப்பால் நமது நாட்டின் ஜனாதிபதி நடுக் கடலில் குதிக்கப்போவதாக தெரிவிக்கும்போது சாதாரண மக்களும் கடலில் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்றா அவர் எதிர்பார்க்கிறார் என்று எண்ணத்தோன்றுகிறது.

மக்களுக்கு தேவையான அத்தியவசியப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு உறுதி செய்யும் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதற்கு வசதியாகவே அவர் கடலில் குதிக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

தவறான பொருளாதார கொள்கையின் காரணமாகவே இன்றைய விலைவாசி உயர்வுகள் ஏற்பட்டுள்ளனவேயன்றி அவை தற்செயலாக நடைபெறுகின்ற நிகழ்வுகளோ விபத்துகளோ இல்லை.

உலகசந்தையில் எமது கட்டுப்பாட்டினை மீறி விலைகள அதிகரித்தாலும் உள்நாட்டிலே மக்களின் அத்தியாவசியப்பொருட்களின் விலைகளை பரிபாலிக்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கங்கள் விலகிக் கொள்ளமுடியாது.

# நாலும் நடக்கும் உலகிலே (நற்குணன்)

## மினி வேனில் வந்தவர்கள்

யோதிலிங்கம் என்பவர் தமிழ்த் தேசியவாத அரசியலில் சில்லரைச் சித்து விளையாட்டுக்களை நடத்துபவர். சில காலம் முன்பு ஒரு கருத்தரங்கில் பேசும் போது இலங்கையின் இடதுசாரி இயக்கம் முழுவதையும் ஒரு மினி வேனில் ஏற்ற முடியும் என்று சொல்லியுள்ளார். இப்போது நவச மசமாஜக்கட்சிப் பிரமுகர்களையும் பிற இடதுசாரி உதிரிகளையும் தன்னு டைய புதிய கூட்டாளிகளாக்கிக் கொண்டுள்ளர்.

அவருடைய நூலொன்று நிறைய அச்சும் பிழைகளுடனும் அதைவிட அதிகளவில் சிந்தனைக் குழப்பத்துடனும் மும்மொழிகளில் வெளியிடப்பட்டது. அக் கூட்டத்தில், அவரை மெச்ச, இந்த இடதுசாரி உதிரிகள் வந்திருந்தார்கள்.

எந்த மினி வேனில் இவர்களை ஏற்றி வந்தாரோ தெரியாது!

## இடம், பொருள், ஏவல்

சிவத்தம்பி எந்தெந்த இடத்திற்கு எது எது தேவையோ அதைத் தான் சொல்வார். இது சிவத்தம்பி பற்றிச் சிவத்தம்பி கிட்டடியில் சொன்னது. ஓரு இடத்திலும் பொய் சொல்லக் கூடாது என்பதும் அவருடைய கொள்கையாம். பொய் சொல்லாமலிருப்பவரெல்லாம் நேர்மையாளர் அல்ல. போக, பொய் சொல்வது கூட வாய்மையின் வாய்ப்பட்டது என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் என்ன சொல்வது, கொழும்பில் என்ன சொல்வது, மட்டக்களப்பில் என்ன சொல்வது, தமிழ்நாட்டில் என்ன சொல்வது, அமெரிக்காவில் என்ன சொல்வது என்றெல்லாம் அவர் நன்கறிவார் அல்லவா. பிழைக்கத் தெரிந்த மனிதர்!

## பொல்லாத்தனத்தை என்ன சொல்வேன்

சனாதிபதி ஐ.நா. சபையில் ஆற்றிய உரை அங்கு இலங்கையர்கள் ஆற்றிய உரைகளில் எஸ்.டபிள்யூ ஆர்.டி பண்டாராநாயக்க ஆற்றிய உரைக்கு அடுத்தபடியான சிறந்த உரை என்று முன்னாள் தீவிர இடதுசாரியும் பின்னர் சனாதிபதி பிரேமதாசாவின் பக்தரும் இப்போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ரசிகருமான தயான் ஜயதிலக கூறியதை அரச வானொலியும் தொலைக் காட்சியும் பெருமையுடன் அறிவித்தன.

இலங்கையர்களது ஐ.நா.உரைகளை எல்லாம் அவ்வப்போது வாசிக்கும் பாக்கியம் தயான் ஜயதிலகாவுக்கு வாய்த்தது பற்றி மகிழ்ச்சி. என்றாலும் சனாதிபதியின் உரையின் ஒரு வடிவம் உலகின் நுகர்வுக்கும் இன்னொன்று உள்ளூர்ப் பாவனைக்கும் விநியோகிக்கப்பட்டதால் தயான் ஜயதிலக தனது இரண்டாம் பரிசை எந்த உரைக்கு வழங்கப் போகிறார் என்று தெரியவில்லை. அனேகமாகப் புலி எதிர்ப்புப் பிரகடனங்கள் நிறைந்த உரைக்கே கிடைக்கும் என நம்புகிறேன்.

அது கிடக்க, இரண்டு உரைகள் வெளியிட்ட காரணம் ஒன்று மற்றதன் சுருக்கமான வடிவம் என்பது தான் எனச் சனாதிபதியின் அலுவலகம் தெரிவித்திருக்கிறது. பொதுவாக எதையும் சுருக்கிற போது முக்கியமான பகுதிகள் விடுபடுவதில்லை. சனாதிபதியின் உரையில் விடுபட்டவை இங்குள்ள அபிமானிகள் மெச்சுவன.

இது யாருடைய விஷமமாக இருக்குமோ? ஒரு வேளை சனாதிபதியினுடையதாக இருக்குமோ?

## கணனிக் கண்ணிகள்

இப்போதுள்ள அமைதிச் சூழலைப் பாவித்து வடக்குக் கிழக்கில் "தகவல் தொழில் நூட்ப" வணிகத்தை ஊக்குவிக்கிற காரியங்கள் முனைப் படைந்துள்ளன. கணனிகளிலேயே நமது எதிர்காலம் தங்கியுள்ளது என்ற நடுத்தர வர்க்கக் கனவுகளைப் போரின் அவலத்தினின்று மீளத் தவிக்கிற மக்களிடையே வளர்த்துக் காசு சம்பாதிக்கிற முயற்சிகள் சமூக முன்னேற்றம் பற்றிய அக்கறையின் விளைவானவையா?

ஒரு புறம் தமிழ்ற் கணனிக் கல்வி பற்றிய கதைகளும் மறுபுறம் ஆங்கிலம் இல்லாமல் எதுவும் இயலாது என்கிற கதைகளும் நம் கணனிக் கல்வி வணிகர்களால் பரப்பப்படுகின்றன.

இன்று கணனிகள் வேண்டாம் என்பது முன்பு ஒரு காலத்தில் இயந்திரங்கள் வேண்டாம் என்று சொன்னமாதிரியிருக்கும். இயந்திரப்படுத்தலுக்கும் சமூகச் சூழல் தொடர்பான வரையறைகள் இருந்தது போல, கணனிக் துறைக்கும் வரையறைகள் உள்ளன.

இன்று கணனித் துறையில் உள்ள வேலை வாய்ப்புக்கள் இன்னும் நாலைந்து வருடங்களின் பின்பு எப்படியிருக்கும் என்று யாருக்குந் தெரியாது. படித்த இளைஞர்களை ஒரு கணனிக் கனவுலகை நோக்கித் திருப்புவதில் ஆட்சியாளர்கள் கவனமாக உள்ளனர்.

வேறு தொழிற் பயிற்சியோ உயர் கல்வித் தகுதியோ இல்லாமல் தனியே கணனியை இயக்கும் திறமையை மட்டும் நம்பி ஒரு இளைய தலைமுறை ஏமாறக் கூடாது.

தகவல் தொழில் நுட்பம் தொழில் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் மாற்றீடல்ல என்பதை இளைஞர்கட்கு வலைவிரிக்கும் கணனிக் கல்வி வணிகர்கள் என்றுமே சொல்லுவதில்லை.

## ஒற்றைப் புத்தி

கொழும்பில் காலிவீதியின் ஒரு பகுதியிலும் டுப்ளிகேசன் வீதியின் ஒரு பகுதியிலும் ஒரு திசைப் பயணத் திட்டம் பரீட்சிக்கப்பட்டு இரண்டே நாட்களின் பின்பு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இப்படியான முயற்சிகளை மேற்கொள்ளு முன்பு விரிவான ஆய்வுகளை நடந்த வேண்டும். தொலைவிலுள்ள ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தங்கள் அறைக்குள்ளிருந்து வகுத்த திட்டம் இது. சரியோ பிழையோ, மக்களைப் பாதிக்கிற ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பல மாதங்கள் முன்பிருந்து ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும். அவை மக்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். இதில் எதுவுமே முறையாகச் செய்யப்படவில்லை.

போக்குவரத்துப் பிரச்சனையின் அடிப்படையை விளங்கிக் கொள்ளாமல் கைக்கு வந்ததையும் வாய்க்கு வந்ததையும் முன்யோசனையின்றி நடைமுறை ப்படுத்தினால் உள்ளதும் மோசமாகும் என்பதுதான் காலிவீதிதந்த பாடம்.

போக்குவரத்து மட்டும் தானா இப்படி அல்லற்படுகிறது?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## ஐ.தே.கட்சியில் திலக் கருணாரட்ணா இணைந்தார் மேட்டுக்குடி தமிழ்க் கனவான்களின் பதில் என்ன?

பிரபல பேரினவாதியும் தமிழர் விரோதியுமான திலக் கருணாரட்ணா அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். அவரை இருகரம் கூப்பி வரவேற்று வெறும் அங்கத்துவத்தை மட்டுமன்றி பண்டாரகம தொகுதியின் அமைப்பாளர் பதவியையும் பகிரங்க கூட்டத்தில் வைத்து ரணில் விக்கிரமசிங்கா வழங்கியுள்ளார். இதில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக்கோ அன்றி அதன் தலைவர் ரணிலுக்கோ எவ்வித தயக்கமும் வெட்கதுக்கமும் இருக்கவில்லை. அப்பட்டமான பேரினவாதி ஒருவரை அணைத்து பதவி வழங்கியதன் மூலம் தாம் பேரினவாத கட்சி என்பதையும் இத்தகைய வெறியர்களை வைத்திருப்பதையும் ஐ.தே.கட்சி மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளது. பேரினவாத அப்பனுக்கு அப்பனான ஜே.ஆர்.தலைமை தாங்கிய அக் கட்சியில் சிறில் மத்தியூ முதல் லொக்கு பண்டார வரையான பேரினவாத வெறியர் இருந்து வந்த இடத்தில் திலக் கருணாரட்ண வந்து சேர்ந்திருப்பது நமக்கு வியப்பளிக்கவில்லை.

ஆனால் ஐ.தே.கட்சி ஒரு பேரினவாதக் கட்சி அல்லவென்றும் அது ஒரு தேசியக் கட்சி யென்றும் தமிழ்ப் பெரும் வர்த்தகரும் எம்பியுமான மகேஸ்வரன் பறைசாற்ற அதற்கு அவரைக் போன்ற தமிழ் மேட்டுக்குடிக் கனவான்கள் தாளம் போட்டுத் தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றி வந்த கதைகள் இன்று அம்பலமாகி அம்மணம் காட்டுகின்றன.

இந்த திலக் கருணாரட்ணா முதலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பின்பு அதை விட்டு வெளி யேறியவர். பின் சிஹல உறுமை யவைத் தோற்றுவித்து பேரினவாதம் பேசி பாராளுமன்றம் சென்றவர். இவருடன் மற்றைய பேரினவாதி களான சம்பிக்க ரணவக்க எஸ்.எல்.குணசேகரா போன்றோர் கைகோர்த்துச் சென்றனர். பதவிப் பிணக்கும் பண ஆசையாலும் பிளவுபட்டனர். அதன் பின் பௌத்த துறவிகளை மட்டும் தேர்தலில் நிறுத்தி ஒன்பது காவிதரித்த துறவிகள் எனப்பட்டவர்களைப் பாராளுமன்றம் அனுப்பி தர்ம ராஜ்ஜியம் காணத் திசை காட்டியவர் இந்தத் திலக் கருணாரட்ணா. இப்பொழுது இவர் ஜாதிகஹெல உறுமயவை விட்டுவெளியேறி ஐ.தே. கட்சியில் சேர்ந்தமைக்கான காரணத்தையும் ரணில் விக்கிரமசிங்கா முன்னிலையில் பொதுக் கூட்டத்தில் கூறி உள்ளார். பௌத்த சிங்களவர்களின் உரிமைகளை அன்றிலிருந்தே பாதுகாத்து வந்த கட்சி ஐ.தே. கட்சி என்றும் வடக்கு கிழக்கில திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங் களை நிறுவியும் கல்லோயாப் பிர தேச நீர்ப்பாசனத் திட்டங்களையும் மகாவலிப் பிரதேச காணிகளை சிங் களவர்களுக்கு தாராளமாக வழங் கிய கட்சி ஐ.தே.கட்சி என்றும் கூறி யுள்ளார். இதன் மூலம் நிலநீர் அபிவி ருத்தி விடயங்களில் திட்டமிட்டு பௌத்த சிங்கள மக்களுக்கு உதவிய கட்சி என்றும் அதனாலேயே தான் அக்கட்சியில் இணைந்துள்ளதாகவும் பகிரங்கமாகக் திலக் கருணாரட்ணா கூறி உள்ளார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாதநிலைப்பாட்டின் பக்கத்தை தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாய் விரிக்கும் தமிழ் மேட்டுக்குடி கனவான்களும் சில தமிழ் ஊதுகுழல் ஊடகங்களும் என்ன பதில் கூறப் போகிறார்கள். தொடர்ந்தும் ஐ.தே. கட்சிக்கு இவர்கள் குடைபிடிக்கவே செய்வார்கள். 83 இன வன்முறைக்குப் பின்பும் வெட்கரோசமின்றி தமிழர்களின் தன் மானத்தையே விற்றுத் தமது வர்க்க பாசத்தை ஐ.தே. கட்சி மீது கொட்டி வருபவர்களுக்கு திலக் கருணாரட்ணா போன்ற பேரினவாதிகள் இருப்பது பெரியவிடயமல்ல. தமிழர் கூட்டமைப்பினர் கூட இது பற்றி வாய் திறக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கும் வர்க்கம் ஒன்று இருக்கவே செய்கிறது.

## 2004ம் ஆண்டின் முதல் ஆறுமாதத்தில் நாட்டின் நிலை

2004ம் ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி நிலுவை 22கோடி 30 இலட்சம் அமெரிக்க டெலர் பற்றாக் குறையாய் இருந்தது.

2004ன் முதல் ஆறுமாதத்தில் ஏற்றுமதி 260 கோடி 60 இலட்சம் டொலர்களாயிருந்தது. இது 2003ன் முதல் ஆறுமாதத்துடன் ஒப்பிடுகையில் 9.6மூ வளர்ச்சியாகும் ஆனால் இறக்குமதி அதேகாலப் பகுதியில் 21.3மூ அதிகரிப்பைக் காட்டியது.

இதன் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை(ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கு மிடையேயான வித்தியாசம்) 112 கோடி 60 இலட்சமாய் விளங்கியது. 2003ம் ஆண்டில் இது 70கோடி 10 இலட்சமாகமட்டுமே இருந்தது. அதாவது சென்ற வருட முதல் அரையாண்டை விட 2004ல் பற்றாக்குறை 42 கோடி 50 இலட்சம் டொலர்களால் அதிகரித்துள்ளது.

2004 ம் ஆண்டின் ஆகஸ்ட் முடிவில் எமது நாணயம் 6.2 வீதத்தால் பெறுமதி வீழ்ச்சியடைந்தது அதே சமயம் என்ற ஆண்டு இதே காலப்பகுதியில் ரூபாய் 0.06 வீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது.

## எண்ணெய் விலை அதிகரிப்பில் அரசியலின்பங்கு

அல்ஜீரியா, இந்தோனேசியா, ஈரான், ஈராக், குவேயித், லிபியா, நைஜீரியா, கட்டார், சவுதிஅரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வெனிசூலா, ஆகிய 11 நாடுகளே ஒபெக் எனப்படும் எண்ணெய் வள நாடுகளின் அமைப்பாகும்.

அதன் தற்போதைய தலைவர் பேனோமோ யுஸ்யியா ன்ரோறோ. அவர் இந்தோ னேசியாவின் சக்திவள அமைச்சருமாவார்.

ஒபெக் தலைவரின் கணிப் பின்படி அரசியல் காரணமாகவே பீப்பா ஒன்றின் விலையில் 10 தொடக்கம் 15 டொலர் அதிகரிப்பு காணப் படுவதாகத் தெரிவித்துள் ளார். இந்த, அரசியல் சூத்திரதாரிகள் யார். எண்ணெய் விநியோக ஆதிக்கத்தை தம் கைகளில் வைத்திருக்கும் பல்தேசியக் கம்பனிகளின் உரிமையாளர்களான அமெரிக்க மேற்குல ஏகபித்திய வாதிகளே யாவர் இவர்களாது அரசியல் ஆதிக்க நோக்கங் களுக்கும் அதீத லாபங்களுக்கும் நமது நாட்டு மக்கள் உட்பட மூன்றாம் உலகமக்கள் எண்ணெய் விலை உயர்வால் பலியாகி வருகின்றனர்.

ஒபெக் நாடுகள் தின மொன் றிற்கு 2 கோடி 60 இலட்சம் பிப்பாய் எண்ணெய் வழங்க வேண்டுமென்ற போதும் ஒபெக் தினமொன்றிற்கு கோடி பீப்பாய்களை வழங்குகிறது.

## வறட்சிக்கு நீண்ட காலத் தீர்வு என்ன?

அண்மையில் மாணிக்க கங்கை வறண்டு போயிருந்தது. உடவளவை நீர்த் தேக்கமும் வற்றியிருந்தது. அனுராதபுரம்,புத்தளம்,அம்பாந்தோட்டை குடி நீருக்கு தட்டுப்பாடு நிலவிய நகரங்களாகும்

வடக்கு கிழக்கு உட்பட உலர் வலயம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது. ஊடகங்கள் வறட்சியின் தாக்கத்தை சித்தரிக்கும் படங்களை வழமை போல் பிரசுரித்தன.

வெள்ளமும், மண்சரிவும் உண்மையில் இயற்கை அனர்த்தங்கள் தான். இவற்றின் சமூக பொருளாதாரப் பின்னணி வரலாற்று ரீதியில் நோக்கப்பட வேண்டிய தொன்றாகும். இருப்பினும் தற்போதைய சூழலில் இவை மிகச் சடுதியாய் ஏற்படுவதால் பாதிப்பைக்குறைக்க நடவடிக்கைஎடுப்பதில் சிரமம் உண்டு எனலாம். ஆனால் வறட்சி என்பது அப்படிப்பட்டதல்ல. எங்களுக்கு ஏற்கனவே தெரியும் வறட்சி ஏற்படப்போகிற தென்று.

கடந்த வட கீழ் பருவப் பெயர்ச்சிக்காற்று போதியளவு மழை வீழ்ச்சியைக் கொண்டு வரவில்லை யென்ற போதே உலர் வலயத்தின் வழமையான வறண்ட காலப்பகுதி இவ்வருடத்தில் மோசமடையும் என்பது தெரிந்த விடயம். யூன் யூலை மாதங்களைக் கடந்ததும் நீண்ட வறட்சி ஏற்கனவே தெளிவாகி விட்டது. ஆனால் அதிகாரிகளோ ஆகஸ்ட் மாதம் முடிவடைந்த பின்னரே வறட்சி நிவாரணம் பற்றிய பேச்சை ஆரம்பித்தனர்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் அடுத்த இரண்டு மாதத்திற்கு வரட்சி நிவாரணம் வழங்கப் பணம் இல்லை யென்று தெரிவிக்கப்பட்டது. ஒரு பாரிய அனர்த்தம் இந்த நாட்டின் ஒரு பகுதியில் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் அதிகாரிகளோ அதை புள்ளி விபரமாக வெளியீட்டுக்கொண்டிருந்தனர். வெறும் புள்ளி விபரங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவமாட்டாது.

ஆனால் நமது நாட்டில் மிகவும் வறண்ட பகுதியெனப்படும் பகுதியிற் கூட வருடந்தோறும் ஆயிரம் (1000) மி.மீட்டர் மழை வீழ்ச்சியுண்டு. நமது நாடு வறட்சியைப் பற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை பெற்றுக் கொள்ளும் மழை வீழ்ச்சியை எவ் வாறு முழுமையாகப் பயன் படுத்துவது என்பதே பிரச்சனை யாகும். ஈரலிப்புவலயத்தில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சியின் போது பெரு மழையால் குறித்த சில பகுதிகள் வருடந்தோறும் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்றன. அங்கும் கூட சம்பந்தப்பட்டவர்களேனோ தானோ என்று இருந்துவிட்டு பின்பு வெள்ள நிவாரணம் பற்றிப் புலம்புவார்கள்.

வறட்சியென்பது படிப்படியாகவே தோன்றி இயற்கை அழிவு என்ற நிலைக்குச் செல்கிறது. இதை நிச்சயமாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும். வறட்சி, வெள்ளம் என்பனவற்றை நீண்ட கால அடிப்படையில் தீர்த்துவைப் பதற்காகவே ஏகப்பட்ட திணைக் களங்கள்,அமைச்சுக்கள் என்பன இயங்குகின்றன. அவையாருக் காக செயல்படுகின்றன என்பதே கேள்வி.

உள்ளூராட்சி சபைகள்,மாகாண சபைகள், சமுக சேவைத் திணைக்களம், தேசிய அனர்த்த முகாமைத்துவ மையம், மனித அனர்த்த முகாமைத்துவ கவுன்சில், சமுக சேவை அமைச்சு, நீர் வள அமைச்சு என்று ஏகப்பட்ட அமைப்புக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன. செயலின்மை ஒரு புறம்,நீண்ட காலத்தீர்வு பற்றி எதுவித அக்கறையுமற்ற தன்மைமறுபுறம். வறட்சியான பகுதிகள் என இனங்காணப்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்பற்றிய ஒரு ஆய்வு மேற் கொள்ளப்பட்டவில்லை. தவறான திட்டங்கள் மூலம் ஆறுகள் திசை திருப்புவதும்,நீர்பாசன குடியேற்றம் இடம் பெறுகின்றன. தண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் குடியேற்றத்திட்டங்கள் மூலம் நிலமை மோசமாக்கப்படுகிறது. மழை நீரைச் சேமிப்பது, குளங்களைப்புனரமைப்பது, பயிர்ச் செய்கை முறையில் மாற்றங்களையுக் கொண்டு வருவது உட்பட நீண்ட கால நடவடிக்கை தேவை. முதலாளித்துவ அமைப்பில் உடனடி இலாபமே இலக்கு. மக்கள் நலனில் அக்கறையுடன் செயற்பட இந்த அமைப்பில் சாத்தியமில்லை.

## பலாலி விமான நிலையப் புனரமைப்பு

பலாலி விமான நிலையப் புனரமைப்பு நவீனமயம் என்பதில் இந்தியா உதவி வழங்க முன் வந்ததாக வெளிவந்த செய்தி பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த விமான நிலையத்தை திருத்தி நவீனமயமாக்க இந்தியா முன் வந்த பொழுது நிபந்தனை யொன்றும் விதித்தது. இலங்கை அரசும் இந்திய அரசும் மட்டுமே இந்த விமான நிலையத்தைப் ராணுவரீதியில் பயன்படுத்த வேண்டும் வேறு எவரும் பயன்படுத்த இலங்கை அரசு அனுமதிக்கக் கூடாது என்பதே அந்த நிபந்தனையாகும்.

முன்னைய அரசும் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லாதபடியால் புனரமைப்பு நடவடிக்கை பின்போடப்பட்டது. தற்போதைய அரசும் இந்தியாவின் நிபந்தனையை இது வரை ஏற்றுக் கொள்ளவில்லை.

இவ்வாறிருக்க சென்ற மாதம் ஒக்டேபர் 6ம் திகதி ஜனாதிபதியின் சிபார்சின்படி இலங்கை அரசாங்கம் சுயமாகவே இந்தப்புனரமைப்பு வேலையை மேற்கொள் வதை அமைச்சரவை தீர்மானித்தது.

இதற்காக 36 கோடி ரூபாவை திறைசேரி வழங்க வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச் செலவினத்திற்கு வரி விலக்களிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற் குமிடையான பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்வது பற்றிப் பரிசீலனை செய்து கொள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குழு ஒக்டோபர் 19ம் திகதி இங்கு வந்து சென்றது. அச் சந்திப்பின் போதும் பலாலி விமான நிலைய விவகாரமும் பரிசீலிக்கப்பட்டது. அரசாங்கம் எடுத்துள்ள தானே புனரமைப்பது என்ற முடிவு நடைமுறைப்படுத்துமா? அல்லது கைச்சாத்திடப் படவுள்ள இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் இந்திய நிபந்தனைக்கு அமைய புனரமைப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## மக்கள் யுத்தம் பற்றி தெரியாத பத்திரிகையாளர்

நக்சலைட்டுகள் என்று அழைக்கப்படும் இந்தியாவின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் மக்கள் யுத்தம்) என்ன நோக்கத்திற்காக ஆயுதப் போராட்டத்தை நடத்துகிறது என்பது இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளர் ஒருவருக்கு தெரியாதாம்.

லேக்கவுஸ் நிறுவனத்தின் தமிழ் பிரிவைச் சேர்ந்த அவர் இலங்கை அரச தொலைக்காட்சி 'ஐ' அலைவரிசையில் செய்தி விமர்சனங்களை செய்து வருகிறார்.

'நக்சலைட்டுகள் நோக்கமின்றி ஆயுதப்போராட்டம் நடத்துகின்றனர். அவர்கள் தனி நாட்டிற் காகவோ, சுயாட்சிக்காவோ என்னவென்று தெரியவில்லை' என்று அவர் அவரது செய்தி விமர்சன நிகழ்ச்சியில் அந்த தொலைக்காட்சியில் தோன்றி தெரிவித்தள்ளார்.

கம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவ வர்க்க ஆட்சி யந்திரத்தை தகர்த்து தொழிலாளர் வர்க்க ஆட்சியை ஏற்படுத்தி. சோஷலிஸ சமூகத்தை கட்டியெழுப்பி கம்யூனிஸத்தை படைக்கவே போராடுகிறார்கள் என்பதை கூட தெரிந்து கொள்ளாத அவரெல்லாம் ஒரு பத்திரிகையாளர். அப்படிப்பட்டவர் இதுக்கெல்லாம் தேசிய தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள்.

அவரைப் போன்றவர்களிடம் தமிழ் ஊடகத்துறை சிக்கிக் கொண்டு படாதபாடுபடுகிறது என்று தான் கூற வேண்டும்.

ஊடகவியலாளர்கள் என்போர் உலகவிவகாரங்களையும் உள்ளூர் விடையங்களையும் இடையறாது படிக்கவும் பரந்தளவில் தெரிந்து கொள்ளவும் முயற்சிக்கவேண்டும். கிணற்றுத் தவளைகள் போல் இருந்து கொண்டு எந்த ஒரு விடை...த்தையும் விளங்காமல் செய்தி...க்கக் கூடாது என்பதற்கு மேற்படி பத்திரிகையாளர் ஒரு உதார...

## கடலில் குதிக்கப்போகிறராம் ஜனாதிபதி

எண்ணெய் விலை அதிகரிப்பை பார்க்கும் போது கடலில் குதிக்க வேண்டும் போல் இருப்பதாக இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகாகுமாரண துங்கா பண்டாரநாயக்க தெரிவித் துள்ளார். அநுராதபுரத்தில் நடை பெற்ற வைபவமொன்றில் உரைய ற்றும்போதே அவர் மேற்படி குறிப்பிட் டுள்ளார்.

உலகசந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பதனாலேயே அத்தியா வசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாகவும், எண்ணெய் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

பொருட்களின் விலை அதிகரிப்பால் நமது நாட்டின் ஜனாதிபதி நடுக் கடலில் குதிக்கப்போவதாக தெரி விக்கும்போது சாதாரண மக்களும் கடலில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்றா அவர் எதிர்பார்க்கிறார் என்று எண்ணத்தோன்றுகிறது.

மக்களுக்கு தேவையான அத்திய வசிய பொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு உறுதி செய்யும் பொறுப்பிலிருந்து விலகிக்கொள் வதற்கு வசதியாகவே அவர் கடலில் குதிக்கப்போவதாக தெரிவித்து ள்ளார்.

தவறான பொருளாதார கொள் கையின் காரணமாகவே இன்றைய விலைவாசி உயர்வுகள் ஏற்பட்டு ள்ளனவேயன்றி அவை தற்செ லாக நடைபெறுகின்ற நிகழ்வுகளோ வித்துக்களோ இல்லை.

உலகசந்தையில் எமது கட்டுப்பா ட்டினை மீறி விலைகள அதிகரித் தாலும் உள்நாட்டிலே மக்களின் அத்தியாவசியப்பொருட்களின் விலைகளை பரிபாலிக்கும் பொறுப் பிலிருந்து அரசாங்கங்கள் விலகிக் கொள்ளமுடியாது.

கடலில் குதிப்பது பற்றி ஜனாதிபதி சிந்திப்பதற்கு முன்பு இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணம் யார் என்பதை நாட்டு மக்களுக்கு தெரிவிப்பாரா? உலக வங்கியும் சர்வதேச நாணயநிதியமும் உலக வர்த்தக மையமும் நமது பொருளாதாரத்தின் மீது திணித்து வரும் அழுத்தங்கள் பற்றியும் அவற் றின் நச்சுத்தனமான உள்நோக்கங்கள் பற்றியும் ஜனாதிபதி அறிய முடியாதவரா? இந்த உண்மையை மறைத்து விட்டு கடலில் கூதிப்பது பற்றி கூறுவது மக்களை ஏமாற்றுவதற்கேயாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உவுயர்வுக்கான போராட்டம்
# தொழிலளார் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா?

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளஉயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி கடந்த மாதம் அட்டனில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கூட்டமும் நடைபெற்றது. மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் அட்டன் மல்லிகைப்பூ சந்தியிலிருந்து அட்டன் பஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள நட்சத்திர சதுக்கத்திற்கு ஊர்வலம் சென்றனர். நட்சத்திர சதுக்கத்தில் கூட்டம் நடைபெற்றது.

ம.ம.மு.ஏற்பாட்டில் நடைபெற்ற அவ்வூர்வலத்திலும் கூட்டத்திலும் அதன் அழைப்பை ஏற்று பல தொழிற்சங்கங்களும் அமைப்புகளும் பங்கேற்றன. அதில் புதிய ஜனநாயக கட்சியும் கலந்து கொண்டது. அதன் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா அதில் கலந்து கொண்டதுடன் கூட்டத்தில் உரை யாற்றினார்.

அரசியல் ரீதியாக ம.ம.மு யுடன் பாரிய முரண்பாடுகள் புதிய ஜனநாயக கட்சி கொண்டிருந்த போதும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வென்றெடுக்க ஐக்கியப்பட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதால் புதிய ஜனநாயக கட்சி அப்போராட்டத்தில் கலந்து கொண்டிருப்பதாக அதன் தேசிய அமைப்பாளர் உரையாற்றும் போது தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சங்கங்களுக்கும் தோட்டக்கம்பெனிகளுக்குமிடையிலான கூட்டு ஒப்பந்தம் கடந்த யூன் மாதம் 30 ஆம் திகதியுடன் காலவதியாகிவிட்டது. அதில் தொழிலாளர்களின் சார்பில் இ.தொ.கா , இ.தே.தோ, தொ.சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி ஆகியன கைச்சாத்திட அனுமதிக்கப்பட்டுள்ளன. தோட்டக் கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கைச்சாத்திட அதிகாரமளிக்கப்பட்டது. சம்பள உயர்வு எதுவுமின்றி கூட்டு ஒப்பந்தத்தை நீடித்துக் கொள்ளவே இலங்கை முதலாளிமார் சம்மேளனம் விருப்பம் கொண்டுள்ளது.

அதிகரித்துச் செல்கிற வாழ்க்கைச் செலவை பார்க்கின்றபோது நியாயமான சம்பள உயர்வின்றி தோட்டத் தொழிலாளர்களால் சமாளிக்க முடியாது. நியாயமான சம்பள உயர்வின்றி கூட்டு ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு அனுமதிக்க முடியாது.



புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ..தம்பையா உரை யாற்றினார். அங்கு கலந்துகொண்ட ஒரு பகுதி தோழிலாளர்களையும் கானலம்.

அட்டனில் நடைபெற்று ஆர்ப்பாட்ட ஊர்வாலத்தில் கூட்டத்தில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அனுமதி பெற்றுள்ள அந்த மூன்று தொழிற்சங்கங்களை விட ஏனைய தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புகளும் கலந்து கொண்டன.

அத்துடன் பல அரசசார்பற்ற நிறுவனங்கறுளும் தோட்டத்தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி பல வெகுஜனப் போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தன.

புதிய ஜனநாயக கட்சி தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி போஸ்டர் இயக்கங்களை முன்னெடுத்தது.

அட்டன் போராட்டத்தை அடுத்து தேசிய அமைப்பாளர் குறிப்பிட்டதாக தோட்டக்கம்பெனிகள் கூறுவது வழமை. தற்போது தோட்டக்கம்பெனிகள் தேயிலை றப்பர் என்பன வற்றிலிருந்து மட்டுமன்றி வேறு வழிகளிலும் லாபம் சம்பாதித்து வருகின்றன. தோட்டங்களிலுள்ள மரங்களை வெட்டி விற்கின்றன, நீர், கல், மண் போன்றவற்றையும் விற்கின்றன. பெருந்தோட்டங்களில் பூந்தோட்டங்கள் போன்றவற்றையும் செய்து லாபம் சம்பாதித்து வருகின்றன. தோட்டங்களில் மாணிக்கக்கல் அகழ்வதற்குக் கம்பெனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தோட்ட முகாமையாளர் ஒருவருக்கு மூன்றரை லட்சம் ரூபா மாதாந்த சம்பளமாக வழங்கப்படுகிறது. தேயிலையின் விலை உலகச்சந்தையில் தொடர்ந்து அதிகரித்த வண்ணமே இருக்கிறது.

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தோட்டங்கள் நட்டத்தில் இயங்வது. அட்டன் போராட்டம் மேலும் ஐக்கியப்பட்ட போராட்டமாக விரிவுபடுத்தப் பட வேண்டும் என்று புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்துகிறது தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தும். போது மட்டுமே தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவ குவதாக தோட்டக்கம்பெனிகள் காட்டும் கணக்குகள் நம்பகத்தன்மை யற்றவை. அதனை ஆராய்ந்து பார்ப்பதற்கு சட்டப்படி எவ்வித ஏற்பாடுகளும் இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்க முடியாவிட்டால் தோட்டக்கம்பெனிகள் தோட்டங்களை விட்டு வெளியேற வேண்டும். தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கோரி நடத்தப்படும் ஐக்கியப்பட்ட போராட்டங்களை ம.ம.மு உறவு வைத்திருக்கும் ஐ.தே.கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு பயன்படுத்துவதை புதிய ஜனநாயக கட்சி ஏற்றுக் கொள்ளாது என்பதும் சுட்டிக்காட்ட ப்பட்டது. ஐ.தே. கட் சியின் தொழிற்சங் கமான இ.தே. தோ.தொ.சங்கம் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வருகின்ற சங்கமாகும். அச்சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதபோது ஐ.தே.கட்சி தோட்டத்தொழிலாளர்கள் நடத்தப் போராட்டத்தில் கலந்து கொள்வது வெறும் பம்மாத்தாகும். தோட்டங்களை தனியார் கம்பெனி களுக்கு கையளித்தது ஐ.தே.கட்சியே ஆகும். தோட்டக் கம்பெனிகளின் இன்றைய ஏதேச்சதிகார நிலைமை க்கு ஐ.தே.கட்சியே வழி வகுத்தது. அதன் கொள்கையையே இந்த அர சாங்கம் தொடர்கிறது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவிடயத்தில் அரசாங்கம் எதனையும் செய்ய முடி யாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வரவு செலவு திட்டத்தில் சம்பள உயர்வை பெற்றுத்தரப்போவதாக ஜே.வி.பிகூறுகிறது. வரவு செலவு திட்டத்தில் சம்பளஉயர்வு வழங்கப்பட வேண்டும் என்று பணிப்புரையை அரசாங்கம் வழங்கினாலும் இதற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய கட்டாயம் தோட்டக்கம் பெனிகளுக்கு இல்லை. அதனால் வரவு செலவு திட்டத்தினாலும் எதுவும் நடக்கப்போவதில்லை.

கூட்டு ஒப்பந்தத்தை புதுப்பித்து 25 சத வீத சம்பள உயர்வை இ.தொ.கா பெற்றுத்தரும் என்று சில இ.தொ.கா தலைவர்கள் தெரிவிக்கின்றனர். இதுவரை நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் எவ்வித இணக்கமும் காணப்படவில்லை என அவர்களே கூறுகின்றனர். அவ்வாறெனின் 25 சதவீத சம்பள உயர்வை எவ்வாறு பெற்றுக் கொடுக்க முடியும்.

இதை விட ம.ம.மு முன்னணி தோட்டக்கம்பெனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக தெரிவித்து வருகிறது.அதாவது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தகுதி பெற்றுள்ள தொழிற்சங்கங்களை விட அதிக எண்ணிக்கையிலான தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தில் சம்மந்தப்படுத்தப்படுவதில்லை. அவற்றின் அபிப்பிராயங்கள் கேட்கப்படுவதுமில்லை. அதனால் எல்லோருடைய அபிப்பிராயங்களும் கேட்கப்பட்டு கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கும் நிபந்தனைகள் சேர்க்கப்படுவதுடன் நியாயமான சம்பள உயர்விற்குப் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று கோரி நீதிமன்றம் செல்லப் போவதாக அது கூறுகிறது.

அவ்வாறான நிவாரணத்தை பெறுவதற்கு சட்டத்தில் இடமிருப்பதாகத் தெரியவில்லை. அதனால் அந்நடவடிக்கை ஒரு எதிர்ப்பு நடவடிக்கை யாக மட்டுமே இருக்கும்.

தோட்டக்கம்பெனிகளை இணங்க வைக்க நியாயமான சக்தி வாய்ந்த வெகுஜனப் போரட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே சிறந்த வழியாகும்.

அதற்கு பழைய தொழிற்சங்க வழிமுறைகள் உதவாது. அத்துடன் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஆளும்வர்க்கத்தினருடன் கைகோர்த்துக் கொண்டு உறவை வைத்துக் கொண்டு இருக்கும் தொழிற்சங்கங்களால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்திற்கு நேர்மையான தலைமையை கொடுக்கமுடியாது எனவும் குறிப்பிட்டார்.


## தோழர் ஜோன்சனுக்கு அஞ்சலி

ஒட்டோபர் 22ஆம் திகதி 45 வயதில் இயற்கை எய்திவிட்ட சாமுவெல் ஜோன்சன் 1979 முதல் புதிய ஜனநாயக கட்சியின் (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது) என்ற பெயரில் இயங்கிய போது) அங்கத்தவராக இருந்தார். 1981முதல் 1991 வரை புதிய ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச கமிட்டியில் பதில் செயலாளராக செயற்பட்டார். அவர் கட்சியின் அங்கத்தவராக இருந்தகாலத்தில் மிகவும் கறாரான பொதுவுடமை வாதியாக செயற்பட்டார். அவர் திருமணம் செய்து கொண்ட பிறகு கட்சியிலிருந்து செயற்பட முடியாது குடும்பரீதியான நிர்ப்பந்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உட்பட்ட போதும் கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கத் தவறவில்லை. கட்சியுடனான தொடர்புகளையும் வைத்திருந்தார்.

அவர் திருமணம் முடித்த பிறகு கட்சியின் அங்கத்தவராக இருக்க முடியாது போனதுடன் செயற்பாடற்றவராகி இருந்தார். இதுவும் அவர் பிற்காலத்தில் ஒரு மதநிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவை அல்ல.

எனினும் கட்சியிலிருந்து செயற்பட்ட காலத்தில் பல வெகுஜனக் போராட்டங்களுக்கு தலைமைதாங்கி செயற்பட்டார். சூழலுக்கும் மக்களின் இருப்பிற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் மேல்கொத்மலை நீர்மீன் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 1980 களில் தலவாக்கொல்லை பகுதிகளில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட எதிர்ப் பியக்கங்களில் முன்னணியில் நின்றுசெயற்பட்டார். மேல்கொத்மலை திட்டத்திற்கு எதிரான துண்டுப்பிரசுரம், போஸ்டர், கையெழுத்து இயக்கங்களுக்கு தலைமை தாங்கியவர்களில் ஜோன்சன் முக்கியமானவராவர்.

1980 களில் தொண்டர் ஆசிரியர்களாகவிருந்த 402 மலையகத்தமிழ்



இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து மலையகமெங்கும் நடத்தப்பட்ட போராட்டங்களில் முன்னணியில் இருந்தவராவர். 1986 ஆம் ஆண்டு பூண்டுலோயாவில் இடம் பெற்ற சிங்கள-தமிழ் இனமோதலின் பின்னர் இனஐக்கியத்தையும், சமரசத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது அவரும் கைதுசெய்யப்பட்டு பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் மலையகத்தமிழ் மக்கள் மீதிருந்த அடக்குமுறைகளை இனரீதியானதும் வர்க்க ரீதியானதுமான அடக்குமுறைகள் என வகைப்படுத்தியதுடன் அவற்றுக்கான தொழிலாளர் வர்க்க அரசியலே விடிவு தரும் என்பதில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டார்.

அரசியல் விஞ்ஞான பட்டதாரியான அவர் ஒரு சிறந்த ஆசிரியரும் அதிபருமாவார்.

அவர் பூண்டுலோயா தமிழ் மகாவித்தியலாயம் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராக கடமையாற்றினார். அவர் ஒரு சாதாரண கல்விதுறைசார்ந்தவராக செயற்படாமல் சமூக நலன்சார் கல்வியியாளராவர். நேர்மை தவறாது பணிபுரிந்தவர்.

இளம் வயதில் அவரின் இறப்பு ஈடு செய்யமுடியாததாகும். அவருக்கு புதிய பூமி தனது அஞ்சலியை செலுத்துகிறது.

## அம்மனச்செல்வியும் அடியும்

செம்மனச் செல்வி என ஆள்தட்டும்
அம்மனச் செல்வியின்
அம்மா
புண்மனச் செல்வியும்
அப்படித்தான்
அநியாயம் செய்தாள்
"பாண் போலிங்" என்று சொல்லி
"பசி போலிங்கில்" நிற்கவைத்து
நடக்கவும் முடியாமல்
நஞ்சைக் குடித்து
நடுத் தெருப் பிச்சையாகி
போனது ஒரு வரலாறு
இந்த
அம்மனச் செல்விக்கும்
அணையடைக்கும் நேரம் வர
ஒடி ஒழிந்த தனால்
ஊரெல்லாம் வெள்ளமாகி
ஒரே பிணநாற்றம்

இயற்கை ஒரு புறம்
இந்தியா மறு புறம்
அநியாயத் தலைவன்
அமெரிக்கா மறு புறம்
தப்பையே வெள்ளமாகி
இலங்கைத் தீவை
இல்லாமல் அழிக்க
சிவன் என்று எண்ணி
சிவப்பு சட்டை ஐயாவுக்கு
மாவை சேர்க்காத
மந்திரி பிட்டை அள்ளி நீட்டி
அணையை அடைக்கச் சொல்ல
அவன்
இனவாதம் பேசி
எங்கோ படுத்துறங்க
அமெரிக்க மந்திரியும்
அடுத்த நாட்டு புண்திரியும்
அடிக்கவென பிரம்போங்க
ஐயா சரணமென்று
அவன் காலில் இவர்கள் விழ
ஓங்கி அடித்தது
ஊரில் எங்கும் விழ
முழுதும் இழந்து
மூத்திரமும் தான் சொட்ட
அடித்தவனையும்
அடிக்க வைத்தவனையும்
அறியாமல்
ஆளை ஆள் முறைக்க
தூர இருந்து சிரிக்கும்
அம்மனச் செல்வியும்
ஐயாமாரும்.
நாளையும் பிரம்பெடுத்து
நமைக்கெல்லாம் அடிப்பாரோ

பத்தனை. ஆர். ஹிர்சான் -

## லங்கா தீப பத்திரிகையின் விஷமத்தனம்!

கடந்த மாதம் (10-09-2004) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை லங்கா தீப என்னும் சிங்களப் பத்திரிகையில் மலையகத்தில் இரண்டு தீவிரவாத அமைப்புகள் என்ற தலைப்பில் கட்டுரையொன்று வெளியிடப் பட்டுள்ளது. அதில் புதிய மலையகம், புதிய பண்பாட்டு அமைப்பு ஆகிய இரண்டு அமைப்புகள் புலிகள் இயக்க ஆதரவுடன் ஆயுத நடவடிக்கைகளை எடுப்பதாக எழுதப்பட்டுள்ளது,

அக்கட்டுரை வெளிவந்ததை அடுத்து சி.ஐ.டியினர் என்று கூறிக்கொண்டு சிலர் புதிய பண்பாட்டு அமைப்பின் தலைவரை விசாரித்துள்ளனர். புதிய மலையகம் அமைப்பினரையும் விசாரிக்கவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். அவ்விரு அமைப்புகளும் லங்காதீபவின் அச்செயலுக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளன. அவற்றின் கோபத்தையும் வெளிப்படுத்தியுள்ளன. நாட்டில் இன்று பேரினவாதம் தலைவிரித்தாடிக் கொண்டிருப்பதற்கு சிங்கள ஊடகங்களே காரணம். அவற்றின் பேரினவாத போக்கினாலேயே நாடு இன்றும் இனவாத அழிவிலிருந்து மீளமுடியாமல் இருக்கிறது. வடக்கு கிழக்கு அழிக்கப்பட்டு விட்டது. அதே நிலைமை மலையகத்திற்கும் ஏற்படவேண்டும் என்றே லங்கா தீப போன்ற பேரினவாதப் பத்திரிகைகள் விரும்புகின்றன. அதன்விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் பொலிசாரும், புலனாய்வுத்துறையினரும் அரசாங்கமும் செயற்பட முற்பட்டுள்ளனர். சிங்கள ஊடகங்க ளின் பிழையான தகவல்களினால் வழிநடத்தப்பட்டு மலையகத்திலும் அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அங்கு ஜனநாயகமும் இயல்புவாழ்க்கையும் மறுக்கப்படும் போது இயல்பாகவே தீவிரவாதத்திற்கு வழி ஏற்படும்.

தொடர்ச்சி 8ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පුමි Puthiya Poomi
சுற்று11 நவம்பர் 2004 பக்கம்12 விலை 12/- சுழற்சி 74

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## நீதித்துறையும் நீதியரசர் கூற்றும்.

சேவையிலிருந்து ஓய்வுபெறும் உயர் நீதி மன்ற நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன் இலங்கையின் நீதித்துறைக்கு நல்லதொரு எதிர்காலம் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் இந்நிலை தொடருமாயின் மக்கள் நீதித்துறையில் நம்பிக்கை இழந்து மாற்று வழிகளைக் தேடிக்கொள்ள வேண்டிவரும் என்றும் எச்சரித்துள்ளார். அவரது பதவிக்காலத்தின் இறுதிநாளான கடந்த 19ஆம் திகதி நீதிமன்ற அமர்விலிருந்து இலங்கையின் நீதித்துறை பற்றி சிறிய குறிப்பை தெரிவித்துவிட்டு ஓய்வு பெற்றுள்ளார்.

"நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது அதிகமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. நீதிமன்ற நடவடிக்கைகள் மீது அழுத்தங்களும் நிர்ப்பந்தங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த அழுத்தங்களும் தனிமனித எண்ணங்களும் தனிப்பட்டதப்பெண்ணங்களும் தனிப்பட்டவிருப்பு வெறுப்புகளும் நீதிமன்ற தீர்ப்புகளுக்குள் தலையீடு செய்கின்றன. இது நீதித்துறையின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. இந்த வழிமுறைகளை மாற்றாவிட்டால் நீதியை நிலைநாட்டு வதற்கான மாற்றுவழிகளைப் பற்றி மக்கள் சிந்திக்க வேண்டிவரும் என்றும் அவர் குறிப்பீட்டுள்ளார்.

2001 ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி அவர் உயர்மன்ற நீதியரசராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டநேரத்தில் ஆற்றிய உரையும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. அவர் அந்த உரையைத் தமிழ் மொழியில் ஆற்றினார். தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை அவர் கோடிட்டுக் காட்டினார்.

அவர் நீதித்துறையில் செய்யப்படுகின்ற தலையீடுகள் பற்றியே கவனம் செலுத்தியுள்ளார். அவருடைய விமர்சனங்கள் இலங்கையின் நீதித்துறை பற்றி சந்தேகங்களை கிளப்பியுள்ளன. இலங்கையின் நீதித்துறை பற்றி சந்ததேகங்களை கிளப்பும் பல சம்பவங்கள் நடந்துள்ளன என்பதுடன் அவை ஏற்கனவே பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராகப் பல விமர்சனங்கள் முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டன. அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனை தடு ப்பதற்காகவே 1999 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நீதிமன்றத்திற்கு அருகில் வாகன ஹார்ன் சத்தத்தை எழுப்பினார் என்பதற்காக ஒரு பிரதியமைச்சர் மீது நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. அக்குற்றத்தை சாட்டிய அநுராதபுர நீதவான் அவரது பதவியை இராஜினாமா செய்யும்படி கேட்கப்பட்டார். அழுத்தங்களின் காரணமாக அவர் பதவியை இராஜினாமா செய்தார். அண்மையில் வெல்லவாய நீதவான் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக பிடி ஆணை பிறப்பித்தார் என்பதற்காக அவர் மீது நீதிச்சேவை ஆணைக்குழு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளது. இது ஒருவகை தலையீடாகும்.

இலங்கை கிரிக்கட் சபை தலைவர் திலங்கசுமதிபாலாவிற்கு எதிரான வழக்கில் அவரைப் பிணையில் விடுதலை செய்த கொழும்பு நீதவான் ஒருவர் சட்டத்திற்கு முரணாக செயற்பட்டதாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதாவது அவர் திலங்கசுமதிபாலவினால் செல்வாக்கு செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஒரு சந்தேகநபரின் மனைவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக மாகோ நீதவானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. வீட்டு வேலைக்காரப் பிள்ளையை பாலியில் வல்லுறவிற்குட்படுத்தியதாக ஒரு மேன்முறையிட்டு நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக குற்றஞ் சுமத்தப்பட்டதையடுத்து அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். இவை இன்னொருவகையில் நீதித்துறையின் சீர்கேடுகளை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு தலையீடுகளும், சீரழிவுகளும் இருக்கும்போது நீதித்துறை சுதந்திரமாக இயங்க முடியாது. நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதாக முதலாளித்துவ அறிஞர்கள் கூறுவதுண்டு. முதலாளித்துவ பாராளுமன்றங்கள் இயற்றும் சட்டங்களுக்குட்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் நிர்வாகத்துறையினரின் நடவடிக்கைகளை ஒழுங்கும்படுத்தும் ஆளும் வர்க்க நிறுவனம் என்ற வகையிலேயே நீதித்துறை இயங்குவதுண்டு. பெரும்பாலான உழைக்கும் சாதாரண மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்களை பாராளுமன்றம் இயற்றினாலும் அதற்கு எதிராக நீதித்துறை செயற்பட முடியாது. அச்சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிர்வாகத்துறையில் நீதித்துறை சில தலையீடுகளை செய்தாலும் அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதில்லை. இது மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகளின் பார்வை.

முதலாளித்துவ வர்க்க சமூக அமைப்பில் நீதித்துறை, சட்ட, நிர்வாகத் துறைகளிலிருந்து சுதந்திரமாக இயங்குவதாக காட்டப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதுண்டு. அதனாலேயே ஐக்கிய இராச்சி நீதியரசர் டெனிங் பிரபு "நீதி புரியப்படுவது மட்டுமன்றி நீதி புரியப்படுவதாகக் காட்டப்படவும் வேண்டும்" என்று கூறியுள்ளார். ஆனால் நடைமுறையில் நீதித்துறையிலிருந்து வெளிப்படும் தகவல்களிலிருந்து நீதிமறுக்கப்படுவதாகவே காட்டப்படுகின்றன.

அத்துறை பிற செல்வாக்கிற்குட்படும்போதும் சீரழிவுகளுக்குட்படும் போதும் அந்த வரையறுக்கப்பட்ட நீதி புரியப்படவும் இயலாது நீதி புரியப்படுவதாக காட்டப்படவும் இயலாது. அதனையே நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார். அந்த வரையறுக்கப்பட்ட நீதித்துறை சந்தேசிக்கப்படுப்போது மக்கள் கிளர்ந்தெழுந்து மாற்றுவழிகளை தேடிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் ஒரு தீவிர ஜனநாயக வாதியோ சீர்திருத்தவாதியோ அல்ல. அவர் ஒரு ஆன்மிகவாதியாக இருந்தபோதும் நீதித்துறையினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அவ்வளவு தான். அவர் வழங்கிய சில வழக்கு தீர்ப்புகளின் விளைவாகப் பல தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர். அவற்றை சட்டத்திற்குட்பட்டு செயற்பட்டதாக அவர் நியாயப்படுத்தலாம்.

எனினும் அவ்வாறான ஒருவரிடமிருந்து நீதித்துறை பற்றி வெளிவந்திருக்கும் கருத்துக்களின் இரண்டு செய்திகள் இருக்கின்றன. ஒன்று நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டும் இல்லா விட்டால் மக்கள் தலையிட்டு நீதித்துறையை மாற்றுவார்கள் என்ற எச்சரிக்கை. இரண்டாவது நீதி மறுக்கப்படும் போது மக்கள் மாற்றுவழியை நாடவேண்டிய நிலை ஏற்படும் என்பதாகும்.

மக்கள் அரசியல் கட்சிகளுக்கு வாக்களிக்கும் இயந்திரங்களாக மட்டுமல்லாமல் நீதித்துறை செயற்பாடுகளை அவதானித்து நீதியை பெற்றுக் கொள்ளவும். நீதியை உறுதி செய்து கொள்ளவும் போராடவேண்டும் என்பதையே நாம் வற்புறுத்துகின்றோம். வர்க்க சமூகத்தில் நீதித்துறை பூரண சுதந்திரமாக மக்கள் சார்பானதாக இயங்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. வரையறைக்குட்பட்டு புரியப்படக் கூடிய நீதியை மறுப்பதை பார்த்துக் கொண்டு மக்கள் சும்மா இருக்கக் கூடாது என்பதே எமது விருப்பம்.

-ஆசிரியர் குழு-

# தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கு சந்திரிக்காவின் அர்த்தமற்ற அணுகுமுறை

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன.ஆனால் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுகான முயற்சி என்பது இம்மியளவும் நகரவில்லை. எவ்வளவிற்கு பேச்சுவார்த்தை பற்றிக் கூறினாலும் கடந்த ஆறுமாதங்களைப் போன்று பேச்சுவார்த்தையும் இல்லை யுத்தமும் இல்லை என்ற நிலையில் காலத்தை இழுத்தடித்துச் செல்வதிலேயே ஜனாதிபதியின் முயற்சி இறங்கி நிற்கின்றது.

புலிகள் இக்கத்துடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் விடயத்தில் ஜனாதிபதி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது வழக்கமாகி விட்டது. ஒன்றைக் கூறிவிட்டு பின்பு அதற்கு நேர்மாறான கருத்தை எவ்வித தயக்கமும் இன்றி வெளியிடுவது ஜனாதிபதிக்கு கைவந்த ஒரு கலையாகியும் இருந்து வருகிறது.

புலிகள் இயக்கம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் பேசுவதற்கு முன்வந்த ஜனாதிபதி சிறிது காலத்திற்குள்ளாகவே இறுதித் தீர்வு பற்றியும் பேச வேண்டும் என மற்றொருவிடயத்தை முன்வைத்தார். மேலும் சில நாட்கள் சென்ற பின் பேச்சுவார்த்தை மேசைக்கு அரசாங்கத்தின் மாற்று யோசனைகள் கொண்டு செல்லப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் பின் ஜனாதிபதி சகல கட்சிகளையும் கொண்ட சமதான ஆலோசனைச் சபை ஒன்றை ஆரம்பித்து பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் எனக் கூறினார். சமாதான ஆலோசனைச்சபை கூட்டப்பட்ட போதிலும் அதில் பிரதான எதிர்க்கட்சிகள் எதுவும் பங்கு கொள்ளவில்லை.

இவ்வாறு ஒவ்வொன்றைக் கூறிக் கொண்டே அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவாரத்தையைத் தொடங்குவதை இழுத்தடித்துச் செல்கிறது. இத்தகைய இழுத்தடிப்புக்குப் பின்னால் பல்வேறு விடயங்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இருந்து வருகின்றன என்ற உண்மையைக் கண்டு கொள்வது அவசியமானதாகும்.

பேச்சுவார்த்தையைப் புலிகள் இயக்கத்துடன் ஜனாதிபதியும் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கமும் தொடங்குவதற்கு தாயராக இல்லாமைக்கு அடிப்படைக் காரணம் அவர்களது பேரினவாத நிலைப்பாடாகும். கால் நூற்றண்டுகால கொடிய யுத்தத்திற்குப் பின்பும் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கு பேரினவாத முகாம் தயார் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் ஒரு சுயாட்சித் தீர்வை சமஷ்டி அடிப்படையிலோ அல்லது வேறு எந்த வகையிலோ வழங்குவதற்கு தென்னிலங்கையின் இரண்டு பெரிய ஆளும் வர்க்கக் கட்சிகளும் தயாரில்லாத நிலையே இன்று வரை நீடிக்கின்றது. அது மட்டும்மின்றி மூன்றாவது பெரிய சக்தி எனத் தம்மை அழைத்துக் கொண்டு பாரளுமன்றத்தில் முப்பத்தொன்பது ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஜே.வி.பி இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளையும்விட அப்பட்டமான பேரினவாத வெறியைக் கக்கி வருகின்றது.

இத்தகைய பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தாம் தொடுத்த பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி விடலாம் என்றே கனவு கண்டு வந்தனர். ஆனால் விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடுக்காத போராட்டத்தால் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் உள்நாட்டிலும் உலக அரங்கிலும் கவனத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றுக் கொண்டன. நோர்வேயின் அனுசரனையுடனான பேச்சுவார்தை தேசிய இனப்பிரச்சனையின் பூதாகாரத்தையும் அது தீர்க்கப்பட வேண்டிய தன்அவசியத்தையும் மேலும் வெளிச்சமிட்டுக் காட்டி நின்றன. இத்தகைய சூழலில் முன்னைய காலங்களைப் போன்று போலித்தனமான ஒப்பந்தங்களைச் செய்வது பின்பு அவற்றை மறுத்து நிராகரிப்பதும் என்ற கடந்த 50வருடகால ஏமாற்று நாடகத்தை இப்போது நடாத்த முடியாத நிலைக்கு பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தள்ளப்பட்டுள்ளன. இனி வரப்போகும் பேச்சுவார்த்தைகளில் அவ்வறான நடைமுறையினைத் தொடர முடியாது என்பதை விளங்கிக் கொண்டமையினாலேயே பேச்சுவார்த்தை மேசைக்குக் செல்வதற்கு பொதுவான பின்னடிப்பைச் செய்துவருகின்றன.

தற்போது ஜனாதிபதி சந்திரிக்கா நடைமுறையில் பேச்சுவார்த்தைக்குச்

**-வெகுஜனன்-**

சென்று ஒரு கண் துடைப்பைக் கூடச் செய்ய முடியாத அளவுக்கு பல்வேறு நிர்ப்பந்தங்களையும் நெருக்கடிகளையும் எதிர் கொண்டு நிற்கின்றார். அதேவேளை முற்றுமுழுதாகப் பேச்சுவார்த்தையை நிராகரிக்க முடியாத இக்கட்டலிலும் இருந்து வருகின்றார். பேச்சு வார்த்தைக்குச் செல்வதையும் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான யோசனைகளை அடிப்படையாகக் வைத்து பேசப்படுவதையும் ஜே.வி.பி. [illegible] ஹெல

> ஐக்கிய தேசியக் கட்சி,
> சிறிலங்கா சுதந்திரக்கட்சி
> ஜே.வி.பி கட்சி ஆகிய
> மூன்று பிரதான ஆளும்
> வர்க்க கட்சிகளும்
> பேரினவாத நிலைப்பாட்டை
> வெவ்வேறு நிலைகளில்
> கடைப்பிடித்தே வருகின்றன.
> இந்நிலை நீடிக்கும் வரை
> தேசிய இனப்பிரச்சினைக்கு
> அர்த்தமுள்ள தீப்வைக்
> காண முடியாது.

உறுமயவும் கடுமையாக எதிர்த்து வருகின்றன. அரசாங்கத்தைத் தாங்கி நிற்கும் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யைக் கடந்து எத்தகைய முடிவையும் எடுக்கமுடியாத நிலைமையில் ஜனாதிபதிக்கு முன்னால் உள்ள ஒரே வழி அதை இதைச் சொல்லி இழுத்தபடிப்பைச் செய்வது தான். இதேவேளை தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் அரசியலமைப்பை மாற்றும் வழிமுறைகளைக் கண்டறியவும் அதுவும் சாத்தியப்பாடது போனால் ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கவும் வியூகங்களை வகுக்க வேண்டிய நிலையிலும் ஜனாதிபதி இருந்து வருகின்றார்.

இந் நிலையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்கு தாமதியாது போக வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி உரத்தகுரலில் பேசி வருகின்றது. இதனை அக்கட்சி இதய சுத்தியுடன் கூறவில்லை என்பதை அரசியல் விபரமறிந்த அனைவரும் நன்கு தெரிந்து கொள்வர். இவ்வாறு பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு வற்புறுத்துவதற்கு காரணம் அரசாங்கத்துக்குள் நெருக்கடியை ஏற்படுத்தும் உள்நோக்கம் இல்லை என ஐ.தே. கட்சி சத்தியம் செய்ய முன்வரமாட்டாது. ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சி முரண்பாடு உள்ளுர வளர்ந்து வருகின்றது.அதுமேலும் விரிவடைந்து பெரும் பிளவாகி அரசாங்கம் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தையே ஐக்கிய தேசியக் கட்சி ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றது. அதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியைப் பார்த்து பேச்சுவார்த்தைக்குப் வற்புறுத்துகின்றது. ஆனால் அந்தப் பொறிக்குள் அகப்பட்டாமல் ஜனாதிபதி வெளியிலேயே இருந்து வருவதில் கண்ணாக உள்ளார். ஐ.தே.கட்சியின் காய்நகர்த்தலை வெட்டி ஆடும் விதமாக ஜனாதிபதி சமாதான ஆலோசனைச் சபை என்பதற்குள் அவர்களை இழுத்துக் கொள்ள எத்தனித்தார். ஆனால் அதற்குள் அகப்பட்டாது ஐ.தே.கட்சி வெளியே நின்று கொண்டது.

இவற்றுக்கும் அப்பால் ஜனாதிபதி இந்தியாவை நம்பியிருக்கின்றார்.முன்பு அமெரிக்காவை நம்பி சமாதானத்திற்கான யுத்தத்தை நடாத்தி மண் கவ்விக் கொண்ட பட்டறிவினால் போலும் அமெரிக்காவைமுற்று முழு தாக நம்பத் தாயரில்லாத அதே வே ளை பகைக்கவும் முடியாத நிலை யில் உள்ளார். எனவே இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றார். இந்தியாவின் நெருங்கிய ஆதரவைப் பலமாகக் கொண்டிருப்பதால் அமெரிக்காவினதும் மேற்குலக நாடுகளினதும் பக்க பலத்துடன் புலிகளை பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்து சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருப்பது போல் தெரிகின்றது. ஐ.நா. சபையில் ஆற்றிய உரையில் தான் சமாதானதிற்கும் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருந்து வருவதாகவே கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதியும் ஐ.ம.சு.மு.அரசாங்கமும் என்ன தான் தந்திரோபாயங்களைக் கொண்டிருந்த போதிலும் அவற்றின் காய் நகர்த்தல்கள் அர்த்தமற்ற வெறும் செயல்களாகவே சென்று கொண்டிருக்கின்றன. இதில் காலத்தை வீணடித்து கொண்டிருப்பதால் பயன் ஏதும் ஏற்படமாட்டது. "கம்பத்தில் ஏறி நின்று எவ்வளவு சாகசம் காட்டினாலும் காசு வாங்க கீழே தான் இறங்கி வரவேண்டும்" என்பது ஒரு முதுமொழி. அது போன்றே ஜனாதிபதியும் அரசாங்கமும் எதை எதைக் கூறிக் காலத்தை இழுத்தடித்தாலும் இறுதியில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்றே ஆக வேண்டும். அதனை தேசிய சர்வதேசிய சூழலும் அரசியல் யதர்த்த நிலைமைகளும் வற்புறுத்தி நிற்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கம் பந்தை அரசாங்கப் பக்கம் எறிந்து விட்டு காத்து நிற்கிறது. அப் பந்தை அரசு எவ்வாறு திருப்பி அடித்து எத்திசைக்கு அனுப்பப்போகின்றது என்பதை அவர்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். அவர்கள் மட்டுமன்றி சமாதானத்தையும் அரசி யல் தீர்வையும் வேண்டி நிற்கும் அனைவரும் ஜனாதிபதியின் அடுத்த கட்ட நகர்வை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.எனவே ஜனாதிபதி சந்திரிக்கா இதுவரை மேற்கொண்ட அர்த்தமற்ற அணுகு முறைகளைக்கை விட்டு துணிவுட னும். திறந்த மனதுடனும் தூரநோக்குடனும் பேச்சு வார்த்தைக்கான கால நேரத்தை வரையறை செய்து நோர்வே அனுசரனையாளர்களின் ஊடே பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். புலிகள் இயக்கத்தின் யோசனைகளை பேச்சு வார்த்தைக்கு எடுக்கும் அதே வேளை அரசாங்க த்துடன் மாற்று யோசனைகளையும் விட்டுக் கொடுப்பு புரிந்துணர்வுடன் முன்வைத்து ஒரு இடைக் கால நிர்வாகக் கட்டமைப்புக்கான இனக்கப் பாட்டுக்கு வர வேண்டும். அதனையே அனைத்து மக்களும் விரும்புகிறார்கள்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தேசியத்தை வலுப்படுத்துவது பற்றி

-இமயவரம்பன்-

## தமிழ்த் தேசிய அக முரண்பாடுகளைக் கையாள்வது எப்படி?

தமிழ்த் தேசியத்தை வலுப்டுத்துவது என்பது தமிழ்த் தேசிய இனத்தின் அகமுரண்பாடுகளைச் சரியாகக் கையாளுவதைக் குறிக்கும். எனவே தமிழ்த் தேசியத்தை எந்த அடிப்படையில் வலுப்படுத்துவது என்ற கேள்வி முதன்மை பெறுகிறது. தமிழ்த் தேசியவாதத்தினுள் உள்ள பல வேறு ¿மனைப்பக்களில் எது மேலோங்கும் என்பதே அந்த அடிப்படையைத் தீர்மானிக்கும். தமிழ்த் தேசிய வாதத்துக்குள் மரபு வாதப்போக்கொன்று நீண்டகாலமாகவே இருந்து வந்து ள்ளது. ஆறுமுகநாவலருடன் தமிழ்த் தேசிய வாதத்தை உறவுபடுத்து வதற்குரிய வாதங்கள் பல முன்வைக்கப்பட்டாலும், தமிழ்த் தேசியவாதம் சென்ற நூற்றாண்டிலிருந்தே தன் அரசியல் அடையாளத்தை விருத்தி செய்துள்ளது. இதன் ஒரு பகுதி மரபுவாதம், சாதியம் என்பன வற்றை வலியுறுத்தும் ஒரு சைவ கிறிஸ்துவ வேளாள உயர் குடியினரது நலன்சார்ந்த போக்காகப் பொன்னம்பலம் ராமநாதன் காலத்தொட்டு ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ். ஜே.வி.செல்வநாயகம் வழியாக வளர்ந்தது. மறுபகுதி ஏகாதிபத் திய எதிர்ப்பு, சமூகச்சீர்திருத்தம் என்பனவற்றை வற்புறுத்திய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் வழியாக இலங்கைத் தேசியம், இடதுசாரிச் சிந்தனை என்பனவற்றையொட்டி வளர்ந்தது.

முன்னைய போக்கு தனித் தமிழீழம் என்ற கோரிக்கையை 1976ல் எட்டிய போதும், அதன் உண்மை யான நோக்கம் சிங்களப் பேரின வாத தரகு முதலாளி வர்க்கத்துடன் சமரசமும் ஏகாதிபத்திய அனுசர ணையுடனான அதிகாரப் பகிர்வுமாகும். பின்னைய போக்குத் தமிழ்த் தேசிய இன அடையாளத்தை இலங்கையின் தேசிய அடையாளத்தின் ஒரு கூறாகக் கண்டது. பழைய இடதுசாரி இயக்கத்தின் பாராளுமன்ற அரசியல் சீரழிவும் சிதைவும் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுக்கிற பேரினவாதி களுடன் சமரசத்தை நோக்கி அதனைத் தள்ளிய போது, அந்தப் போக்கின் நேர்மையான வளர்ச்சிப் பாதையின் வழியே வந்த மாக்ஸிய லெனினியவாதிகள், தேசிய இன விடுதலையைச் தேசிய சுயநிர்ணயக் கொள்கையின் அடிப்படையில் வைத்து நோக்கிய தோடு சகல ஒடுக்குமுறைகட்குமெதிரான போராட்டப் பாதையை வற்புறுத்தி வந்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியவாதப் பாராளுமன்ற அரசியற் கட்சிகள் எப்போதுமே பழமைவாதத்துடன் சமரசம் செய்வதும் ஏகாதிபத்தியத்துக்கும் பிராந்திய மேலாதிக்கத்துக்கும் இசைவாக நடந்து கொள்வதும் தற்செயலானதல்ல. அவை குறிப்பிட்ட வர்க்க நலன்களையும் சமூகப்பார்வையையும் சார்ந்து நிகழ்வன. தமிழ்த் தேசிய வாதக்கட்சிகளுள் பாராளுமன்றத் தேர்தல் போட்டியின் விளைவாக முரண்பாடுகள் இருந்தாலும், நடைமுறையில் அவை ஒரு பழமைவாதப் போக்கிலிருந்து விலக மறுத்துள்ளன. இவை பற்றிப் பலகாலம் முன்பு விரிவாக எழுதியுள்ளதால் இவ்விடத்து இப் போக்குடன் தொடர்புடைய மரபு வாத அணுகுமுறை பற்றி எழுதுவது போதுமானது.

வெளிவெளியாகச் சாதியத்தை ஏற்கிறபோக்கும் சாதி முரண்பாடு இல்லை என மறுக்கிற போக்கும் இப்போதைக்கு சாதி பற்றிப் பேச வேண்டியதில்லை என்கிறபோக்கும், முடிவில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை மறுக்கிற போக்குக்களே. சாதிய ஒடுக்குமுறையைத் தொடர்வதற்கு ஒரு வசதியாகவே இவை தேசிய இன விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத் துகின்றன.

## சிநேக முரண்பாடு பகை முரண்பாடாக இடமளிக்கக் கூடாது.

சாதி பற்றிய பழமைவாத அணுகுமுறை பண்பாட்டின் பேரால் பெண்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதையும் நியாயப்படுத்துகிறது. தங்கள் பிள்ளைகளைப் போருக்கு அனுப்பாமலிருக்க பொருளாதார அடிப்படையில் பிறபட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் ஆயுதமேந்துவது உதவுவதாலும் அவர்கள் ஆயுதமேந்துவதால் தாங்கள் பாதுகாப்பாக இருக்க இயலுவதாலும் பெண்கள் ஆயுதமேந்துவதை அவர்கள் எதிர்க்கவில்லை. நாளை தேசிய இனப்பிரச்சனை ஒரு தீர்வை எட்டும் போது பெண்கள், சமயலறையிலும் பிள்ளைப்பரா மரிப்பிலும் தங்களுக்குரிய இடத்துக்கு மீளுவதையே அவர்கள் விரும்புகின்றனர்.

பழமைவாதிகள் எவ்வளவு தூரத்துக்கு மரபையும் பண்பாட்டையும் வற்புறுத்தினாலும், ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் உலகமயமாதலை மறுப்பதி லும் அவர்கள் பின் நிற்பதைக் காணலாம். கொலனிய யுகத்திலும் இவ்வாறான ஒரு நடத்தையை நிலவுடைமை வர்க்கம் கடைப்பிடித்ததை இங்கு நினைவுகூருவது பொருந்தும்.

சாதி ஒடுக்கு முறை இல்லாத இட த்தில் அது பற்றிப் பேசுவது தவறு. ஆனால் உண்மையாகவே நம்முன்னால் இருக்கிற ஒரு விடயத்தைப் பற்றிப் பேசுவது எப்படித்தவறாகும்? தமிழ்த் தேசிய இன விடுதலையில் சாதி ஒடுக்குமுறையிலிருந்து விடுதலைக்கு இடமில்லை என்றால் அதை வெளிப்படையாகவே கூற லாம். அப்படியானால் ஒடுக்கப்பட்ட சாதியினர் அந்த விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்ற வேண்டிய தேவையும் இல்லாமற் போகிறது என்பதையும் நாம் மறக்கலாகாது.

தமிழரிடையேயுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு சமூகமாகவும் ஒரு சாதிப்பிரிவாகவும் ஒடுக்கப்படுகின்றனர். அவர்களது விடுதலைப் போராட்டம் ஒன்றைத் தவிர்த்து இன்னொன்றுக்கானதாக இருக்க இயலாது. சாதியத்தைப் பற்றிப் பேசக்கூடாது என்று விதிப்பவர்கள் இருப்பதனாலேயே, தலித்திய வாதிகள் என்று சொல்லிக்கொள்கிற சிலர், சாதி முறை ஒழியும் வரை தேசிய விடுதலை தேவையில்லை என்று வாதிட முடிகிறது.

எனவே சாதியத்துக்கெதிரான போராட்டமே வேண்டாமென்பது, தவிர்க்க இயலாது, சாதிப் பகைமைக்கும் அதன் விளைவாகத் தமிழ்த் தேசியத்தின் பல வீனத்துக்கும் வழிசெய்யும். இங்கு தேவைப்படுவது சாதி அடிப்படையிலான சமூக அநீதிகட்கான ஒரு முடிவு மட்டுமே. அதை மறுக் கிற எவரையும் ஒடுக்கப்பட்ட சாதியினர் நம்பமுடியுமா? சாதிய ஒடுக் குமுறையைக் கடைப்பிடிக்கிறவர்கள் தமிழ்த் தேசிய இன விடுதலை மூலம் எதிர்பார்ப்பது என்ன? அவர்கள் விடுதலைப் போராடடத்துக்கு வழங்குகிற பங்கென்ன? இந்தக் கேள்வி க்கான விடை மூலம் தன்னை வலு ப்படுத்துவது எது என்று தமிழ் தேசியம் முடிவு செய்யலாம்.

> சாதிய
> ஒடுக்குமுறை
> பெண்களது அடிமைத்தனம்
> வர்க்க சுரண்டல்
> மதங்கள் பற்றிய பார்வை
> பிரதேசவாதச் சிந்தனை
> ஏகாதிபத்தியம் பற்றிய நோக்கு
> என்பனவற்றில்
> தெளிவான முடிவுகளும்
> தூர நோக்குச்
> செயற்பாடுகளும்
> முன்னெடுக்குப்படும் போதே
> தமிழ்த் தேசியம் வலிமைபெறும்.
> அல்லாது விடின்
> தேசிய இன விடுதலைப்
> போராட்டம்
> பலவீனமடையவே
> செய்யும்

சாதி முரண்பாட்டை ஒரு சினேக முரண்பாடாகக்கையாள முடியும். 1960 களின் பிற்பகுதியில் நடந்த போராட்டங்கள் சாதிப்பகைமையை முன்னிறுத்தி நடத்தப் படவில்லை. அப் போராட்டங்கட்கு உயர் சாதியினர் எனப்பட்டவர்களது ஆதரவும் கணிசமான அளவில் கிடைத்தது. போராட்டத்தின் மூலம் அம் முரண்பாட்டின் பகைமையான அம்சம், சாதி வெறியர்களான ஒரு சிறுபான்மையினரருக்கும் சாதியத்தை எதிர்த்த பெரும்பான்மையான மக்களுக்குமிடையிலான ஒன்றாக வடிவெடுத்தது. இன்று ஒடுக்கப்பட்ட சாதியினரது பங்கு பற்றுதலை மிகவும் வேண்டிநிற்கிற ஒரு விடுதலைப் போராட்டம் சாதியம் பற்றி உறுதியுடன் நிற்பதன் மூலம் தன்னையும் தமிழ்த் தேசிய இன ஒற்றுமையையும் வலுப்படுத்திக் கொள்ள இயலும். அவ்வாறு செய்யத் தயங்கும் போது அது சிறுபான்மையான ஒடுக்குமுறையாளர்களுடன் தன்னை அடையாளப்படுத்திப் போராட்டத்தையும் தேசிய இன ஒற்றுயைமையும் பலவீனப்படுத்தும்.

> தேசிய இன
> விடுதலைப் போராட்டம் சாராம்சத்தில்
> சமூக நீதிக்கான போராட்டமுமாகும்
> பேரினவாத ஒடுக்குமுறையை
> எதிர்த்து நிற்கும் போது ஏனைய
> முரண்பாடுகளையும்
> கவனத்திற் கொண்டு உரியவாறு கையாள
> வேண்டும்.

பெண் ணுரிமை தொடர்பாக ஒரு பழமைவாதப் போக்கும் தேசிய விடுதலைப் போராட்ட த்தை எதிர்ப்பதற்குப் பெண்ணியத்தைப் பயன்படுத்தும் போக்கும் கவனத் துக்குரியன.

எவ்வாறு சில தலித்திய வாதிகள் சாதி முரண்பாட்டை முன்னிறுத்தி பிற விடுதலைப் போராட்டங்களை எதிர்க் கிறார்களோ அவ்வாறே உயர் நடுத்தரவர்க்கப் பெண்ணியவாதிகளும் பெண் விடுதலையின் பேரில் நடந்து கொள்வதன் மூலம் பெண் விடுதலை உட்பட்ட சகல விடுதலைப் போராட்ட ங்களுக்கும் ஆப்பு வைக்கிறார்கள். இவர்களது செயல் களை விமர்சிக்கிற அதே வேளை, பெண்களுக்கு எதிரான வரலாற்றுக் கொடுமைகளைத் தொடரவிடுவது தேசிய இன ஒற்றுமைக்குப் பாதமாகவே அமையும்.

இன்று பலஸ்தீனத்திலும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் நேபாளத்திலும் பெண்கள் பல் வேறு வகையான விடுதலைப் போராட்டங்களில் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். இலங்கையிலும், பெண்களது பங்குபற்றுதலின்றித் தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டம் வீழ்ச்சி கண்டிருக்கும். தமிழ்ப் பெண்கள் சீருடைதரித்து ஆண்களுக்குச் சமமாகப்போரிடும் போது எழாத பண்பாட்டுப் பிரச்சனையும் பெண்மை பற்றிய அக்கறையும் ஏன் மற்றைய சூழல்களில் எழ வேண்டும்?

பெண்களை ஆண்களுக்குக் கீழ்ப்பட் டோராகக் கருதும் போக்கு நீண்ட காலக் கல்வி மூலம் திருத்தப்படமுடியும். எனினும், பெண்களுக்கு எதிரான பாலியற் துன்புறுத்தல் உட்பட்ட சகல வன்முறைகளும் கடுமையான தண்டனைக்குரிய குற்றங் களாக்கப்பட வேண்டும். குறிப்பாகக் குடும்பத்தினுள் நடக்கும் வன்முறைச் செயல்களை உள்வீட்டு விவகாரம் என்று தட்டிக்கழிக்க இயலாது. இவ்விடத்து மிகவும் தீவிரமான நிலை ப்பாடுகள் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே அறிவூட்டல், கலந்தாலோசனை, எச்சரிக்கை என்பன முதற்கட்ட நடவடிக்கையாகவும் தொடரும் வன்முறை கடுமையாகவும் தண்டிக்கப்பட்ட வேண்டும். கற்பு, ஒழுக்கம் என்பன பற்றிய மரபு சார்ந்த பார்வை ஆண்க ளுக்கும் பெண்களுக்கும் சமமான முறையில் இல்லை. இவ்விடயத்தில், இளவயதிலிருந்தே போதிக்கப்படுகிற மரவு சார்ந்த, பக்கச்சார்பான விழுமியங்கள் மீள்பார்வைக்குட்படுத்தப் பட்டுச் சமூக நலன் சார்ந்தும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையிலுமான அறவிழுமியங்கள் வற்புறுத்தப்பட வேண்டும்.

கல்வி தொழில் ஆகிய துறைகளில் பேரளவிலானது இந்த நாட்டில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமவாய்ப்பு உள்ளது. எனினும் ஊதியத்தில் பாகுபாடு இருக்கிறது. அதிலும் முக்கியமாக, வேலைத் தலங்களில், பொதுப்படப் பெண்கள் என்ற முறையிலும் தனிப்பட்ட முறையிலும் பெண்கள் கூடுதலான சுரண்டலுக்கு உட்படுவதும் போதாமல் பாலியல் சிந்தனைக்கும் துன்புறு த்தலுக்கும் உட்படுவது உலகமய மாதலின் விளைவாகக் கூடிவருகிறது.

பெண்கள் தொழில் செய்து உழைக்கிற தேவை கூடிவருகிறது. அதே வேளை வீட்டுப் பொறுப்புக்களில் அவர்களது வேலைச் சுமை அதற் கேற்பக் குறையவில்லை. இதில் ஆணாதிக்கச் சிந்தனையின் பங்கு குறிப்பாகப் பழமைவாதச் சிந்தனைகளது பங்கு முக்கியமானது. இது பற்றித் தேசிய விடுதலைப்போராட்டம் அலட்சியமாக இருக்க இயலாது.

உயர்நடுத்தர வர்க்கம் பெண்களது பெண்ணிய அக்கறைகட்கும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கப் பெண்களது உரிமைகட்கான போரா ட்டத்துக்கும் அதிகம் உறவில்லை. எனினும் பெண்ணுரிமை தொடர்பான பிரச்சனைகளை த்தட்டிக்கழிக்க இலங்கையின் மேட்டுக்குடிப் பெண்ணி யவாதிகளது அக்கறைகளையே மரபுவாதிகளும் பிற பிற் போக்காளர்களும் காரணங்காட்டு கின்றனர். பெண்விடுதலை என்பது தேசிய விடுதலைக்காகவும் சாதி ஒழிப்புக்காகவும் சோஷலிஸ வருகைக்காகவும் காந்திருக்க அவசியமில்லை. முழுமையான பெண்விடுதலை பிற சமூக விடுதலைகளை யொட்டியே இயலுமானது. அதே வேளை, பெண்களது உரிமைகளைச் சமூகச்சீர்திருத்த மூலம் வென் றெடுக்கும் முயற்சிகட்கு முழு ஆதரவளிப்பது அவசியம். உழை க்கும் வர்க்கப் பெண்கள் எவ்வளவு தூரம் விடுதலை பெறுகிறார்களோ அவ்வளவுக்குத் தேசிய இனவிடு தலைப் போராட்டமும் வலுவடைகிறது என்பது இலங்கையினதும் பல உலக நாடுகளதும் அனுபவமாகும்.

பெண்ணுரிமைப் போராட்டங்களைப் பின்போடுவதன் மூலம் தேசிய அடை யாளமோ விடுதலைப் போராட்டமோ வலுப்படும் என்பது முற் றிலும் ஆதாரமற்றது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது வர்க்கப்போராட்டம் ஒதுங்கி நிற்பதில்லை. எனினும், ஏகாதிபத்திய நலன்கட்கும் தேசிய முதலாளிய நலன்கட்குமான முரண்பாடு கூர்மையடையும் போது தொழிலாளியத்துடன் ஒத்துழைக்கும் ஒரு நிலை ஏற்படுகிறது. இன்று தேசிய முதலாளியம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கத் திராணியற்றுள்ளது. எனவே தேசிய முதலாளியம் பற்றிய தொழிலாளி வர்க்க நிலைப்பாடு குறிப்பிட்ட சூழ்நி லைகளில் தேசிய முதலாளியம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கத் திராணியற்றுள்ளது. எனவே தேசிய முதலாளியம் பற்றிய தொழிலாளி வர்க்க நிலைப்பாடு குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தேசிய முதலாளி வர்க்கம் தேசிய நலன்களைச் சார்ந்து நிற்கிறதா என்பதை வைத்தே அமையலாம். தேசிய இன விடுதலைப் போராட்டத்தையோ தேசிய இன ஒற்றுமை யையோ காரணங்காட்டித் தொழிலாளர்களைக் கடுமையாகச் சுரண்டுவதையோ அடிப்படை உரிமைகளை மறுப்பதையோ ஏற்க இயலாது. அவ்வாறு செய்யும் படி தொழிலாளி வர்க்கத்தைக் கேட்பது விடுதலைப் போராட்டம் பற்றி அவர்களது நம்பி க்கையைப் பலவீனப்படுத்துவ தோடு தடுமாற்ற நிலையில் உள்ள முதலாளி வர்க்கத்தினர் எதுவிதமான தியாகங்களையுஞ் செய்யாமல் தேசியத்தின் பேரால் மேலும் கொழுப்பதற்கே வழி கோலும்.

தேசிய இன விடுதலைக்கான போராட்டம் சமூக நீதிக்கான போராட்டம் என்பதனால் அதனை வலுப்படுத்த வேறு சமூகரீதியான போரா ட்டங்களைச் கைவிட வேண்டும் என்று வற்புறுத்துவது போராட்டச் சக்திக ளைப் பலவீனப்படுத்திச் சந்தர் ப்ப வாதிகளை நன்மைபெறச் செய்ய மட்டுமே உதவும்.

மதமும் பிரதேச உணர்வுகளும் தொடர்பான முரண்பாடுகள் முற் கூறிய முரண்பாடுகள் போன்று சுரண்டலையோமேலாதிக்கத்தையோ அடிப்படையாகக்கி கொண்ட வையல்ல. இவை, ஒடுக்கும் வர்க்கங்கள் தமது மேலாதிக்க நோக்கங்கட்காகப் பயன்படுத்தக் கூடியனவாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும் (14)

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

கல்வித் துறையில் வர்க்கம், சாதி, மதம், என்ற அடிப்படைகளில் வெவ்வேறு வகையான பாகுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. பொருள் வசதி, குடும்பச் சூழல் என்பன தொழிலாளி வர்க்கத்தினரின் பெரும் பகுதியினருக்கு எதிராகச் செயற்படுகின்றன. சாதியம் இன்னமும் வெளி வெளியாகவே தாழ்த்தப்பட்ட சாதியினரின் கல்வி மேம்பாட்டுக்கு தடையாகச் சில இடங்களிலேனும் செயற்படுகிறது. மத அடிப்படையிலான பாகுபாடுகள் இன்று கல்வி உரிமையில் வெளிவெளியாகச் குறுக்கிடுவது குறைவு. எனினும் மதம் ஒரு முக்கியமான சமூக அடையாளமாகச் செயற்பாடுகிற வகை பாரபட்சம் தொடர்வது தவிர்க்க இயலாதது.

நிலவுடமைச் சமூகங்களில் பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் பொதுவாகவே மறுக்கப்பட்டு வந்துள்ளன. குறிப்பிடத்தக்க அளவில் உயர்வர்க்கத்தினரிடையிலும், விலக்காகக், கீழ்மட்டங்களிலும் பெண்கள் கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். எனினும் பெண்கள் அதிகம் படிப்பது கேடானது என்ற பார்வை நிலவுடைமைச் சமுதாயத்தின் முடிவின் பின்னரும் இருந்து வந்துள்ளது.

இலங்கையில் பெண்களுக்குக் கல்வி வாய்ப்புக்கள் கிட்டுவதற்குக் கிறிஸ்துவ மத நிறுவனப் பாடசாலைகளது வரவு ஒரு முக்கியமான பங்கை ஆற்றியது. பாடசாலைக்குச் சென்று பெண்கள் பயிலுவது ஏற்கப்பட்ட பின்பும் பருவம் வந்த பெண்களைப் பாடசாலை செல்லாமல் மறிக்கிற வழமை நகரங்களிற் கூட இருந்து வந்தது. பருவ வயதுப் பெண்கள் பொது இடங்கட்குப் போவது அவர்களது நல்லொழுக்கத்துக்குக் கேடானது என்ற எண்ணத்திற்கும் இதிற் பங்குண்டு. மேலை நாடுகளிற் பெண்கள் தமது வாக்குரிமைக்கும் போராடி வென்றபிறகு பல வேறு தொழிற் துறைகளிலும் செயற்படும் உரிமையை வென்றெடுத்தனர். இதற்கு, முதலாளிய வளர்ச்சியில் பெண்களின் உழைப்புக்கான தேவை முக்கிய பங்களித்தது. உலகப் போர்களின் போது ஆண்கள் போர் முனைக்குப் போன வேளை தொழிற்சாலைகளில் ஏற்பட்ட ஆட்டபஞ்சமும் பெண்கள் தொழிற்சாலைகளில் பணி செய்யும் தேவையை அதிகமாக்கியது. பிரித்தானியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் கொலனிகளிலும் சில மாற்றங்களைக் கொண்டுவந்தன.

எவ்வாறாயினும், பெண்கள் உயிர் பதவி வகிப்பது பற்றியும் ஆண்களின் ஆதிக்கம் மிகுந்தவையான துறைகளில் ஈடுபடுவது சமுதாயத்தில் மிகுந்த தயக்கம் இருந்து வந்துள்ளது. பெண் கல்வி பரவலாக்கப்பட்டும் பெண்கள் உத்தியோகம் பார்ப்பது ஏற்கப்பட்ட பின்பும் பெண்களும் ஆண்களும் ஒன்றாக வேலை செய்ய வேண்டிய சூழ்நிலைகளைத் தவிர்க்கிற ஒரு போக்கும் இருந்தது. ஆணாதிக்கத்தின் விளைவான சிந்தனைகள் சமுதாயத்தின் மீது செலுத்திய ஆதிக்கம் பெரிது. பெண்களுக்குச் சட்ட ப்படி மறுக்க முடியாத வாய்ப்புக்களைச் சமூக நெருக்குவாரங்கள் மூலம் மறுக்க இயலுமாயிற்று.

சமூகங்களில் ஏற்படுகிற புறநிலையான மாற்றங்கள் ஒரேயடியாகச் சமூகத்தில் சிந்தனை முறையை மாற்று வதில்லை. மரபு, வழமை, பண்பாடு, மதம், சடங்குகள், மொழி ஆகிய ஒவ்வொன்றினுள்ளும் செயற்படுகிற ஆதிக்கச் சிந்தனைகள் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினருக்கு எதிராகத் தொடர்ந்தும் இயங்குகின்றன இவற்றிலிருந்து விடுபடுவது தொடர்ச்சியான ஒரு நீண்டகாலப் போராட்டத்தின் மூலமே இயலும். எனவே பெண்களின் கல்வியுரிமை வென்றெடுக்கப்பட்டுப் பல காலத்தின் பின்பும், பெண்களிற் கணிசமான பகுதியினருக்குக் கல்வி வாய்ப்புக்கள் மதத்தின் பேராலும் பண்பாட்டின் பேராலும் மறுக்கப் பட்டுவந்துள்ளன.

உயர்கல்வி வாய்ப்புக்கள் விரிவடையத் தொடங்கிய பின்பும் உயர்கல்விக்கும் பெண்கள் செல்வது விரும்பப் படவில்லை. பெருநகரஞ் சார்ந்த உயர் நடுத்தர வகுப்புப் பெண்களே

### கல்வித் துறையிற் பெண்களின் நிலை

உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்தினர். எனினும், எந்தத் துறைகள் பெண்களுக்குப் பொருந்தமானவை என்பது பற்றிய மனத்தடைகள் இருந்தன.

பெண்களை ஆண்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் வைக்கக் கூடிய தொழில்களில் பெண்கள் ஈடுபடுவது பற்றி அதிகம் எதிர்ப்பு இருக்கவில்லை. அடுத்ததாகப் பெண்களுக்கு உரிய பணிகளுக்குப் பெண்கள் சேர்க்கப்படுவதும் ஏற்கப்பட்டது. நடுத்தர உயர்நடுத்தர வகுப்புப் பெண்கள் உடல் உழைப்புச்சாராத தொழில்களைக் செய்வது குடும்பப்பொருளாதார நலனுக்கு உகந்ததாக பெண்களுக்கு உரிய பணிகளுக்குப் பெண்கள் மருத்துவத் தாதிமாராவது ஆண்களால் ஏற்கப்பட்டளவுக்கு பெண்கள் வைத் தியர்களாவது ஏற்கப்படவில்லை. பெண்கள் பாடசாலைகளில் உள்ள சில அடிப்படையான குறைபாடுகளும் பெண்கள் விஞ்ஞானத் துறைகளில், குறிப்பாகக் கணிதமும் பௌதிகமும் சார்ந்த துறைகளில், ஈடுபடுவதற்குப் பாதகமாகவே அமைந்தன. இன்றுங் கூட ஆண்கட்கான பாடசாலைகளுடன் ஒப்பிட்டால் பெண்கட்கான பாடசாலைகளில் கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கட்குத் தட்டுப்பாடுள்ளது. இதன் விளைவாக விஞ் ஞானக் கல்வி வாய்ப்புள்ள பாடசாலைகளின் உயிரியல், ரசாயனம் போன்ற பாடங்களில் பெண்கள் பாடசா லைகள் கூடிய கவனஞ் செலுத்துவதையும், பொது வாகவே ஆண் கட்கான பாடசாலைகளுடன் ஒப்பிடு கையில் பெண் கட்கான பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதையும் காணலாம்.

பெண்கள் படித்து என்ன உத்தியோகம் பார்க்கம் போகிறார்களா என்ற கேள்வி எப்போதிருந்தோ பெண் கல்விக்கு எதிராகப் பாவிக்கப்பட்டது. இன்று வெளிவெளியாக அக்கேள்வி எழுப்பப்படாவிடினும், தொழிற் துறைகளில் பயிற்றப்பட்ட பெண்கள் கூட, மணமான பின்பு தமது தொழில்களைக் கைவி டுவதை நாம் காணலாம். குறிப்பாக நல்ல வருமானம் பெறும் ஆண்கள் பொதுவாக மனைவியர் வேலைக்குப் போவதை விரும்புவதில்லை.

பெண்கள் சுதந்திரமாகத் திருமணஞ் செய்யும் வயது பதினெட்டாகக் கூட்டப் பட்டது, பெண்கள் பாடசாலைக் கல்வி யை முழுமைப் படுத்த உதவியதுடன் உயர் கல்வியைப் பெறுவதற்கும் ஊக்குவித்தது. பல வேறு சமூக நெருக்குவாரங்களும் இன்று சராசரியான திருமணமாவதை மேலும் உயர்த்தியுள்ளன. எனவே கல்வி வாய்ப்புக்குத் திருமணம் இலங்கையில் ஒரு

**பேராசிரியர் சி.சிவசேகரம்**

பெரிய தடை யாக இல்லாவிடினும் கல்வியின் பயனை மேலும் வளர்த் தெடுப்பதற்குத் தடையாகவே உள்ளது.

சமூக, விஞ்ஞான ஆராய்வுத் துறைகளில் பெண்கள் இன்னமும் எண்ணிக்கையில் பின்தங்கி நிற்பதற்குக் குடும்பம் பொறுப்புக்கள் மட்டுமன்றிச் சமுதாயத்தில் நிலவும் ஆணாதிக்கப் போக்குக்களும் காரணங்களகின்றன. இதை மாணவப்பருவ ஆண்களது நடத்தையில் காண முடியும். பெண்களை ஏளனம் செய்வதும் இழிவாகப் பேசுவதும் வழமையாக மட்டுமல்லாமல் ஏற்புடையதாகவும் கருதுகிற போக்கு இளைஞர்களிடம் இன்னமும் உள்ளது. சிறிது சுதந்திரமாக நடக்க முயலுகிற பெண் களின் ஒழுக்கத்தைக் கேள்விக்குட்படுத்துவது இன்னு மொரு அடக்குமுறைக் கருவியாகும். எவ்வாறாயினும், மேலைநாடுகள் பலவும் உட்பட்ட உலகநாடுகளிற் பெரும்பாலானவற்றுடன் ஒப்பிடுகையில் இலங்கையிற் பெண்களுக்குரிய கல்வி வாய்ப்புக்கள் நல்ல நிலை யிலேயே உள்ளன. எனினும் உயர் கல்வியிலும் முக்கிய மான சில துறைகளிலும் பெண்கள் பங்குபற்றும் அளவு போதாது.

நாட்டின் இன்றைய நிலைவரங்களின் கீழ், பெண்களின் நிலை மேலும் மோசாமாகிற அடையாளங்கள் தென்படுகின்றனர். சட்டமும் விதிகளும் வழங்குகிற சமத்துவம் முழுமைப்படுத்தப்பட வேண்டுமாயின் சமூக அளவிலான சிந்தனை மாற்றம் ஒன்றுக்கான தேவை உள்ளது.

முதலாளிய உற்பத்தி முறையை நோக்கி ஏகாதிபத்திய உலகமயமாதயின் கீழ் வழிநடத்தப்படுகிற ஒரு சமூதா யத்தில் பெண்களின் கல்விக்காக இது வரை வென்றே டுக்கப்பட்டவற்றை விடப் பெரிதாக எதையும் வென்றெ டுப்பதானால் பெண்களின் சமூக விடுதலை மேலும் பரவ லாகப்பட வேண்டும். இவ்வளவுகாலமும் பெண்கட்காக வெல்லப்பட்டவை பெருமளவும் உயர் நடுத்தர வகுப்பி னருக்கும் நடுத்தர வகுப்பினரில் ஒரு பகுதியினருக்கும் உதவியளவுக்கு உழைப்பாளி வர்க்கத்தினரை எட்ட வில்லை என்பதை நாம் மறக்கலாகாது.

எனவே, பெண்களை பின்தங்கிய நிலையில் வைக் கப்பட்டுள்ள ஒரு சமூகப்பிரிவினராகக் கொண்டு அவர் கட்கான ஊக்குவிப்புக்களையும் வசதிகளையும் கோரும் அதே வேளை, இவ்வாறான வாய்ப்புக்கள் சமுதாயத்தின் கீழ் மட்டங்களிலுள்ள பெண்களுக்கு மிகவும் தேவையாக உள்ளன என்பதை நாம் மனதிலிருத்த வேண்டும்.

# யோதிலிங்கத்தின் முன்னாலுள்ள ஒரே சவால்- தெளிவான சிந்தனை!

சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள், சி.அ.யோதிலிங்கம், இன ங்களுக்கிடையே சமாதானத்துக்கான ஆய்வகம், கொழும்பு, 2004,ப 53,

இச் சிறு நூலுக்கு கா.சிவத்தம்பி முன்னுரை எழுதியுள்ளார். திரு யோதிலிங்கத்தின் விடய ஈடுபாட்டுணர்வும் அறிவாழமும் பற்றி நூலில் முக்கியப்படாது போன விடயங்கள் பற்றி எழுதுவதாகக் குறிப்பிட்ட அவர் யோதிலிங்கத்தின் அறிவாழம் பற்றியோ ஈடுபாட்டுணர்வு பற்றியோ கவனிக்கத்தக்க எதையுமே குறிப்பிடாமை கவனிக்க உகந்தது. நூலை வாசித்த பிறகு சிவத்தம்பியின் சங்கடம் பற்றி விளங்கிக் கொள்ள முடிந்தது.

சிவத்தம்பி எழுதுவது தமிழிலா என்ற ஐயம் இடையிடை எழுவதுண்டு. சில ஆங்கிலச் சொற்கட்கு தெளிவற்ற தமிழ்ச் சொற்களை அமைத்து வசனங்களில் புகுத்தித் தன்னையும் படிப்பவரையும் அல்லற்படுத்துவது அவரது வழமையாகி விட்டது. அரசியல் பற்றிய அவரது புரிதல் மிகவும் பலவீனமானது. அதற்குக் காரணம், அவர் தனது பழைய திரிபுவாத நிலைப்பாட்டை சுயவிமர்சனக் கண்ணோட்டத்தில் விளக்கத் தயங்குவதுடன் தனது புதிய குறுகிய தேசியவாத நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் நோக்கில் விடயங்களை வக்கிரப்படுத்தி நோக்குவதுமாகும். ஜே.வி.பிக்கு லாகான் போடுவது பற்றிப் பேச எல்லாரும் பயப்படுவது பற்றியும் ஜே.வி.பிக்கு மலையகத்தில் வலுவான தளம் உள்ளதாகவும் குறிப்பிடுகிற சிவத்தம்பி, இந்திய அரசு நிறுவனம் ஜே.வி.பியுடன் பூண்டுள்ள விநோதமான நட்புறவு பற்றிப் பேசத் தயங்குகிறார். மலையகத்தில் ராமலிங்கம் சந்திரசேகரன் போன்ற எடுபிடிகளை விட்டால் ஜே.வி.பிக்கு என்ன தளம், எங்கே இருக்கிறது என்று அவர் தான் விளக்க வேண்டும். ஜே.வி.பியின் இன்றைய பேரினவாதத்தைப் புலிகள் மீதான பொறாமையின் அடிப்படையில் விளக்குவது போல அரசியல் கொச்சைத்தனம் அதிகம் இருக்க இயலாது. ஜே.வி.பியின் பேரினவாதம் அதனுடன் ஒட்டிப் பிறந்தது. விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்குப் முன்னரே ஜே.வி.பி தனது இனவாதத்தை அடையாளங்காட்டி விட்டது. இதற்குப் மேல் சிவத்தம்பியின் அரசியல் தெளிவை விமர்சிப்பது இரக்கமற்றது.

என்.ஜி.ஓ. பணம் சமாதான அரசியலில் புகுந்து விளையாடப் பாதை அமைத்த சாள்ஸ் அபேசேரவுக்கு நூல் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. இதே அபேசேகர சந்திரிக்கா அரசாங்கத்தின் சமாதான வேடத்துக்குச் சப்பைக்கட்டுக் கட்டுவதில் ஆற்றிய பங்கு அவருடைய மேஜ் நிறுவனத் திற்குள்ளேயே சாடையாக விமர்சிக் கப்பட்டது. அவருடைய வாழ் நாள் முழுவதும் இனங்களுக்கிடையிலான நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டவே பயன்பட்டன என்றால் அவரது வாழ்நாள் நீண்டதாக இருக்க இயலாது. அபேசேகரவைப் பற்றி யோதிலிங்கம் அறிந்ததை விட இயங்கியல் பற்றி அறிந்தது குறைய, ஆனாலும் அதையும் தெரிந்தது போல காட்டிக் கொள்ளும் அவதி அவருக்கு.


**சிவா**

கற்பிட்டிக்கும் திருகோணமலைக்கும் இடையில் ஒரு கோட்டைக்கீறினால் அதன் மேற் பகுதி முழுதும் யாழ்ப்பாண ராச்சியத்துக்குட்பட்டதாக இருந்தது என்று நூலாசிரியர் சொல்கிறார். நிச்சயமாக அது நேர் கோடாக இராது என நம்புகிறேன். நிலவுடைமைச் சமூகத்தில் அரசர்களது இன அடையாளத்துக்கும் நாட்டுமக்களது இன அடையாளத்துக்கும் அதிகம் உறவு இருந்ததில்லை. அதுபோக வரலாற்றுத் தொடக்க விலையில் வடக்கு கிழக்கு ஒரே மன்னராட்சியின் கீழ் இருந்ததாக வரலாற்று ஆய்வுகளும் உண்டு என்றும் அவர் சொல்லி வைத்திருக்கிறார். இதனை அவர் விளக்குவது நல்லது.

ஒரு மக்கள் பிரிவு அதனுடைய அடையாளங் காரணமாக ஆட்சியமமைப்பிலிடருந்து புறக்கணிக்கப் படும் போது பன்மைத் தன்மை அவசியமாகிறது என்கிறார் அவர். மாறாக, பன்மைத் தன்மையை ஏற்க மறுப்பதே புறக்கணிப்பின் தோற்றுவாய் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும்

பிரித்தானியர் இந்தியாவில் பன்மைத் தன்மைக்கு இடம் விட்டுச் சென்றதாகவும் இலங்கையில் அவ்வாறு செய்யாததாலேயே பிரச்சனைகள் வந்ததாகவும் நூலாசிரியர் கருதுவதாகத் தெரிகிறது. இந்தியாவில் பிரித்தானிய ஆட்சி எவ்வாறு அமைந்ததோ அதன் அடிப்படை யிலேயே இந்தியாவின் மாகாணங்கள் நிறுவப்பட்டன. இந்தியாவில் மாநிலங்களை மொழிப் பெரும்பான்மை அடிப்படையில் அமைக்கும் முடிவு கொலனி ஆட்சிக்கும் பின்னானது. பழங்குடிகளை உள்ளடக்கிய புதிய மாநிலங்கள் உருவானது மிக அண்மையிலேயே. அவை எவ்வளவு தூரம் அந்த மக்களது பன்முகத்தன்மையை மதித்தும் அவர்களது பொருளாதார நலன்களை முதன்மைப்படுத்தியும் அமைக்கப்பட்டன என்பது வேறு விடயம். கிழக்கிந்திய மாநிலங்கள் இந்தியாவின் ஒரு பகுதிய-ாக்கப்பட்டது எப்போது என்பதோ பழைய அஸ்ஸாம் மாநிலம் ஏன் பிரிக்கப்பட வேண்டி வந்தது என்பதோ பற்றி யோதிலிங்கம் அறியாமலே பேசுகிறார். இங்கு முக்கியமானது பன்மைத் தன்மையை ஏற்பதல்ல. தேசிய இனங்களதும் இனப்பிரிவுகளதும் சுய நிர்ணய உரிமையை ஏற்பதே. இது பற்றி யோதிலிங்கம் எந்த அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழ் தேசியவாத அரசியல் வரலாற்றை நாலுகட்டங்களாகப் பிரித்துள்ள நூலாசிரியரியர் எந்த வொரு பகுதியிலும் அந்தக் கால வரையறை சார்ந்து ஒழுங்காக எதையும் ஆராய இயலாமை சிந்தனைத் தெளிவின்




அடையாளமல்ல.

அரசியல் அதிகாரம் பற்றிய பார்வையில் பாராளுமன்ற கட்சிகள் பெறுகிற ஆசனங்களின் எண்ணிக்கை மட்டுமே முக்கியம் பெறுகிறது. அதைவிட அரச அடக்குமுறை என்பதை வெறுமனே ஒரு தேசிய இனத்திற்கு எதிரான அடக்கு முறையாக்க காணுகிற போக்கின் விளைவாகக் பயங்கரவாதத் தடைச்சட்டம் உண்மையில் சிங்கள மக்களின் உயிரிழப்புக்கு 1987-89 கால இடைவெளியில் பாதித்தளவுக்குத் தமிழரைப் பாதித்தாகக் கூறுவது கடினம். 1987-89 காலகட்டத்தின் அரச அடக்குமுறை பற்றிய எவ்விதமான கவனிப்பும் இந்த நூலில் இல்லை. நூலாசிரியர் 1968க்கும் பின்னர் என்று ஒருகாலகட்டத்தை உருவாக்க, 1968 ஆண்டு திருச்செல்வம் பதவி விலகியதை விட என்ன நியாயமும் இல்லை. யூஎன்.பி. தமிழரசுக்கட்சி உறவு அதன்பின்பும் வலுவாகத் தொடர்ந்ததும், யோதிலிங்கம் காண விரும்பாத ஒரு வரலாற்று உண்மை. இந்தியா இலங்கையில் அமைதியைக் குழப்புவது, விடுதலைப் போராட்டமும் தமிழர் சுயாட்சியும் இந்திய ஒருமைப்பாட்டுக்குப் பாதகமாக அமையும் என்ற அச்சத்தாலென்றே நூலாசிரியர் கருதுவது போல தெரிகிறது. இந்திய ஒருமைப்பாட்டுக்கு இலங்கையில் உள்ள சகலதரப்புக்களும் கூட்டு உத்தரவாதம் ஒன்றைத் தரமுடிந்தால் இந்தியச் சவாலைத் தவிர்க்கலாம் என்று யோதிலிங்கம் பரிந்துரைக்கிறார். இந்திய அரசும் ஆளும் வர்க்க நலன்களும் பற்றி அவர் அறியாமற் பேசுகிறாரா அல்லது கேட்பவர்கள் மடையர்கள் என்று நினைக்கிறாரா தெரியவில்லை.

நூலின் பின்னிணைப்பாக இனங்கட்கிடையிலான சமத்துவத்துக்கான ஆய்வகத்தின் அறிமுகமும் நோக்கங்களும் வேலைத்திட்டமும் அலுவலர்களது பேர்களும் உள்ளன. பெருமளவு ஒரு என்.ஜி.ஓ. பிரேரணை போல அமைந்துள்ள இந்தப் பகுதியை எழுதியவர்கள் தேசிய இனப் பிரச்சனை பற்றிய மாக்ஸிய லெனினிய ஆய்வுகளில் ஒன்றிர ண்டையாவது வாசித்து விளங்கியிருந்தால் பயன் இருந்திருக்கும்.

யோதிலிங்கத்தின் முந்திய நூல்களில் வரலாற்றுத் தகவல்களை இடதுசாரி இயக்கத்திற்கு எதிராகத் திரிக்கிற ஒரு போக்கு இருந்தது. இந்த நூலிலும் இடதுசாரிச் சிந்தனையின் பங்களிப்பும் இன்றைய முக்கியத் துவமும் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஆனால் தன்னை ஒரு கனதியான அரசியல் ஆய்வாளராகக் காட்டிக் கொள்ள முயலும் ஒருவர் வரலாற்று உண்மைகள் பற்றிக் காட்டுகிற அசட்டைதற்செயலானதல்ல.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க இராணுவம் வந்தது முன்னே..... கிறித்துவப் பாதிரிகள் வந்தனர் பின்னே.......

அன்று- எங்களிடம் நிலம் இருந்தது: அவர்கள் கையில் பைபிளுடன் வந்தார்கள். இன்று - எங்கள் கையில் பைபிள் இருக்கிறது. அவர்களிடம் நிலம் இருக்கிறது. இது காலனியாதிக்கத்தின் கொடுமையையும் கிறித்துவ மதத்தின் ஆக்கிரமிப்பையும் விளக்கும் பிரபலமான ஆப்பிரிக்கப் பாடல். இது 200 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கதையல்ல. இன்றும் தொடரும் கதை.

மீண்டும் அவர்கள் கையிலே பைபிளுடன் கிளம்பி விட்டார்கள். அன்றைய ஆப்பிரிக்க நாடுகளைப் போலவே, இன்று ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவரின் நற்செய்தியைப் பரப்ப அமெரிக்காவிலிருந்தும் அதன் விசுவாச அடிமை நாடுகளிலிருந்தும் பாதிரியார்கள் ஈராக்குக்குப் படையெடுக்கிறார்கள். தெய்வீக ஆவி அவர்களை பாக்தாத்துக்கு அனுப்பியுள்ளதாகப் பெருமை கொள்கிறார்கள்.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பு தொடங்குவதற்கு முன்பாக, இப் புனிதர்கள் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுடன் ஜோர்டான் எல்லையில் காத்திருந்தனர். ஆக்கிரமிப்புப் போர் தொடங்கி சமிக்ஞை கிடைத்ததும், இவர்கள் ஈராக்கினுள் பாய்ந்தனர். கிறித்துவ மதப் பரப்பு நிறுவனங்ளைச் சோந்த இப்பாதிரியார்களும் பிரசங்கிகளும் தங்களை வர்த்தகர்களாக தொழில் முனைவோராக, சேவைப் பணியாளராக, ஒப்பந்தத் தொழிலாளியாக வேடமிட்டுக் கொண்டு ஆக்கிரமிப்புப் போரினால் நிலைகுலைந்த பகுதிகளுக்குச் செல்கின்றனர். அங்கு நிலைமை சாதகமாக இருந்தால், வேடத்தைக் கலைத்துவிட்டு, அங்கிகளை அணிந்து கொண்டு உணவு- மருந்துப் பொருட்களை விநியோகித்து மதப் பிரச்சாரத்தைத் தொடங்குகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள தெற்கத்திய பரிசுத்த ஆவி திருச்சபையானது மத அடிப்படைவாத இயக்கமாகும். ஈராக்கில் நுழைந்து கிறித்துவ மதப் பரப்பு வேலைகளைச் செய்வதற்காக, வர்த்தகர்களாகவும் ஒப்பந்தத் தொழிலாளர்களாக வேடமிட்டுக் கொண்டு செல்ல தனியாக ஒரு பயிற்சி வகுப்பை அது நடத்துகிறது. இதன்படி தேர்வு செய்யப் பட்ட பாதிரியார்களுக்கு அது அரபு மொழியையும் கற்பிக்கிறது. இந்த உண்மைகள் அமெரிக்க வர்த்தக நாளேடான "வால் ஸ்ட்ரீட் ஜேர்னல்" - லிலும் வெளிவந்துள்ளது.

தெற்கத்திய பரிசுத்த ஆவி திருச்சபையின் முன்னாள் தலைவரான பாதிரியார் பிராங்களின் கிரகாம், அதிபர் புஷ்ஷுக்கு மிகவும் நெருக்கமானவர். அமெரிக்காவில் நடந்த செப். 11 தாக்குதலுக்குப் பிறகு, ஈராக் மீது படையெடுக்க வேண்டும் என்று இவர் புஷ்ஷிடம் வலியுறுத்தி வந்தார். போர் தொடங்கும் முன்னர். புஷ்ஷுடன் சேர்ந்து பிரார்த்தனை நடத்திய அவர், முகமது நபி ஒரு சாத்தான்: இசுலாம் சாத்தான்களின் மதம் என்று வெளிப்படையாகவே வெறியைக் கக்கினார். இப்போது இவர் போர் நிவாரண கிறித்துவ மிஷனரியின் தலைவராக உள்ளார். கடந்த ஆண்டில் மட்டும் இந்த நிறுவனம் ஈராக்கில் கிறித்துவ மதப் பரப்பு வேலைகளுக்காக ஏறத்தாழ 20 கோடி டாலர்களை வாரியிறைத்துள்ளது.

இன்று பாதிரியார் கிரகாமின் ஆட்கள், ஈராக்கில் உணவு- மருந்துப் பொருட்களை விநியோகிப்ப தோடு அரபு மொழியில் தயாரிக்கப்பட்ட பைபிளையும், இயேசு அறிவுறுத்திய வாழ்வியல் கோட்பாட்டு நூல்களையும் விநியோக்கின்றனர். ஈராக்கிய மக்களின் இன்றைய அவல நிலைக்கு இசுலாம் தான் காரணம்: அதை விட்டு வெளியேறி கிறித்துவத்தைத் தழுவுங்கள் என்று உபதேசிக்கின்றனர். உணவுக்காகவும் மருந்துக்காகவும் கையேந்தி நிற்கும் ஈராக்கிய மக்கள் நிர்ப்பந்தமாக மதம் மாறுகிறார்கள். அவர்களைக் கொண்டு ஆவியெழுப்பும் வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தப்படுன்றன. இதன் தொடர்ச்சியாக, ஆக்கிரமிப்புக்குப் பிறகு அமெரிக்கப் பாதிரிகள் முதலாவது பரிசுத்த ஆவி திருச்சபையைத் தொடங்க முற்பட்டனர். அவர்கள் பாபிலோனிலிருந்து பாக்தாத்துக்கு வந்து கொண்டிருந்த போது, கடந்த பெப்ரவரியில் ஈராக்கிய போராளிகளால் குண்டு வீசீக் கொல்லப்பட்டனர், ஐயோ! காட்டுமிராண்டித் தனம் என்று அலறினார் போப்.

ஈராக்கிய போராளிகளால் கொல்லப்படும் பிணைக்கைதிகள் - ஒப்பந்தத் தொழிலாளர்களில் பெரும்பாலோர், கிறித்துவ மதப் பிரச் சாரகர்களே ஆவர். கடந்த ஏப்ரலில், தென் கொரியாவைச் சேர்ந்த சில ஒப்பந்தத் தொழிலாளிகள் ஈராக்கியப் போராளிகளால் பிணைக்கைதிகளாகக் கடத்திச் செல்லப் பட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். இவர்கள் தொழிலாளிகளாக வேட மிட்டு வந்த கிறித்து மதப் பிரச்சார கர்கள் என்று அம்பலமானது. கடந்த மே மாதத்தில், மொசூல் நகரில் மாதா கோயிலுடன் ஒரு கிறித்துவப் பள்ளியைத் தொடங்க கொரிய பாதிரிகள் முற்பட்டபோது, அவர்கள் பேராளிகளால் கடத்திச் செல்லப்பட்டு, திரைமறைவுப் பேரங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பானது, எண்ணெய்க்கான யுத்தம் மட்டுமல்ல: ஈராக்கின் சுதந்திரம், சுயாதிபத்தியம், கலாச்சாரம், இறை நம்பிக்கை, மரபுகள்- பாரம்பரியங்கள் ஆகிய அனைத்தின் மீதும் தொடுக்கப்பட்டுள்ள யுத்தம். ஆக்கிரமிப்புப் போருடன் கிறித்துவ மதம் பரப்புதலையும் இணைத்து 19-20- ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் பின்பற்றிய அதே கொள்கைகயைத்தான் இன்றைய அமெரிக்கக் காட்டுமிராண்டிகளும் பின்பற்றுகின்றனர். அன்றைய காலனியாதிக்க ஆட்சிகளை விட இன்றைய புஷ் ஆட்சியில்தான் கிறித்துவ மதவெறியர்களும், மதக் கடுங்கோட்பாட்டுவாதிகளும் உயர் அதிகாரத்தில் வீற்றிருக்கின்றனர். அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான கண்டோலீசா ரைஸ், அட்டர்னி ஜெனரல் ஜான் ஆஷ்கிராப்ட் பலரும் கிறித்துவ மத அடிப்படைவாதிகளேயாவர். தெற்கத்திய பரிசுத்த ஆவி திருச்சபைகளின் தலைமை நிர்வாகியான ரிச்சர்ட் லேண்ட் என்பவர், கிறித்துவ அடிப்படைவாதிகள் புஷ் நிர்வாகத்தில் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் உள்ளனர். நவீன காலத்திய வரலாற்றில் இது போல் எந்த நாட்டிலும் நடந்ததில்லை என்று பெருமிதம் கொள்கிறார்.

அமெரிக்க அதிபர் புஷ் கூட அத்தகைய தொரு கிறித்துவ அடிப்படைவாதிதான். ஈராக் மீதான ஆக்கிரமிப்பை பயங்கரவாதத்துக்கு எதிரான புனிதப் போர் என்றுதான் அவர் சித்தரிக்கிறார். சுதந்திரம் என்பது எல்லாம் வல்ல ஆண்டவர் அளித்த அருட்கொடை என்கிறார். ஈராக் மீது போர் தொடுக்குமுன்னர் எனது தந்தையிடம் (சீனியர் புஷ்) நான் கலந்தாலோசிக்கவில்லை: மாறாக, உலகின் மிகப் பெரிய தந்தையாகிய ஏசுவிடம் நான் முறையிட்டு வேண்டினேன் என்கிறார். வரப்போகும் தேர்தலில் புஷ்ஷுக்குப் போட்டியாக நிறுத்தப்பட்டுள்ள எதிர்த்தரப்பு வேட்பாளரான கெரியும் இப்புனிதப் போர் அவசியமானது என்கிறார். சுதந்திர வர்த்தகமும் மதச் சுதந்திரமும் பிரிக்க முடியாதவை என்கிறார் புஷ்ஷின் ஆன்மீக ஆலோசகரான பாதிரியார் கிரகாம். போருக்குப் பிறகு ஈராக்கில் புதிதாக 9 சர்ச்சுகளை நிறுவியுள்ளதாகப் பெருமையுடன் குறிப்பிடுகிறார். தென்கொரிய கிறித்துவ மிஷரியின் தலைவரான சன் மியாங் மூன்.

## ஈராக் ஆக்கிரமிப்பில் மறைக்கப்படும் உண்மைகள்


பாக்தாத்தில் சேர்ச் அருகே ஈராக்கிய போராளிகளால் குண்டு வீசித்தாக்கப்பட்டகிறித்துவ மிஷனரி வாகனங்களைப் பார்வையிடும் அமெரிக்கப் பாதிரி.

காலனியாதிக்கமும் கிறித்துவ மதப் பரப்புதலும் கட்டாய மத மாற்றமும் பின்னிப் பிணைந்தவை என்றாலும், இப்போது ஈராக்கில் அது புதிய பரிமாணத்துடன் மூர்க்கமாக நடக்கிறது. அதற்கு வலுவான காரணங்களும் உள்ளன என்கிறார் விஸ்கான்சிங் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை தலைவரான பால்போயர்.




ஈராக் மீதான ஆக்கிரமிப்பை இஸ்லாத்துக்கு எதிரான புனிதப் போராகவே கிறித்துவ மதவெறியர்கள் கொண்டாடுகின்றனர். ஈராக் கையடுத்து அரபு நாடுகளை ஆக்கிரமித்து. ஜெருசலேம் நகரை விடுதலை செய்யவேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றனர். ஏனெனில் இவர்கள் இயேசுவின் இரணடாவது வருகை எனும் பைபிள் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்துள்ளனர். இது வெறும் நிழலாகத் தொடரும் கற்பனாவாதமாக அல்லாமல் மிக உயிராதாரமான நம்பிக்கையாக அவர்களிடம் நிலவுகிறது. இதுவே அமெரிக்க வெளியுறவுக் கொள்ளையின் அடிநாதமாக உள்ளது. இது உலக அமைதிக்கு அச்சுறுத்தலான அபாயகரமான போக்காகும் என்று அவர் எச்சரிக்கிறார். அகண்ட பாரதக் கனவுடன் இந்து


புஷ்ஷின் நெருங்கிய கூட்டாளியும் கிறித்துவ மதவெறியனுமாகிய பாதிரி ப்ராங்ளின் கிரஹாம்.

வெறி பாசிச பயங்கரவாதிகள் பாக. மீதும் முசுலீம்கள் மீதும் படையெடுப்பு நடத்துவதை தேசபக்தியாக்கிக் கொண்டுள்ளதைப் போலவே அமெரிக்க கிறித்துவ மதவெறியர்கள் அமெரிக்க தேசப் பாதுகாப்பின் பெயரால் அரபு நாடுகளை ஆக்கிரமித்து இயேசுவின் இரண்டாவது வருகையை உறுதிப்படுத்துவதை தமது இலட்சியமாகக் கொண்டுள்ளனர். அமெரிக்காவின் புதிய நூற்றாண்டுக்கான போர்த் தந்திர திட்டம் கூட, வளைகுடா பிராந்தியம் முழுவதும் அரசியல் தூய்மைப்படுத்தலைச் செய்வதையும். இசுலாம் மதத்தைச் சீர்திருத்து வதையும் கடமைகளாகக் கொண்டுள்ளது. ஈராக் மீதான மறுகாலனிய ஆக்கிரமிப்பை மட்டுமின்றி, அதன் பின்னே மறைந்துள்ள கிறித்துவ மதவெறியர்களின் சதிகளையும் உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். இல்லையேல் நம் கையில் பைபிள் :இவர்கள் கையில் உலகம் இருக்கும்.

நன்றி- புதிய ஜனநாயகம்
அட்டோபர் 2004

## பங்களதேஷை இந்தியா பணிய வைக்குமா?

பங்களாதேசத்திற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததாக இந்தியா பெருமை பேசிவந்தது. ஆனால் இன்று பங்களாதேஷ் இந்தியாவின் மிரட்டலுக்குப் பணிய மறுக்கிறது.

அதனால் இந்தியா பல்வேறு உத்திகளைக் கைக்கொள்கிறது. பங்களா தேசத்திற்கு உரிய நீரை இந்தியா தடுப்பதாகவும் , நூறு கோடி டொலர் பெறுமதியான இருதரப்பு வர்த்தகத்தை இந்தியா கட்டுப்படுத்துவாதகவும் பங்க ளாதேசின் வெளிவிவகார அமைச்சர் எம் .மோலிகான் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்குமிடையில் (54) ஐம்பத்தி நான்கு ஆறுகள் பாய்கின்றன, இந்த ஆறுகளின் ஓட்டத்தை அவ்வப்போது இந்தியா குறுக்கீடு செய்கிறது. மழை கூடிய வேளை அதை பங்களதேசுக்குள் போவதற்கு தள்ளிவிடுகிறது. மழை குறைந்த வேளைகளில் அதை இந்தியா தேவைக்குப்பயன்படுத்தி பங்களதேசில் வறட்சியை ஏற்படுத்துகின்றது. இந்த நடவ டிக்கை சர்வதேச சட்டங்க ளுக்கு முரணானது.

இவ்வாறு தான் எதிர்காலத்தில் சேது சமுத்திரக்கால்வாய்த் திட்டத்தினால் இலங்கையை பல்வேறு வழிகளில் நசுக்க இந்தியா நீண்ட திட்டத்தைக் கொண்டுள்ளது.

லங்காதீப

4ஆம் பக்க தொடர்ச்சி

புதிய மலையகம் என்பது மலையகத் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பண்பாட்டு நிலையினை உயர்த்து வதற்காக அரசியல் கட்சிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அப்பால் செயற்படும் நோக்கம் கொண்ட வெகுஜன அமைப்பாகும். இரண்டு வருடங்களுக்கு முன்பு புதிய மலையகம் என்று ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டது. அடுத்த சஞ்சிகை இன்னும் வெளிவர வில்லை.

புதிய பண்பாட்டு அமைப்பு ஒரு கலை இலக்கிய அமைப்பாகும். அது கலை இலக்கிய வேலைகளையே முன்னெடுத்து வருகிறது.

உண்மை இவ்வாறிருக்கும் போது லங்காதீப மேற்படி இனவெறிகி ளப்பும் கட்டுரையை வெளியிட்டுள்ளமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

## நேபாளத்தின் போராட்டத்தை நசுக்க இந்தியா உதவி

நேபாளத்தில் இடம் பெற்றுவரும் விடுதலைப் போராட்டத்தின் காரணமாக பத்தாயிரம் பேர் வரை இறந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நேபாளத்தில் முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்து அங்கு மக்கள் ஆட்சியைக் கொண்டு வரும் போராட்டத்தில் போராளிகள் பெருவெற்றியடைந்து வருகின்றனர். கிராமப் புறத்தை தம் வசம் வைத்திருக்கும் போரா ளிகள் தலைநகர் காத்மாண்டுவிலும் கணிசமான செல்வாக்கு பெற்றுள்ளனர். இந்த நிலையில் நேபாளத்தில் ஆட்சி மாறாமல் இருந்தாலேயே இந்தியா நினைத்தபடி அந்த நாட்டைச் சுரண்டித் தனது கையில் வைத்திருக்க முடியும் என்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.

இந்தியா-நேபாள எல்லை 1580 கிலோமீட்டர் தூரமுடையது. இந்த கரடு முரடான மேடுபள்ளமான எல்லை யூடாகவே நேபாளத்துக்குள் ஆயுதங்கள் கொண்டு வரப்படுகிறது. அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற நேபாள ஆட்சியின் பிரதமர் எனப்படும் பகதூர் டாப்பா கிளர்ச்சியை ஒடுக்க இந்திய உதவியைக கோரியுள்ளார்.

நேரடியாக நேபாளத்தில் இராணுவரீதியில் தலையிடமாட்டோம் என உலகுக்கு அறிவித்த அதே வேளை நேபாளத்தின் அரச குடும்பத்தின் ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

கெலிக் கோப்டர்கள் ஆயுதங்கள் வெடி மருந்துகள் கண்ணிவெடி அகற்றும் கனரக வாகனங்கள் என்பவற்றை ஏற்கனவே வழங்கி வரும் இந்தியா துருப்புகளுக்கு பயிற்சியும் வழங்கி வருகின்றது.

நெடுஞ்சாலைகளை விடுதலைப் படையினர் இலக்குவைப்பதால் மேலும் அதிக எண்ணிக்கையில் கண்ணிவெடி அகற்றும் கனரக வாகனங்கள் விரைவாகத் தேவைப்படுவதாகவும் எல்லைப் புறத்தில் இந்தியா கண்காணிப்பு செய்ய வேண்டுமெனவும் நேபாள அரசு கோரியுள்ளது. இதை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

நேபாளத்தில் ஆட்சிமாறினால் அது இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்து மென்பதால் நேபாளத்து பிற்போக்கு ஆட்சியாளருக்கு முட்டுக் கொடுக்க இடதுசாரிகள் எனப்பட்டவர்களை உள்ளடக்கிய புதிய இந்திய அரசு முன்வந்துள்ளது.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தோழர் நவத்தின் மறைவு
# இடைவெளி நிரப்ப முடியாத பெரும் இழப்பு

தோழர் சி.நவரட்ணம் (நவம்) கடந்த 8-10-2004 அன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தினார்.அவரது மறைவுச் செய்தி நம் அனைவரையும் அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த துயரத்திற்கும் உள்ளாக்கியது.அவருக்கு திடீரென




1997ல் கொழும்பில் இடம் பெற்ற புதிய இடதுசாரி முன்னணி நடாத்திய மேதின ஊர்வலத்தில் புதிய ஜனநாயக கட்சி அணிக்கு தலைமை தாங்கி வந்த தோழர்களுடன் தோழர் நவம்.

ஏற்பட்ட மாரடைப்பு காரணமாகவே இறந்தார். அவரது இறப்புச் செய்தியை எவருமே எளிதில் உள்வாங்கிக் கொள்ள இயலவில்லை. அந்தளவுக்கு அவரது மரணம் சடுதியானதாக ஆகிக் கொண்டது. தோழர் நவத்தின் மறைவு அவரது குடும்பத்திற்கும் அவர் இணைந்து முன்னெடுத்து வந்த புதிய ஜனநாயகக் கட்சிக்கும் பொதுவாழ்வின் ஊடே சேவை செய்து வந்த அவரது பிரதேச மக்களுக்கும் மட்டும் மன்றி அடக்கி ஒடுக்கப்பட்டு சமூக நீதிக்காகப் போராடி வரும் உழைக்கும் மக்களுக்கும் இடைவெளி நிரப்ப முடியாத ஒரு பெரும் இழப்பாகியது.

நவத்தார் என அன்புடனும் மதிப்புடனும் தோழமையுடனும் நம் அனைவராலும் அழைக்கப்பட்டு வந்த தோழர் நவரட்ணம் தனது ஐம்பத்தியொன்பதாவது வயது முடிவுறும் தருவாயில் நம்மை விட்டு நிரந்தரமாகவே பிரிந்து கொண்டார். சொல்லாலும் செயலாலும் அன்றாட வாழ்வாலும் ஒரு நேர்மையான மாக்கிச லெனினிச வாதியாக பொது




26-09-1998 அன்று குருநாகல் நகரில் இடம் பெற்ற யுத்தத்திற்கு எதிரான சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்ட கட்சியின் தலைமைத் தோழர்களுடன் தோழர் நவம்.

வுடமை இயக்கத்தின் உணர்வு மிக்கப் புரட்சிகரப் போராளியாக வாழந்து வந்தவர் தோழர் நவம். அவரது குடும்ப வாழ்வு அரசியல் வாழ்வு பொதுவாழ்வு ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பினைந்ததாகவும் ஒன்றுக் கொன்று ஆதாரமாகவும் அமைந்திருந்தன.

1945ம்ஆண்டில் சாதாரண தொழிலாளர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தோழர் நவம் ஆரம்க்கல்வியுடன் பாடசாலைக் கல்வியை நிறுத்த வேண்டிய சமூக நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினார். பொருளாதார குடும்பச் சூலில் இளம் வயதிலேயே கட்டிடத் தொழிலாளியாகி திறமையும் நுணுக்கமும் கொண்ட மேசனாகிக் கொண்டார். அதேவேளை நேர்மை ஒழுக்கம் கட்டுப்பாடு கொண்ட இளைஞனாகவும் பரந்த வாசிப்பையும் ஆழ்ந்து விடயங்களை நோக்கும் சிந்தனைப் போக்கையும் வளர்த்துக் கொண்டார். அதனால் ஆரம்பத்தில் சமூக அக்கறை மிக்க இளைஞனாக முன்னுக்கு வந்த நவத்தாரை 1960 பதுகளின் நடுக்கூறிலே மாக்கிச லெனினிசத்தின் புரட்சிகர வீச்சலைகள் பற்றிக் கொண்டன. அவ ரது தீவிரவாசிப்பும் செய ல்பட வேண்டும் என்ற இளமைத்துடிப்பும் பொதுவுடமை இயக் கத்தின் மீது நாட்டம் கொள்ளவைத்து. 1964ல் வாலிபர் இயக்கத்திலும்,1965ல் தோழர் சண்முகதாசன் தலைமையிலான மாக்கிச லெனினிசக் கட்சியிலும் அங்கத்துவம் பெற்றார். அன்றிலிருந்து தனது இறப்பு வரை வழி விலகாத அடிபிசகாத நேர்மையான மாக்கிச லெனினிசவாதிகவே வாழ்ந்து செயலாற்றி பணிபுரிந்தும் வந்தார்.

தோழர் நவம் மூன்று நிலைகளில் நின்று செயல்புரிந்து வந்த சோர்வடையாப் புரட்சிகரப் பொதுவுடமை வாதியாக இருந்து வந்தார். ஒன்று தொழிலாளி வர்க்க கட்சியில் முன்னணியில் இருந்து வந்தமை. இரண்டாவது கட்சியின் வெகுஜன இயக்கங்களில் பங்கு கொண்டிருந்தமை. மூன்று பொது வாழ்வில் கருத்து வேறுபாடு கொண்டவர்களுடனும் மக்களின் நலன்களுக்காக ஐக்கியப்பட்டு சேவை செய்து வந்தமை. இவற்றுடன் கூடவே குடும்பத்தை கஷ்டங்கள் துன்பங்கள் மத்தியில் தனது துணைவியாருடனும் பிள்ளைகளுடனும் இணைந்து முன்னெடுத்து வந்தமை.

தோழர் நவம் ஆரம்பம் முதலே தத்துவத்திலும் அரசியல் நடைமுறைகளிலும் மாக்கிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனையைப் பற்றி நின்று அதன் வளர்ச் சியோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவர். கட்சியை விரிவுபடு த்தும் அமைப்பு ரீதியான வேலைக ளிலும் அதன் பகுதியாகிய வாலிபர் இயக்கத்தை கட்டியெழுப்புவதிலும் முன்னின்று செயற்பட்டு வந்தவர். இளம் வயதின் ஆரம்ப நாட்களில் திராவிட இயக்க கருத்துகளின் பால் கவனத்தைக் கொண்டிருந்த போதிலும் பொதுவுடமை இயக்க த்தில் இணைந்து கொண்ட பின் தனது வர்க்க உணர்வை வளர்ப்பதிலும் வெளிப்படுத்துவதிலும் பாட்டாளிவர்க்க புரட்சிகரப்போர்க்குணத்தைப் பிரதிபலிக்கும் ஒரு வராகவே தோழர் நவத்தைக் காணமுடிந்தது. அவர் வர்க்க விரோதிகள் பிற்போக்குவாதிகள் சாதி வெறியர்கள் என்போருக்கு எதிரான நிலைப்பாட்டில் வர்க்க சமரசத்திற்கு இடமின்றி மாக்கிசலெனினிச நிலைப்பட்டை முன்னெடுப்பவராக இருந்தார். காலத்திற்கு காலம் கட்சி இயக்கத்திற்குள் முன் வைக்கப்பட்ட தவறான கொள்கையையும் பிறழ்வுகளையும் எதிர்த்துப்போராடுவதிலும் மாக்சிச லெனினிசத்தின்புரட்சிகர அம்சங்களைப் பாதுகாப்பதிலும் தோழர் நவம் எப்பொழுதும் முன்னணியில் இருந்து வந்தார். நவீன திரிபுவாதத்தை எதிர்த்து நிராகரித்ததுடன் சீர்திருத்த பாராளுமன்றப் பாதையையும் தூக்கி எறிவதில் ஏனைய தோழர்களுடன் இணைந்து கடுமையான உட்கட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டார்.1972ல் கட்சியின் வடபிரதேசக் குழுவிலும் அதன் வாலிபர்இயக்கத்தின் தலைமைக் குழுவிலும் இருந்து செயலாற்றினார். 1978ல் மாக்சிச லெனினிச கட்சி இயக்கத்தை கட்டிக் காத்து அமைப்பு ரீதியிலும் வெகுஜன வழிகளிலும் முன்னெடுக்கும் முடி வைத் தோழர் கே.ஏ. சுப்பிரமணிய த்தின்



தலைமையில் எடுத்த தோழர் களில் தோழர் நவம் முக்கியமான ஒருவராக இருந்தார். அதனால் புதிய ஜனநாயகக்கட்சி 1978ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது) என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட வேளை அதன் ஆரம்பத் தலைமைக் குழுவில் ஒருவராகத் தேர்ந்தெடுக்க ப்பட்டார். அதன் பின் நடைபெற்ற கட்சியின் நான்கு தேசிய மாநாடு களிலும் மத்திய குழுவிற்கும் அதன் அரசியல் குழுவிற்கும் தோழர் நவம் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்தார்.

தோழர் நவம் கடந்த நாற்பது வருட பொதுவுடமை இயக்க அரசியல் வாழ்வில் சாதாரண வாலிபர் இயக்க- கட்சி உறுப்புரிமையில் ஆரம்பித்து ஒவ்வோரு காலகட்டத் திலும் வளர் ச்சி பெற்று கட்சியின் உயர் தலை மை பீடத்தில் தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களில் ஒருவராகி தலைமைத் தோழராக நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எந்த நெருக்கடி மிக்க சந்தர்ப்பத்திலும் கட்சி எடுக்கும் எத்தகைய முடிவையும் தயக்கமோ சோர்வோ அல்லது அச்சமோ பின்னடிப்போ இன்றி முன்னெடுத்துச் சென்ற பொதுவுடமை இயக்கப் புரட்சிகரப் போராளியாகவே தோழர் நவம் இருந்து வந்தார். கட்சிக்குள் முடிவுகள் எடுக்கு முன் தனது கருத்தை திறந்த மனத்துடன் முன்வைத்து விவாதிப்பதில் அவர் முன்நிற்பார். சில சமயங்களில் கடுமையான கருத்து மோதல்களில் கூட தோழர்களுடன் ஈடுபடுவார். அவ் வேளைகளில் மிக உணர்ச்சிவசப்பட்டவராகவும் காணப்படுவார். ஆனால் விரிவானதும் அரசியல் தத்துவார்த்த அடிப்படையிலும் நிதானமாக விடயங்கள் அணுகப்பட்டு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்ட பின் தனக்கு அதில் முரண்பாடு இருந்த போதிலும் முடிவுகளை முன்னெடுத்து செயலாக்குவதில் அவர் முன்னணிப் பாத்திரம் வகிப்பவராகவே இருப்பார். இந்த நடைமுறை ஒரு கம்யூனிஸ்ட்டுக்குரிய முன்னுதாரணமாக அவரிடம் இருந்து வந்தது.

கட்சியைக் கட்டியெழுப்பி முன்னெடுப்பதில் காட்டிய அதே அளவு ஆர்வத்தை வெகுஜன இயக்கங்களையும் அவற்றின் போராட்டங்களை முன்னெடுப்பதில் தோழர் நவம் முன்நின்று வந்தார். சாதி ஒடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியும் அதன் பாதையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டங்களிலும் தோழர் நவம் முன்னணிப்போராளிகளில் ஒருவராக இருந்து வந்தார். எவ் கெங்கு சட்ட ரீதியாகவும் சட்டமறுப்பாகவும் போராட்டங்கள் இடம் பெற்றனவோ அங்கெல்லாம் தோழர் நவம் பொறுப் புடனும் நிதானத்துடனும் இருந்துவந்தார். கட்சிக்கும் மக்களுக்கும் பதில் கூறும் பொறுப்புடைய தோழ ராகவே நவத்தார் செயல்பட்டு வந் தார்.



புதிய ஜனநாயக கட்சியின் மூன்றாவது தேசிய மாநாட்டில் தோழர் நவம் உரையாற்றுகிறார்.

அன்றைய போராட்டங்களில் பெற்ற அனுபங்களும் உணர்வுகளும் இறுதிவரை எவ்வித தளர்வும் இன்றி அவரிடம் இருந்து வந்தது. சாதி ஒடுக்கு முறை தீண்டாமைக்கு எதிரான வெகுஜனக் போராட்டங்களுக்குப் பின் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான ஆயுதப் போராட்டங்களும் வெகுஜன இயக்கங்களும் தமிழ் இளைஞர்கள் ஊடே அரங்கிற்கு வந்தன. இக் காலகட்டத்தில் புதிய ஜனநாயக கட்சி வகுத்துக் கொண்ட மார்க்கம், பேரினவாத ஆளும் வர்க்கத்தை எதிர்த்து சுயநிர்ணய உரிமைக்கான வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுப்பது என்ப தாகும் . இதனை முன்னெடுப்பதில் தோழர் நவம் எப்போழுதும் முன்நிற்பவராகவும் உறுதியான நிலைப்பாட்டுடன் செயல்படுபவராகவும் இருந்து வந்தார்.



தோழர் நவத்திற்கு அரிவாள் சம்மட்டி கொண்ட செங் கொடி போர்த்தப்பட்டு கட்சியின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் தலைமையில் நடைபெற்றது.

பேரினவாத யுத்த எதிர்ப்பு. அரசாங்கங்களின் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள், தொழிலாளர்கள் விவசாயிகளின் உரிமைகள் என்பன வற்றுக்கான கோரிக்கைகளில் வடபுலத்தில் கட்சியைப் பிரதிநிதி த்துவம் செய்வதில் தோழர் நவம் முக்கியமான வராக இருந்து வந்தார்.

வடபுலத்தில் மட்டுமன்றி கொழும்பில் வசிக்க நேரிட்ட காலப்பகுதியில் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் குறிப்பாக மலையகப் பகுதிகளிலும் இடம் பெற்ற வெகுஜனப் போராட்டங்களில் தோழர் நவம் பங்கொள்ளவும் முன்நிற்கவும் தயங்கியது கிடையாது. யுத்தத்திற்கு எதிராகவும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வை வலியுறுததியும் தென்னிலங்கையில் புதிய ஜனநாயாக கட்சியும் ஏனைய இடதுசாரி ஜனநாயக சத்திகளும் முன்னெடுத்த வெகுஜனப் போராட்டங்ககளில் தோழர் நவம் பங்கு கொண்டிருந்தார்.

அரசியல் அரங்கிலும் சரி கலை இலக்கியத் தளங்களிலும் சரி மாக்சிச விரோதிகளுக்கும் சீர்குலைவாளர்களுக்கும் எதிராக உறுதி மிக்க செயற்பாட்டளராக இருந்தும் வந்தார். மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை மீதான பற்றுறுதியும் இலட்சிய தாகமும் அவரிடம் வற்றாத ஊற்றாகவே இருந்து வந்தது. கடந்த காலத்தில் மாக்சிச லெனினிச வாதிகள் எனப் பெயரெடுத்த சிலர் பலவழிகளிலும் சீரழிந்து பாராளுமன்ற வாதிகளாகவும் சீர்திருத்த வாதிகளாகவும் மாறிக் கொண்டு வர்க்க சமரசம் கண்டு கொண்டனர். வேறு சிலர் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவகர்களாகி வயிற்றுப் பிழைப்புக் காக அதன் அடிமை விசு வாசிக ளாகிக் கொண்டனர். இவர்கள் அனைவரும் மாக்கிசத்தையும் சோஷலிசத்தையும் பின்னால் இருந்து குத்தவும் தாக்கவும் செய்தனர். இவற்றை எதிர்த்து நிற்பதில் தோழர் நவம் உறுதியான நிதானமான நிலைப்பாட்டில் நின்று கட்சியின் ஊடேசெயலாற்றி வருபவராக இருந்தார் என்பது முக்கியமானதாகும். இவ்வாறான கொள்கை இலட்சியப் பிடிப்புடன் செயலாற்றி வந்த தோழர் நவம் பொது வாழ்வில் தனது கொள்கையுடன் உடன் பாடுகாண முடியாதவர்களுடனும் ஐக்கியப்பட்டு தான் வாழ்ந்து வந்த பகுதி மக்களுக்குப் பொதுப் பணி புரிவதில் பங்குகொண்டு உழைத்தும் வந்தார். தான் வாழ்ந்து வந்த பகுதியின் மக்கள் மத்தியில் இருந்து வந்த சனசமூக நிலையத்தின் ஊடே பொதுவாழ்வில் ஊக்கத்துடன் செயல்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்தாகும். கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவராக தேர்தெடுக்கப்பட்ட நவத்தார் அதன் பன்முக வளர்ச்சிக்கு வழிகாட்டி செயலாற்றினார். அவரது தலைமையிலேயே மேற்படி சன சமூக நிலையம் அண்மையில் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டது. இதன் மூலம் அப்பகுதி மக்கள் தோழர் நவத்தார் மீது தமக்கிருந்த அன்பையும் ஆதரவையும்

தொடர்ச்சி 11ம் பக்கம்

# பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும்

அருட்திரு பெஞ்சமின் ஜெயராஜா, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனாமடம், சுன்னாகம், மார்ச் 2004,
136 ப., ரூ. 200/=

கிறிஸ்தவ வரலாற்றுத் துறையில் முதுநிலை இறையியற் பட்டத்திற்காக ஆசிரியர் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. நூலின் உள்ளடக்கம் யாழ்ப்பாணத்திற் சாதியமும் அதற்கெதிரான செயற்பாடுகளையும் கிறிஸ்துவத் திருச்சபையினரும் கிறிஸ்துவர்களும் சாதியம் தொடர்பாக எடுத்த நிலைப்பாடுகளையும் பற்றியது.

இந்த நூல் ஒரு விரிவான ஆய்வு நூல் என்று கூறுவது கடினம். ஒருபுறம் வேளாளரது மேலாதிக்கத்தைத் தகர்ப்பதிலும் தாழ்த்தப்பட்ட மக்களை விடுவிப்பதிலும் கிறிஸ்துவ மதத்தின் வருகையும் சமூக உணர்வுள்ள கிறிஸ்துவர்களது பங்கும் முக்கியமாயிருந்த போதும் கிறிஸ்துவ நிறுவனம் சாதியத்துடன் சமரசம் செய்துள்ளது என்பது இந்த நூலில் ஏற்கப் பட்டுள்ளது முக்கியமான ஒரு விடயமாகும். நூலாசிரியரால் அதற்கும் அப்பாற் சென்று கிறிஸ்துவ நிறுவனத்தை முழுமையாக விமர்சித்திருக்க முடியுமா என்பது நிச்சயமற்றது.

சாதியத்திற்கெதிரான போராட்டத்தில் மும்முரமாக உழைத்தவர்கள், குறிப்பாக 1960களில் எழுச்சிகளில் பங்குபற்றியவர்கள், மாக்ஸியவாதிகளாதலால் அவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் உரிய முக்கியத்துவம் பெற்றுள்ளன. அதே வேளை போராட்டம் பற்றிய சரியான வர்க்கப் பார்வையின்றி விளிம்பிலிருந்து விமர்சித்துப் போராட்டத்தைச் சாதிகட்கிடையிலான போராட்டமாக்க கொச்சைப்படுத்த முயன்றவர்களது கருத்துக்களும் உள்ளடங்கியிருக்கின்றன.

ஆதாரங்களற்று வெறும் ஊகத்தின் அடிப்படையில் சில 'அறிஞர்கள்' சொல்கிறவற்றை விமர்சிப்பதற்கு ஆசிரியர் காட்டும் தயக்கம் இது போன்ற நூலுக்குத் தகாதது. உதாரணமாக "தலித் மக்களின் சமயம் பௌத்தம்" என்று அயோத்திதாசர் சொன்னதை மேலும் விரிவுபடுத்திக் போரிற் கைப்பற்றப்பட்ட சிங்களவர்களே யாழ்ப்பாணத்தின் பஞ்சமர் என்று பேராசிரியர் குமாரி ஜயவர்த்தன கூறியதை ஏற்க இயலாமையை நூலாசிரியர் மிகவும் தயக்கத்துடனேயே தொட்டுக் காட்டுகிறார்.

ஆறுமுக நாவலரின் நோக்கங்கள் பற்றி பேராசிரியர் சிவத்தம்பி கூறுவன அதிக ஆய்வின்றி அப்படியே எழுத்தாளப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சியைச் சைவத்தமிழ் கருத்து நிலைவாதிகள் ஒரு கிறிஸ்தவ சூழ்ச்சியாகவே தொடக்கத்திற் கருதினார்களென்ற கருத்து, தமிழரசுக்கட்சியைத் தோற்றுவித்த தலைவர்களில் கிறிஸ்தவர்களான இருவரும் அதே சைவத்தமிழ்க் கருத்து நிலைவாதிகளது அரசியல் தலை




மையால் 1947ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டவர்களே. 1947 தேர்தலில் சைவர்கள் அதிகளவிலிருந்த ஒரு தொகுதியில் தான் முன்பு ஆதரித்த செல்வநாயகத்தை 1952ல் எதிர்ப்பதற்காக செல்வநாயகம் கிறிஸ்தவன் என்ற பிரசாரத்தை ஜி.ஜி. பொன்னம்பலம் பாவித்தார். (அவருடைய சகோதரர் கத்தோலிக்கராகிப் பாதிரியாரானது வேறு கதை). அந்தப் பிரசாரம் ஏன் 1956ல் எடுபடவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். சைவ கிறிஸ்தவ வேளாளரது முரண்பாட்டில் சாதிய, வர்க்க நலன்கள் நெருக்கத்தை வற்புறுத்தின.

கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியினர் போக, முக்கியமாகப் பிற்காலத்தில் படிப்பு, தொழிற் தேவைகட்காக மதம் மாறியவர்கட்கும் சைவர்கட்குமிடையே பெரிதாக முரண்பாடுகள் இருக்கவில்லை. சைவ-கிறிஸ்தவ திருமண உறவுகள் இன்றுவரை உள்ளன. இங்கு சாதியினளவுக்குச்சமயம் முக்கியமானதில்லை. எனினும், கத்தோலிக்கர்களைப் பொறுத் தவரை சமயம் கூடிய முக்கியத்துவம் பெறுகிறது. இவ்விடயத்தை நூலாசிரியர் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் மொழி வேறுபாடும் பௌத்த-சைவ மத வேறுபாடும் சாதி உடன்பாட்டைவிட அற்பமானவையாயிருந்தது இங்கு ஒப்பிடத்தக்கது.

நூலிற் பொதுவாகவே சாதியம் சைவர்களிடையிலும் கத்தோலிக்கரிடையிலும் கடைப்பிடிக்கப்பட்ட அளவு இறுக்கமாக கிறிஸ்தவர்களிலே கடைப்பிடிக்கப்படவில்லை என்ற நிலைப்பாட்டைக் காணலாம். இதற்கு நூலாசிரியர் கிறிஸ்துவர்களிடையே மேற்கொண்ட ஆய்வுகளின் அளவு போதாதிருப்பதும் ஒரு காரணமாயிருக்கலாம். குறிப்பாக, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களிற் பெரும் பகுதியை மூன்று பேருடனானவை ஆதிக்கம் செலுத்துகின்றன. சாதியம் தொடர்பான ஆவணப்படுத்தல் போதாது. இத்தகைய ஆய்வுகள் அக்குறையை நிறைவு செய்ய வேண்டியது அவசியம். இவ்விடயத்தில் நூலாசிரியர் மேற்கொண்ட கள ஆய்வுகள் பலவீனமானவை. உயர்பட்டப்படிப்பு ஆய்வு ஒன்றை நூலாக்கும் போத இந்த இடைவெளியை அவர் நிறைவு செய்திருக்கலாம்.

சாதியத்தின் வர்க்கச் சார்பை நூலாசிரியர் அடையாளங் கண்டிருந் தால் அது யாழ்ப்பாணச் சமுதாயத்திற் செயற்பட்ட வித்தை விளக்குவது அவருக்கு எளிதாக இருந்திருக்கும். எவ்வாறாயினும், நூலாசிரியர் சாதியடிப்படை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நின்று, சமூக நீதிக்கான அவர்களது போராட்டங்களைத் தயங்காமல் ஆதரிப்பது மெச்சத்த க்கது. திருச்சபையின் உறுப்பினராயிரு ந்தும் திருச்சபையின் அதிகார மனப்பான்மையையும் செயலூக்கமின்மையையும் அவர் விமர்சிக்கத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியாக தமிழ்ச் சமூகத்தின் மதப் பிரிவுகளில் சாதியம் பற்றி மேலும் ஆழமான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- சிவா -

# வீரப்பன் மட்டும் தான் கொள்ளைக்காரனா? நவீன கொள்ளையர்களும் சுடப்படுவார்களா?

தமிழக-கர்நாடக அரசுகளுக்கும் அவர்களது பொலீஸ் படைக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கி வந்த வீரப்பனும் அவனது கூட்டாளிகள் மூவரும் தமிழக அதிரடிப் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழக அரசும்அதிரடிப் பொலிசும் வெளியிடும் தகவல்களைப் பத்திரிகைகள் பரபரப்புச் செய்திகளாக்கி வருகின்றன. இல்லாத பொல்லாத பொய்களும் புழுகுகளும் பழிகளும் வீரப்பன் மீது சுமத்தப்பட்டு தாங்கள் செய்த கொலைகளுக்கு நியாயம் தேடும் வகையில் அரசும் பொலிசும் இட்டுக் கட்டுக்களைப் பரப்பி வருகின்றன. இவற்றுக்கு அப்பால் ஏன்? எப்படி? எதற்காக? என்ற கேள்விகள் கேட்கப்படவில்லை. ஏனெனில் வீரப்பன் மிகப் பெரிய கொள்ளைக்காரன் கடத்தல் காரன் கொலைகாரன் ஈவிரக்கமற்றவன் என்ற பிரச்சாரமும் படிமமும் ஏற்கனவே பரப்பட்டுவிட்டது. அவனது துப்பாக்கி தாங்கிய உருவமும் பருத்த மீசையும் கூட பத்திரிகைகளின் கோணங்களின் ஊடே பயங்கரத்தைப் பரப்ப உதவியுள்ளன.

இன்றைய ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் சமூக அநீதிகளும் ஒடுக்குமுறைகளும் கொண்ட கொடூர சமூக அமைப்பில் அது வகுத்த சட்டம் ஒழுங்கு யாப்பு விதிகள் என்பனவற்றிற்கு அப்பால் கொள்ளையர்கள் கொலைகாரர்கள் என்றழைக்கப்படுவோர் எவ்வாறு உருவாகின்றனர் என்பதைச் சரியான சிந்தனைப் பொறிகளின் ஊடே பார்ப்பவர்களுக்கு வீரப்பன் விவகாரம் சர்வசாதாரணமானதேயாகும்.

வீரப்பன் என்ற தனிமனிதனையும் அவனையும் சேர்ந்த சிலரையும் கொள்ளை கடத்தல் கொலைகாரர்களாக்கிய கொடிய சமூகச் சூழல் பற்றியோ அவர்கள் மூலம் பயனடைந்த பகல் வேஷஅரசியல் தலைவர்கள் பற்றியோ பணம் சேர்த்த பெரு முதலைகள் பற்றியோ அல்லது உயர் பொலிஸ் அதிகாரிகள் பற்றியோ யாரும் கேள்வி கேட்டு ஆராய முற்படுவதில்லை. உயிரோடு பிடிக்கப்பட்டிருந்தால் பல உண்மைகள் வெளிவரக் கூடும் என்பதாலேயே கையோடு கம்மாரிசாக கொலைகள் நிகழ்த்தப்பட்டன என்றும் கூறப்படுகின்றது. இதில் உண்மை இல்லை என யாரும் வாதிடமுடியாது.

வீரப்பன் மீது சுமத்தப்படும் கொள்ளை, யானைத் தந்தம் கடத்தல், கொலைகள், ஆட்கடத்தல்கள் போன்ற பாரிய குற்றச் செயல்கள் வீரப்பன் என்ற தனிமனிதனுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் மட்டும் உரிய குற்றச்சாட்டுக்களா? அல்லது இதே குற்றச்சாட்டுகள் சுமத்தக் கூடியவர்கள் தமிழகத்திலும் இந்தியாவிலும் இல்லையா என்பது ஒரு கணம் சிந்திக்கப்பட வேண்டும்.

சட்டத்தையும் அரசியல் யாப்பையும் ஏனைய நிர்வாக ஒழுங்குகளையும் தங்களது கைகளில் எடுத்துக் கொண்டு கோடிகோடியாகப் பணக் கொள்ளையில் ஈடுபடுவர்களையும் தொழிலாளர்கள் முதல் பச்சிளம் பாலகர்கள் வரையானவர்களிடம் சுரண்டல் நடத்தும் முதலாளிகளையும் எத்தகைய கொள்ளையர் வரிசையில் வைப்பது. அடியாட்கள் கும்பல்களை வைத்து போதைப் பொருள் உட்பட சகல கடத்தல்களையும் நடாத்தி வரும் நாகரீக கட த்தல் காரர்களை எங்கு வைப்பது. சட்டரீதியாகக்கிடைத்த துப் பாக்கிகளைக் கொண்டு ஒன்றுமறி யாதவர்களையும் பெண்களையும் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ் த்தப்பட்ட மக்களையும் கொலை செய்து வரும் பொலீஸ் படையினரை எந்தக் கூண்டில் நிறுத்துவது.

யாவற்றுக்கும் மேலால் அரசியலில் வந்து ஆளுவோராக மாறித் தங்களையும் குடும்பத்தவரையும் நெருங்கிய உறவினர்களையும் மாட மாளிகைகளிலும் கோடகோபுரங்களிலும் உயர்த்திக் கொண்ட அரசியல் தலைமைகளை எத்தகைய கொள்ளையர்கள் என அழைத்துக் கொள்வது. பாரளுமன்றம் சட்டசபை என்பனவற்றின் ஊடே எத்தனை கோடிகள் கொள்ளையிடப்பட்டன. எத்தனை கொலைகள் புரியப் பட்டன. தமிழகத்தில் கருணாநிதியின் குடும்ப சொத்து விபரம் முழுமையாக வெளியிடப்படுமானால் அத்தனையும் எவ்வாறு கொள்ளையிடப்பட்டது என்பதை எவரும் கவனத்தில் கொள்வதில்லை. ஜெயலலிதா-சசிகலா கூட்டாளிகள் ஆட்சியதிக் காரத்தின் மூலம் கொள்ளையிட்ட கோடிக் கணக்கான சொத்தை எந்தக் கொள்ளையர் வரிசையில் வைப்பது.மேற்கூறிய கருணாநிதி ஜெயலலிதா ஆட்சியதிகாரத்தின் கீழ் எத்தனை முதலாளிகள், கடத்தல் காரர்கள், தாதாக்கள் மக்களிடம் கொள்ளையிட்டு கொண்டனர். இன்றும் அதேவழியில் இத்தகைய கொள்ளையர்கள் தமிழகம் பூராவும் மட்டுமன்றிஇந்தியா முழுவதும் இருந்து வருகின்றனர்.

இத்தகைய கொள்ளையர்கள், கடத்தல்காரர்கள், கொலை காரர்களுக்கும் வீரப்பனுக்கும் உள்ள வேறுபாடு என்ன? என்பதே நோக்கப்பட வேண்டியாதாகும். முன்னைய வகையைச் சேர்ந்தோர் அரசியலமைப்பையும் சட்டத்தையும் நீதி நிர்வாகத்தையும் அரசுயந்திரமான ஆயுதப்படைகளையும் வளைத்து தமக்குச் சாதகமாக்கித் தமது கொள்ளை கொலை கடத்தல் தொழில்களை பல்வேறு தளங்களில் செய்து வருகினறனர். இவர்கள் தலைவர்களாக, அதிமுக்கிய பிரமுகர்களாக, சமூக அந்தஸ்து பெற்ற கனவான்களாக, பட்டம் பதவி பெற்ற மனிதர்களாகப்பவனி வந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய நடைமுறைகளுக்கு அப்பால் வீரப்பன் என்ற தனிமனிதன் இன்றைய சமூக பொருளாதர சூழலில் சட்டத்தையும் நிர்வாக ஒழுங்கு முறைகளையும் தூக்கி வீசி விட்டு செயல்பட்டதினால் பயங்கரக் கொள்ளைக்காரன், கடத்தல் காரன், கொலைகாரன் என்ற பகிரங்க பட்டங்களைப் பெற்றுக்கொண்டான். அவனது துணிவும் ஆற்றலும் தன் னம்பிக்கையும் தமிழக அரசையும் அதன் பொலிஸ் படையையும் திணறடித்து வந்தது. ஊடகங்கள் வழமை போன்று வீரப்பனைப்பற்றிய பிரச்சாரத்தால் மறைவில் இருந்து வரும் கொள்ளையர்களை பாதுகாத்துக் வீரப்ப னை கொன்றளித்த அதிரடிப் பொலீஸ் படைக்கு பாராட்டும் பரிசுக ளும் வழங்குகின்றது. ஆனால் நவீனப் போர்வைகளில் இரு ந்து வரும் மக்கள் விரோதிகளான கொள்ளையர்கள் சுடப்பட்டு கொன்றளிக்கப்படுவது எப்போது?

## சொற்கள்

*அமைதி தொடர்வதையே தாம் விரும்புவதாயும்*
*போர் மீளுவதை விரும்பவில்லை என்றும்*
*எல்லாரும் சொல்கிறார்கள்.*
*அரசாங்கம் சொல்கிறது, எதிர்க்கட்சி சொல்கிறது.*
*இரண்டிற்கும் உள்ளிருந்தும் வெளியிருந்தும்*
*தீர்வு ஆலோசனைகளை ஆதரிப்போர் சொல்கிறார்கள்,*
*எதிர்ப்போரும் சொல்கிறார்கள்.*
*விடுதலைப்புலிகள் சொல்கிறார்கள்,*
*அவர்களை விமர்சிப்போரும் சொல்கிறார்கள்.*
*இராணுவ உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போதும்*
*இந்திய அரசாங்கம் சொல்கிறது,*
*அமெரிக்க அரசாங்கம் சொல்கிறது.*
*போரிட்ட இருதரப்பிலும்*
*படை திரட்டப்பட்டு, ஆயுதங்கள் குவிக்கப்பட்டுப்*
*போர்ப் பயிற்சி மும்முரமாகும் போதும்*
*இரு தரப்பினரது சார்பிலும்*
*இடைத் தரகர் சார்பிலும்*
*எதிலுஞ் சாராதவர் சார்பிலும்*
*குழப்பு வோர் சார்பிலும் குழப்ப இயலாதோர் சார்பிலும்*
*அமைதி தொடரும் எனவும்*
*போர் மீளவும் மூளாது எனவும்*
*உத்தரவாதத்துடன் உறுதி மொழிகள் சொல்லப்படுகின்றன.*
*கொலைகளும் வன்முறையும் தொடர்கையில்*
*எல்லாரும் எல்லாவற்றையும் கண்டிக்காத போதும்*
*எல்லாமும் எவராலோ எப்போதோ கண்டிக்கப் படுகின்றன.*
*போர் நிகழ்ந்த மண்ணில்*
*போர் நிகழ்ந்த போதிற் போல் வாழ்க்கை தொடர்கிறது.*
*போரில்லாத ஒரு போரும் அமைதியில்லாத ஒரு அமைதியும்*
*தொடர்கின்றன*
*போரையும் அமைதியையும் தீர்வையும் பற்றிக்*
*காதில் விழும் செயல் இழந்த ஒவ்வொரு சொல்லும்*
*இந்நாட்டை மீளவும் போரை நோக்கித் தள்ளுகின்றன.*

-ஸ்வப்னா-

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தால் வடக்கு கிழக்கு பாதிப்படையும்

இந்திய அரசினால் அமுல்படுத்தப்ப டவுள்ள சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டம் கடுமையான விவா தங்களைக் கிளப்பி நிற்கின்றது. தமி ழகத்தில் மீனவர்கள், சூழலியலாள ர்கள், புவியியல் நிபுணர்கள் மத்தியில் சந்தேகங்களையும் வலுப்படுத்தி வருகின்றது. இதனால் தமிழகத்தில் சேது கால்வாய்த்திட்டத்தினால் தமிழக மீனவர்களுக்கும் கரையோர மக்களுக்கும் ஏற்படப்போகும் பாதிப்புகள் பற்றிய அச்சம் பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டு வருகின் றது. இதனால் இத்திட்டத்திற்கு உரிமை கொண்டாடி ஆதரித்து வரும் தி.மு.க, ம.தி. மு. அ.தி. மு.க என் பன எதிர்ப்புகளைச் சமாளிக்க முடி யாது தடுமாறுகின்றன. தி.மு.க தலைவர் கருணாநிதி சேதுசமுத் திரக் கால்வாய்த் திட்டத்தை எதி ர்ப்போர் சிங்களவர்களின் கைக் கூலிகள் என்று இலகுவான வசன த்தில் திட்டித் தீர்த்துள்ளதன் மூலம் எதிர்ப்பின் அளவைக் கண்டு கொள் ளலாம்.

மேலும் இந்தியாவிற்கும் இலங்கை க்குமான ஒடுங்கிய நீரிணைப் பகு தியில் வெட்டப்படும் கால்வாய் பற்றி யும் அதன் சாதக பாதக நிலை பற்றி யும் கட்டாயம் இந்திய அரசு இலங் கை அரசுடன் கலந்தாலோசனை செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.ஏனெனில் ஆதிக்க மனப்பான்மையும் அயல் நாட்டை மதிக்காத அகங்காரப் போக்கிலேயேயாகும்.இதனை தி.மு. க. வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தனது கூற்றில் வெளி ப்படுத்தியுள்ளார்.நமது திட்டத்தை நமது கடலில் நிறைவேற்றுவதற்கு ஏன் மற்றவர்களிடம் (இலங்கை யிடம்) நாம் கேட்க வேண்டும் எனத் திமிருடன் கூறி உள்ளார். ஆனால் சர்வதேச அணுகுமுறையின் கீழும் அயல் நாடுகளுடனான புரிந்து ணர்வு அடிப்படையிலும் இத்திட்டம் பற்றி முன்னரே இந்தியா இலங்கை யுடன் பேசியிருக்க வேண்டும். அதுவே சர்வதேச நியாய நியதியுமா கும்.

இவை ஒரு புறமிருக்க இலங்கையில் சேது சமுத்திரத்திட்டம் பற்றிய வெவ் வேறுதளங்களிலான உணர்வலை கள் ஆங்காங்கே வெளிவந்துள்ள போதிலும் ஒட்டுமொத்தமான ஆய் வும் கணிப்பும் முடிவுகளும் தெளி வாக வெளிவரவில்லை. முற்றுமுழு தாக இலங்கை முழுவதையும் பாதி க்கச் செய்யும் இத்திட்டத்தை குறுகிய நிலைகளுக்கு ஊடாகவே நோக்கப்படும் அவலத்தையே காண முடிகிறது. தென்னிலங்கைத் துறை முகங்களின் முக்கியத்துவமும் பொருளாதார இழப்புக்களும் ஏற்படப் போகின்றன என்ற கவலை களுக்கு அப்பால் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் பாதிக்கப்படும் அபா யத்தை பெரிதுபடுத்ததாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் இன் றுள்ள சூழலில் வடக்கு கிழக்கில் இடம் பெறும் தேசிய இன விடு




தலைப்போராட்டத்தை நலிவடையச் செய்வதற்கு இத் திட்டம் உதவக் கூடும் என்ற நப்பாசையால் பேரின வாத சக்திகள் தமது எதிர்ப்பைக் காட்டாது விடும் நிலை காணப்படுகி ன்றது. ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தமது ஆதர வைத் தெரிவித்து விட்டார். ஐ.ம.சு. மு.அரசங்கம் உத்தியோக பூர்வமான எதிர்ப்பையோ ஆதரவையோ தெரி விக்கவில்லை.வெளிவிவகார அமை ச்சர் மட்டும் ஒரு சந்தர்ப்பத்தில் தன து அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளார்.

இப்பொழுது சேது சமுத்திரக் கால் வாய்த் திட்டத்தால் ஏற்படப் போகும் விளைவுகளை பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஆய்வும் அறிக்கையும் எவ்வாறு அமையப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டி யுள்ளது.

ஆனால் ஏற்கனவே அரசியல் ஆய்வாளர்கள், புவியியலாளர்கள், சூழலியலார்கள், பொருளியல் வல்லு னர்கள் உட்பட பலர் தூரநோக்கில் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் இலங்கைக்கும் குறிப்பாக வடக்கு கிழக்கின் எதிர் காலத்திற்கும் அழிவு தரும் அச்சுறுத்தலாக அமைகின்றது எனச் சுட்டிக் காட்டி வருகின்றனர். அதேவேளை சில கல்வியாளர்கள், புவியியலாளர்கள் இந்திய நலன் விரும்பிகள் எனப் பட்டவர்கள் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு வக்காலத்து வாங்கி நியாயப் படுத் தல்களைச் செய்து வருகின்றனர். சேது சமுத்திரக் கால்வாய் வெட்ட ப்படுவதால் மீன் வளத்திற்கு ஆதார மாக இருந்துவரும் பவளப் பாறை கள் அழிக்கப்படும். கடற் பூங்கா என அழைக்கப்படும் பாக்ஜலசந்தியும் மன்னார் வளைகுடாவும் மீன்கள் மற்றும் கடல் உயிரின விருத்திக்கு ரிய வளமான கடல் பிரதேசமாகும். இப்பிரதேசம் சேது சமுத்திரத்திட்ட த்தால் பாதிக்கப்பட்டு மீன் மற்றும் கடல் உயிரினங்களின் உற்பத்தி வளம் வீழ்ச்சியடையும்.இதனால் வட க்கு கிழக்கு மீனவர்கள் கடுமை யான பாதிப்புக்களைப் பெறுவர். மேலும் இக்கால்வாய் வெட்டப்படு வதால் கடல் நீரோட்டங்களிலும் நில த்தடி நீரோட்டங்களிலும் மாறுதல் கள் ஏற்படும் எனத் துறைசார் நிபு ணர்கள் கருத்துக்கூறி வருகின்ற னர். குறிப்பாக வடபுலத்து நிலத்தடி நீர் ஒட்டத்தில் மாறுதல்கள் ஏற்பட்டு உவா நீர மேல கிளம்பும் சூழல் உருவாகும் என்ற அச்சம் தெரிவிக் கப்படுகிறது. ஏற்கனவே வடபுலத்தில் நிலத்தடி நன்னீர் குறைந்து உவர் நீராகும் அபாயம் இருந்து வருகின் றது. மேலும் இத்திட்டத்தினால் வட க்கு கிழக்கு கரையோரங்கள் கடல ரிப்பால் விழுங்கப்படக் கூடிய ஆபத் திற்கு உள்ளாகும் என்று எச்சரிக் கப்படுகிறது.

இவற்றுக்கும் அப்பால் இக் கால்வா யின் பாதுகாப்பு என்ற பெயரில் வட க்கு கிழக்கை ஒரு வகை முற்றுகை கண்காணிப்பின் கீழ் இந்திய கடற் படை வைத்திருக்கும் நிலை நிச்சயம் தோன்றும்.இதனால் வடக்கு கிழக் கில் தமிழ் மக்கள் முன்னெடுத்து வரும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு அச்சுறுத்தல் நிரந்தரமாகப்படவே செய்யும். இதன் வளர்ச்சி முழு இலங்கையினதும் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறமை இந்திய பிராந்திய மேலாதிக்கத்தின் விரல்களில் சிக்கிக் கொள்ளவே செய்யும். இவ்வாறு நோக்கும் போது சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் சகல வழிகளாலும் இலங்கையின் பொரு ளாதாரத்திற்கு மட்டுமன்றி வடக்கு கிழக்கு மீனவர்களின் அன்றாட வாழ்வுக்கும் பொருளாதா ரத்திற்கும் அப் பிரதேசங்களுக்கும் பெரும் பாதிப்புக்களையே கொண்டு வரும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

இவ்விடயத்தில் குறிப்பிடவேண்டிய ஒரு பிரதான அம்சம் என்னவென் றால் இத்திட்டத்தின் பாதகமான பக்கங்களை நன்கு அறிந்திருந்தும் சில தமிழ் கல்வியாளர்கள் சூழலிய லாளர்கள் அவற்றை வெளியே கூறு வதற்கு தயக்கம் காட்டி வருவது தான். இத் தயக்கத்திற்கு வெவ் வேறு காரணங்கள் இருக்கின்றன. பாதிப்புகளை பற்றிக் கூறினால் தங்க ளை தென்னிலங்கையின் ஆதரவா ளர்கள் என அடையாளப்படுத்தி விடுவார்களோ என்று அஞ்சுவது. இரண்டாவது இந்திய மேலாதிக்க நலன்களோடு ஏன் விரோதித்துக் கொள்ள வேண்டும் என்ற பயப்ப ணிவு. மூன்றாவது நமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிளையாக இருக்க வேண்டும் என்ற வக்கிர எண்ணம். இது சரி பிழை, உண்மைபொய், மக்கள் சார்பு விரோ தம், தூரநோக்கு குறுகியபார்வை என்பன வற்றில் நேர்மையாக நிதா னமாக முடிவுகளுக்கு வர மறுத்து குறுகிய நலன்களின் அடிப்படையில் சேது சமுத்திரத் கால்வாய் திட்டத் திற்கு வியாக்கியானம் அளிக்கும் போக்கு காணப்படுவது தான் சோக மானது. எல்லாவற்றுக்கும் தமிழ்க் குறுந்தேசியவாத நிலைப்பட்ட ஆய்வு நிலைத் திணிப்பைச் செலுத்தி விளக் கமளிக்க முற்படும் அபாயமானது வடக்கு கிழக்குப் பிரதேசங்களினதும் தமிழ் மக்களினதும் நீடித்த எதிர்கால இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் ஊறு விளைவிப்பதாகவே காண முடியும். இதற்கு ஒரு உதாரணத்தைக் கூற முடியும். அண்மையில் யாழ்ப்பா ணத்தில் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் பற்றிய ஒரு கருத்தரங்கு இடம் பெற்றது. யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் கருத் துரை வழங்கினார். மீனவர்கள் இத் திட்டத்தால் பாதிப்படையப் போகிறா ர்கள் என்று ஒரு கேள்வி எழுப்பப்ப ட்டது. அதற்கு கிடைத்த பதில் "மீனவர்கள் தொடர்ந்தும் மீனவர் களாக இருக்க வேண்டியதில்லை. தொழிலை மாற்ற வேண்டியது தான்". இப்பதிலுக்கு அழுவதா? அல்லது சிரிப்பதா? இவ்வாறான குறுகிய பார்வையில் தான் சகல பிரச்சினைகளும் நோக்கப்படுகிறது. அப்படியானால் தமிழ்த் தேசிய இன த்தினதும் அவர்களது தாயக மான வடக்கு கிழக்கினதும் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என் பது அடிப்படையான கேள்வியாகும். எனவேதான் சேதுசமுத்திரக் கால் வாய்த் திட்டம் நமக்கும் நமது பிர தேசத்திற்கும் முழு இலங்கைக்கும் ஏற்படுத்தப் போகும் பல்வேறு நிலை த் தாக்கங்கள் பாதிப்புக்கள் ஆபத் துக்கள் பற்றி விரிவாகவும் நேர்மை யாகவும் ஆராய்ந்து மக்களுக்கு சரி யான விளக்கமளிக்கப்பட வேண்டும். இது நமக்கு முன்னால் உள்ள ஒரு முக்கிய பணியாகும்.

## அமெரிக்கா காடைத்தனம் புரிவதாக அநுரா கூறுகிறார்.

இலங்கையின் ஆடைத்தொழிற் சாலைகளில் அதிகமானவை அமெ ரிக்க நிறுவனங்களின் கோட்டா விலேயே இயங்கிவந்தன அக்கோ ட்டாக்கள் எதிர்வரும் டிசம்பர்மாத த்துடன் முடிவடைகி ன்றன அமெரி க்க நிறுவனங்கள் அவற்றின் கவன த்தை தாய்லாந்து சீனா போன்ற நாடுகளின் பக்கம் திருப்புகின்றன. அதான டிசம்பர்மாதத்திற்கு அதிக மான ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படலாம் அதில் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலையிழப்பர். இதுவும் எமது பொருளாதாரத்தில் பாரிய பின்ன டைவை ஏற்படுத்தப்போகிறது.

அமெரிக்க நிறுவனங்கள் தொடர் ந்து இலங்கை ஆடை தொழிற் சாலைகளுடன் வர்த்தகத்தை செய் ய வேண்டுமென்று வேண்டு கோள் விடுத்து அவற்றுடன் உல்லா சன பிரயாண துறை அமைச்சு அநுரப ண்டாரநாயக்க நடத்திய பேச்சு வார் த்தைகள் வெற்றியளிக்க வில்லை. அதனால் அவர் அமெரிக்கா மீது ஆத்திரமடைந்து அபிவிருத்திய டைந்து வரும் நாடுகள் மீது அமெரிக்கா காடைத்தனம் புரிவதாக வெளிப்படையாக குறிப்பிட்டுள்ளார். ஈராக் மீது அமெரிக்கா புரிந்த காடைத்தனத்தை தான் கண்டிப் பதாகவும். ஈரான் மீதும் அமெரிக்கா காடைத்தனம் புரிய இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளார். இது சீ.சீ. இந்த இந்தப்பழம் புளிக்குப் என்று நரி கூறியதாக கூறப்படும் கதைப் போன்றதே.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அரசியலை கொண் டவரல்ல அநுரபண்டாரநாயக்க சிறி லங்கா சுதந்திரக்கட்சியில் ஒரள வாவது இருந்த முற்போக்கு காண தேசியத்தன்மை இல்லாமல் போனதற்கு அநுரபண்டாரநாயக்க போன்றவர்களே காரணமாகும் மேற் குலக சார்பு ஏகாதிபத்திய சார்பு தன் மையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டமை க்கு காரணமானவர்களின் அநுரா பண்டாரநாயக்க முக்கியமான வராவார்.

அமெரிக்கா காடைத்தனம் புரிவதாக கூறிவிட்டு ஐரோப்பிய நாடுகளின் உதவியை நாடுகிறார். அநுரா ஆடைத் தொழிற்சாலைகளுக்கு தேவையான ஆடைதயாரிப்பை செய்துகொள்ள ஐரோப்பிய நாடுகளின் தயவை நாடுகிறார். இதுவும் அவரின் அரசியலே.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீதான அநுராவின் எதிப்பு தற்காலிகமானதே ஏகாதிபத்திய எதிர்ப்பின்றி சார்பே அவரின் அரசியலாகும்.

*தேசியத்தை வலுப்படுத்தல்.....*

6ம் பக்க தொடர்ச்சி

மதங்களிடையிலான சமத்துவம், வழிபாட்டுச் சுதந்திரம் என்பன வற்றோடு எந்த ஒரு மதத்தையும் சுயவிருப்பின் பேரில் ஏற்கவோ கை விடவோ எந்த மதத்தையும் சாரா திருக்கவோ ஒவ்வொரு மனிதருக் கும் முழு உரிமையும் தெரிவு க்கான சுதந்திரமும் இரு க்க வேண் டும். சுதந்திரம் என்பது மத த்தின் பேரால் மக்களை ஏய்க் கிறதற்கும் சிலர் சொத்துச் சேர்ப்ப தற்கும் சமூகத்தில் மதப் பூசல்களை க் கிளறிவிடு வதற்குமான சுதந்திர மாக இருக்க லாகாது.

மதத்தின் பேரால் இன்று நடக்கிற ஏமாற்று வேலைகளையும் மூடநம்பிக் கைகளையும் தட்டிக் கேட்பது ஒரு அடிப்படையான உரிமையாகவும் சமூகக்கடமையாகவும் ஊக்கு விக்கப்பட வேண்டும். சில மத நிறுவ னங்கள் தமிழ்த் தேசிய இன விடு தலைக்கும் இலங்கையின் இறை மைக்கும் எதிராகவும் பிராந்திய மேலாதிக்க உலக ஆதிக்க வல்லர சுகளது தேவைகட்காகச் செயற்ப டுகின்றன. இத்தகைய அமைப்பு க்களது நட வடிக்கைகளைக் கேள் விக்குட்படுத்துவதும் மக்களிடையே அம்பலப்ப டுத்துவதும் தேசிய இன விடுதலைக்கு வலுவூட்டுகிறகாரிய ங்களாகும்.

பிரதேசவாதம் என்பது அதிகார வர்க்க நலன் சார்ந்த கருத்து நிலை யாகும். நிலவுடமைச் சிந்தனை யிலி ருந்து விடுபடாத ஒரு சமுதாயத்தின் பின்தங்கிய முதலாளிய வளர்ச்சிச் சூழலில் தன்னை மேம்படுத்திக் கொள்ளத் துடிக்கிற நடுத்தரவர்க் கத்துக்குப் பிரதேசவாதம் ஒரு பய னுள்ள கருவியாகிறது. கல்வி, தொழி ல், அரசியல் அதிகாரம், வணி கம் போன்ற துறைகளில் உள்ள போட் டியில் தனக்கு எதிரான போட்டி யாளர்களை ஒர ங்கட்டுவதற்குப் பிர தேசவாதத்தை எவரும் பயன்படு த்தலாம். குறிப்பிட்ட ஒரு குழுவி னதோ தனிமனிதர்களது நலன் களையோ முன்னெடுப்பதற்காகப் பிரதேசவாத உணர்வுகளைக் கிள றிவிட இயலும். இது தேசிய இன விடுதலைப் போராட்டத்தைப் பலவீ னப்படுத்தும் என்பதில் ஐய மில்லை..

பிரதேசவாதத்தை வெறுமனே கண்டிப்பதாலோ அதற்கெதிரான கடும் நடவடிக்கைகளாலோ பிரதேச வாதம் வலுப்படவே இடமுண்டு. நியாயமான குறைபாடுகளைப் பற்றி வெளி வெளியாகப் பேசுவதாலும் சமூகப் பிரிவினரிடையே சமத்து வத்தின் அடிப்படையில் உறவை ஊக்குவிப்பதாலுமே பிரதேசவா தத்தை முறியடிக்க இயலும். இன்று மட்டக்களப்புப் பிரதேசவாதம் தமிழின விடுதலைப்போராட்டத்தைப் பல வீனப்படுத்தப் பயன்படுகிறது. இதிற் பேரினவாதிகள் மிகவும் மும்முரமாக உள்ளனர்.அடிப்படையில் சினேக முரண்பாடான பிரதேச முரண்பாட் டைத் தீர்க்க வன்முறையைப் பாவி ப்பது எவ்வளவுதான் நியாயப்படு த்தக் கூடியதாகினும் அம்முரண் பாட்டைப் பகை முரண்பாடாக்குவ தற்கு உதவ இடமுண்டு. என வே, பகைமையான கூறுகள் வெளிப்படும் போது, அவற்றை நிதானமாகவும் பொறுமையுடன் கையாள்வதன் மூலமே மக்களிடையே உருவாக் கப்பட்ட தவறான எண்ணங்களைக் களையவும் மக்களை ஒன்றுபடு த்தவும் இயலுமாயிக்கும்.

தோழர் நவத்தின் மறைவு

9ம் பக்க தொடர்ச்சி

மதிப்பையும் வெளிக்காட்டிக் கொண் டனர்.

தோழர் நவத்தின் வாழ்வு ஒரு புரட்சிகரப் பொதுவுடமைவாதிக்குரிய வாழ்வாகும். அவர் மனித வாழ் வைப் பற்றியும் இன்றைய சமூக ஏற்றத் தாழ்வுகள் சுரண்டல்கள், ஒடுக்கு முறைகள் சமூகநீதி மறுப்புகள் பற்றியும் தெளிவான கண்ணோட்ட த்தைக் கொண்டிருந்தார். அதனை அவர் மாக்சிச உலக நோக்கின் ஊடே பெற்றிருந்தார். அதன் மூலம் ஒவ்வொரு பிரச்சினையிலும் கூர்மையாகவும் ஆழமாகவும் தூர நோக்குடனும் சமூக யதார்த்தங்க ளைப் புரிந்து கொள்ளும் வல்ல மை பெற்றிருந்தார் அதனலேயே அரசி யல் வாழ்விலும் பொதுவாழ் விலும் குடும்ப வாழ்விலும் அர்த்த முள்ள வாழ்வை வாழமுடிந்தது. தெளி வான குறிக்கோள் அவரிடம் இரு ந்தது . புரட்சிகரப் போராட்டம் விடுத லை சமூக மாற்றம் இடம் பெறாமல் இன்றைய சமூக அமை ப்பின் அடிப் படைகளைத் தூக்கி எறிந்த கொள் ளாமல் ஏகப்பெரும் பான்மையான தொழிலாளர்கள் விவ சாயிகள் உழைக்கும் மக்களுக்கு விமோசனம் கிடைக்க முடியாது என்பதில் மிகத் தெளிவுடனும் உறு தியுடனும் இருந்து வந்தார். அத்த கைய மாற்றத்திற்கு மாக்சிசம் லெனி னிசம் மாஓசேதுங் சிந்தனை வழிகாட்டும் என்பதிலும் அதற்கான புரட்சிகரக் கட்சியை முன்னெடுப்பதிலும் தோழர் நவம் உறுதியுடன் இருந்து வந்தார். அவரது புரட்சிகர வாழ்வும் செயலும் புதிய தலைமுறையினருக்கு சிறந்த அனுபவப் பொக்கிசமாகும். எதிர்கா லத்தில் புரட்சிகரப் பயணத்தில் வழிந டக்க முன்வரும் ஒவ் வொருவருக் கும் தோழர் நவத்தின் பொதுவுட மைப் போராளிவாழ்வு சிறந்த முன்னு தாரணமாக வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

சி.கா. செந்திவேல்
பொதுச் செயலாளர்
புதிய-ஜனநாயக கட்சி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று11 நவம்பர் 2004 பக்கம்12 விலை 12/- சுழற்சி 74

## இந்து ராமின் உள்ளத்திலிருந்து.....!

"இலங்கை இந்திய உறவுகள் இப்பொழுது உள்ளதைப் போல் எப்பொழுதும் நன்றாக இருந்ததில்லை. ஜனாதிபதி மற்றும் தற்பொழுது இங்கிருக்கும் முன்னாள் இந் நாள் பிரதமர்கள் (ரணில் விக்கிரமசிங்கா, மகிந்த ராஜபக்ஷ) ஜே.வி.பியினர் உட்பட வேறு சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இரு தரப்பு உறவின் உள்ளடக்கம் தோற்றநயம் மற்றும் எதிர்கால வெளிப்பாடு ஆகியவற்றுக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். எதிர் காலத்தில் இது மேலும் சிறப்படையும் என்பதை தற்போதைய போக்குகள் காட்டி நிற்கின்றன" இவ்வாறு கூறி இருப்பவர் இந்து பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம். இதற்குள் அடங்கியிருக்கும் சாராம்சம் இந்திய பிராந்திய மேலாதிக்கமேயாகும்.

# அம்பலப்பட்டு வரும் ஜே.வி.பி.யின் இரட்டை வேடம்!

பதவிகளுக்கும் அரச அதிகாரத்திற்கும் சரியான ஆசை. அதே வேளை மக்களின் அதிருப்தி அதிகரித்து வருவதால் ஜனாதிபதியையும் சுதந்திரக்கட்சியையும் விளாசுவதைத் தவிர ஜே.வி.பியினருக்கு வேறு வழியில்லை. இப்படி விளாசிக் கொண்டே ஆட்சிக்காலத்தை கடத்திவிடலாம் என்று ஜே.வி.பி.யினர் நினைக்கிறார்கள்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்போம் என்றும், அரச ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வுகளை வழங்குவோமென்றும் வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த ஐ.ம.சு.மு. அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி தற்போது இரட்டை வேடம் போடுவது நன்கு அம்பலமாகிவருகிறது.

ஜே.வி.பி சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டைப் போடும் நிலைப்பாட்டையும் பிரசாரங்களையும் செய்து ஐ.சு.ம.மு. அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுகின்றனர். மறுபுறம் ஐ.ம.சு.மு. மீதான விமர்சனங்களை முன்வைத்து விட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேறவும் முடியாதிருக்கின்றனர்.

இலங்கையின் பாரம்பரிய பாராளுமன்ற இடதுசாரிகளைக் கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி.யினர் தாங்கள் மட்டுமே இடதுசாரிகள் என்று காட்டிக் கொண்டவர்கள். ஐ.தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒரே மாதிரியானவை என்றும் கூறியவர்கள். ஆனால் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து ஆட்சி பிடமேறி அமைச்சர் பதவிகளையும் பெற்றுக் கொண்டனர்.

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் புலிகள் இயக்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்து பேரினவாத உணர்ச்சிகளை ஊட்டி சிங்கள மக்களின் ஒரு பிரிவினரை தம்வசம் இழுத்து வைத்திருக்கின்றனர்.

ஆனால் இன்று அதிகரித்து வரும் பொருளாதார பிரச்சனைகளால் மக்கள் ஜே.வி.பியினர் மீது வெறுப்படைந்து வருகின்றனர். வெறுப்படைந்து வரும் மக்களை திருப்திப்படுத்துவதற்காகவே சுதந்திரக்கட்சி மீதும் ஜனாதிபதி மீதும் சில அமைச்சர்கள் மீதும் விமர்சனங்களை அள்ளி வீசி வருகின்றனர்.

இரட்னபுரியில் நடைபெற்ற தேசப்பற்றுள்ளோரின் இயக்கக் கூட்டமொன்றில் பேசிய ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச ஜனாதிபதி அவரது நிறைவேற்று அதிகாரங்களை பிரயோகிக்க முடியாதிருந்த போது தாங்களே அவருக்கு பக்கபலமாக இருந்து அவ்வதிகாரங்களை அவர் பிரயோகிக்கும் நிலையைத் தோற்றுவித்தோம். ஆனால் அவற்றையெல்லாம் மறந்து ஜனாதிபதி செயற்படுகிறர் எனக் கூறியுள்ளார்.

இது மக்களை ஏமாற்றுவதற்கான பேச்சாகும். ஜே.வி.பியினர் எவ்வளவு தான் இனவாதம் பேசினாலும் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் அவர்களால் பிரயாணம் செய்ய முடியாது.

ஜே.வி.பி.சிகப்புத் துணி போர்த்திய ஒரு சந்தர்ப்பவாத பிற்போக்குவாத பேரினவாத இயக்கம் என்பதை விரைவிலேயே மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி வருகிறது. "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத் தான்" என்பது போல இரண்டு வருடங்களுக்கு முன்பு பேசிய பேச்சுகளுக்கும் இப்போது பேசி வருவனவற்றுக்கும் அவர்களளது நடத்தைகளுக்கும் இடையிலான பாரிய இடைவெளியை மக்கள் நன்கு அவதானித்து வருகின்றனர். அவர்கள் முன்பு எதிர்த்து நின்ற இந்தியாவுடன் இணங்கிச் சமரசமாகி அதன் தாசர்களாகி விட்டனர். கடுமையாக விமர்சித்து வந்த சர்வதேச நாணய நிதியம் உலக வங்கியுடன் உறவாடத் தொடங்கிவிட்டனர். யப்பானை வரவேற்று பூங்கொத்து கொடுத்து பேச்சவார்த்தை நடாத்துகின்றனர். அவர்களுக்கு உள்ள ஒரே இறுதிப்பிடி பேரினவாதத்தை ஜாதிக ஹெல உறுமையவையும் விட உயர்த்திப்பிடித்து முன் செல்வதாக மட்டுமே உள்ளது.

தாராள பொருளாதாரக் கொள்கையையும் தனியார் மயத்தையும் எதிர்த்த ஜே.வி.பி. இன்று அதிகார பீடத்தில் அமர்ந்து அமைச்சுக் கதிரைகளுக்கு பின்னாலும் மறைந்திருந்து கொண்டு மக்களுக்கு பதில் சொல்ல முடியாது திண்டாடுகின்றது. ஏன் இந்த நிலை எதற்காக இரட்டை வேடம். முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்ளும் எந்த ஒரு "இடதுசாரிக்கும்" ஏற்படும் அவல நிலை போலி இடதுசாரி வேடம் காட்டிய ஜே.வி.பிக்கும் ஏற்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

# நிதியமைச்சு செயலாளரின் ஊடல்

நிதியமைச்சின் செயலாளர் ஜயசுந்தர உலகவங்கி, சர்வதேசநாணய நிதியம் என்பவற்றின் மீது சீற்றமடைந்தவாரக காணப்படுகிறார். அந்நிறுவனங்கள் இலங்கையை அடிமைப்படுத்துவதாக கூறுகின்றார். அவற்றின் பிடியிலிருந்து இலங்கை சுதந்திரமாக இயங்க வேண்டும் மென்கிறார்.

இவையெல்லாம் முற்போக்கான கருத்துக்கள் என்று நினைத்து இலங்கை மக்கள் ஏமாந்து விடத்தேவை இல்லை. இவ்வருட வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்க உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன திட்டவரைவுகளையோ, அதற்கான விடயங்களையோ கொடுக்கவில்லை. அத்துடன் அவை எந்தெந்த செலவீ னங்களுக்கு கடன்வழங்கப்படு மென்றும் வாக்குறுதிகளை வழங்க வும் இல்லை.

இதனால் செய்வதறியாது ஆத்திரமடைந்தே நிதியமைச்சின் செயலாளர் மேற்படி சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது இலங்கையின் வரவு செலவு திட்டத்தை தயாரிக்க உலகவங்கியும், சர்வதேசநாணய நிதியமும் திட்டவரைவுகளையும் விடயங்களை கொடுத்துதவுவதுண்டு அத்துடன் குறிப்பிட்ட திட்டங்களுக்கு கடனுதவி வழங்குவாதாக வாக்குறுதிகளை வழங்குவதுமுண்டு. இம்முறை அவற்றை செய்யவில்லை.

மாறாக இலங்கை அரசாங்கமே அதற்குரிய வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்க வேண்டுமென்றும். அத்திட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால் நிதியுதவி வழங்குவது பற்றி யோசிக்கப்படும் என்றும் அந்நிறுவனங்கள் கூறிவிட்டன.

ஏற்கனவே விலைவாசி உயர்வுகள், தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு நடத்தும் போராட்டங்களால் இலங்கை அரசு குழப்பிப் போயிருக்கிறது. சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தை நிபந்தனையாக கொண்டே உதவி வழங்கும் நாடுகள் நிதியுதவிகளை செய்வதாகத் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் உலக வங்கியும், சர்வதேச நாணயநிதியமும் கைவிரித்துவிட்டன. அதனால் எதி ர்கால பொருளாதார நிலை பெரிதும் அபாய கரமானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உலக வங்கியிடமிருந்து சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து மட்டுமல்ல எல்லா மேலாதிக்க நிறுவனங்களிடமிருந்தும் இலங்கையை விடுவிக்க வேண்டும். அப்போதுதான் இலங்கை மக்களுக்கு பொருளாதார விடுதலை உறுதி செய்யப்படும்.

ஆனால் தங்களுக்கு அவை உதவவில்லை என்பதனால் முதலாளி வர்க்கம் கொண்டுள்ள 'எதிர்ப்புணர்ச்சியின் அடிப்படையில்' அவற் றின் பிடியிலிருந்து விடுதலையடைய முடியாது. இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் இயலாமையினால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை திசை திருப்புவதற்காக அந்நிறுவனங்கள் மீது சீற்றம் கொண்டுள்ளாதாக நடிப்பதை உண்மையென நம்ப முடியாது.

அந்நிறுவனங்களுடன் இலங்கை நிதியமைச்சின் செயலாளருக்கான கோபம் ஊடல் போன்று தற்காலிகமானதே.

அந்நிறுவனங்களின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டு இம்முறை வரவு செலவுத்திட்டம் தயாரிக்காவிட்டாலும் அவை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தயாரிக்கப்படும் என்று நிதியமைச்சின் செயலாளர் கூறியுள்ளமையை கவனிக்கதவறக் கூடாது. இறுதியில் இலங்கை முதலாளித்துவம் அந்நிறு வனங்களிடமும் ஏகாதிபத்தியத்திடமுமே சரணடைய வேண்டிவரும். அதனால் இலங்கை மக்களுக்கே பாதிப்பு. இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர் காலம்மிகவும் அபாயகரமாக இருக்கப்போகிறது. பசி,பட்டினி ,பஞ்சம் தலைவிரித்தாடப்போகிறது. மாற்று அரசாட்சியை-மக்களுக்கான அர சாட்சியை ஏற்படுத்ததாத வரை இலங்கை நாட்டிற்கு விடிவில்லை.

*தோ. தொழிலா.....*

1ம் பக்க தொடர்ச்சி

கூட்டு ஒப்பந்தம் என்ற சதியில் தொட ர்ந்து ஈடுபட்டுவரும் தொழிற்சங்கங் களை நிராகரிப்பதும் ஆகக்குறைந் தது நாளொன்றுக்கு 350 ரூபா வை யாவது சம்பளமாக பெறுவதற்கான போராட்டத்தை தொடர்ந்து முன்னெ டுக்க வேண்டும். தொடர்ந்தும் கம்பனிகளின் முதலாளிகளும் தொழிற்சங்க முதலாளிகளும் இணைந்து தோட்டத் தொழிராளர்களுக்கு எதிராக கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் செய்து வரும் கூட்ச் சதிகளையும் மோசடிக ளையும் ஏமாற்றையும் முறியடிக்க மலையகத் தொழிலளார்கள் விழிப்பு ணர்வுக்கும் போராட்டத்திற்கும் தயா ராக வேண்டும்.

*இலங்கை – இந்திய.......*

1ம் பக்க தொடர்ச்சி

வளர்ச்சி பெற்று நிற்கின்றது என்றும் அதன் புரட்சிகர வீச்சுகள் தென்கிழக்கு இந் திய மாநிலங்களில் பரவிவரு வதை யிட்டும் இந்திய ஆளும் வர்க்கம் ஆழ் ந்த கலக்கத்தையும் கவனத்தையும் கொண்டு நிற்கிறது.

இத்தகைய சூழலிலேயே இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை உருவாக்கப் பட்டுள்ளது. இது நிச்சயம் இலங்கைக்கு எவ்வித நன்மைகளையோ பயன்களையோ கொண்டு வரமாட்டாது. முற்று முழுதான இந்திய மேலா திக்கமே மேலோங்கும். இது அமெ ரிக்க உலக மேலாதிக்கத்திற்கு எதி ரான வியூகம் என இந்திய ஆதரவாளர்கள் விளக்கமளிப்பார்கள். ஆனால் இதற்கும் அப்பால் பொருளாதார அரசியல் சமூக பண் பாட்டு நிலைகளில் இந்திய ஊடுருவல் மேலும் வளர்ச்சி பெறுவதற்கும் ராணுவ வல்லாதிக்கம் நேரடித் தலையீட் டைச் செலுத்தவதற்கும் இப்பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை வழிவகுக்கும்.

ஏற்கனவே 1987ல் ஜே.ஆர் . ஆட்சியின் கீழ் செய்யப்பட்ட இலங்கைள– இந்திய ஒப்பந்தத்தின் கீழ் சமாதா னப்படை என்றபெயரில் இந்திய ராணுவம் இங்கு வந்துகொண்டது. தமது ராணுவ நலன்களையே அவ் ஒப்பந்தம் தன்மைப்படுத்தி நின்றது. அதன் பின் 1999ம் ஆண்டில் இலங்கை இந்திய வர்த்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் மூலம் இந்தியா தனது பொருளாதார வர்த்தக நலன்களை விரிவுபடுத்திக் கொணடது. இப்பொழுது பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற பெயரில் இலங்கை மீதான முழு பொருளாதாராணுவ ஆதிக்கப் பிடியையும் தனது கரங்களுக்கு எடுக்கப்போகின்றது.

அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற ஒரு நினைவுச் சொற்பொழிவில் 'சென்னை இந்துப்' பத்திரிகையின் ஆசிரியர் ந.ராம் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எதற்காக என்ற விளக்கத்தைக் கூறி இருக்கிறார்.அவர் நீண்ட காலமாக இந்திய மேலாதிக்கத்தின் பிரதி நிதியாக நின்று வியக்கியானங்களும் கொள்கை வகுப்புக்களும் செய்து வரும் ஒருவராவர். முற்றிலும் இந்திய நலன்களுக்காவே இவ் உடன்படிக்கை என்பதை அவர் தெளிவுபடக் கூறி உள்ளளமை கவனத்திற்குரியதாகும்.

இவ் உடன்படிக்கையில் உள்ளடங்கியிருக்கும் அம்சங்கள் வெளிவரும் போது இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை எதற்காக? யாருக்காக? என்பதற்கான பதில்கள் தெளிவாகவே இருக்கும்.

*தோழர் நவரத்தினம்*

1ம் பக்க தொடர்ச்சி

உறவினர்கள் நண்பர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மலர் மாலைகளும் மலர் கொத்துகளும் வைத்து தமது மலர் அஞ்சலியைத் தெரிவித்தனர். தோழர்கள் இ.தம்பையா, சோ.தேவராஜா, க.தணிகாசலம், கா.கதிர்காமநாதன், க.ஜெயபாலசிங்கம், கு.மோகன் ஆகியோரும் மாதர் அமைப்பின் சார்பில் திருமதி. த.ஈஸ்வரியும் மற்றும் நண்பர்களும் இரங்கலுரை நிகழ்த்தினர். இத னைத் தொடர்ந்து அவரது இறுதி ஊர்வலம் புறப்பட்டு அவர் தலைவராக இருந்து மக்கள் பணிபுரிந்த கலைமகள் சனசமூக நிலையத்தின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அந்நிலைய நிர்வாகிகள் நண்பர்கள் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினர். அதன் பின் ஊர்வலமாக அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

கடந்த நாற்பது வருட அரசியல் வாழ்வில் தோழர் நவம் நேர்மையான மாக்கிச லெனிச வாதியாக வாழ்ந்து கட்சியைக் காத்து மக்களின் விடுதலைக்கும் சமூக மாற்றத்திற்கும் அயராது உழைத்து வந்த தோழராவர். அவர் புதிய பூமியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வந்தார். அவருக்கு புதியபூமி ஆசிரியர் குழு தமது புரட்சிகர இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.தோழர் நவத்திற்கு துணைவியாரும் நான்கு பிள்ளைகளும் உள்ளனர். தோழர் நவரத்தின் புரட்சிகர நிலைப்பாட்டின் நினைவுகள் என்றும் வாழும். அவருக்கு நம் அனைவரினதும் சிகப்பு புரட்சிகர அஞ்சலியைத் செங்கொடி தாழ்த்தி செலுத்துகின்றோம்.

*சந்திரிகாவிற்கு பிரதமராக..*

1ம் பக்க தொடர்ச்சி

அதிகார ஜனாதிபதி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து பாராளுமன்றத்திற்கும் அதன

பிரத மருக்கும் அதிகாரத்தைக் கொண்டு வர முயல்கிறார் சந்திரிகா அம்மை யார்.இதன் நோக்கம் மக்களுக்கும் நாட்டிற்கும் சேவை செய்வது அல்ல, அப்படிச் செய்வதன் மூலம் தானே பிரதமராகிக்கொள்ள முடியும் என் றே நம்புகிறார். அவரது முழு இலக் கும் அடுத்த பிரதமராவதிலேயே உள்ளது.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்கா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில் இப்போதிருந்தே ஆரம்ப பிரச்சாரத்தைத் தொடங்கி விட்டார். தற்போதைய அரசாங்கம் மக்கள் மத்தியில் சகல நிலைகளிலும் செல்வாக்கு இழந்து வரும் சூழலை ரணில் நன்கு திட்டமிட்டு பயன்படுத்த முன் வந்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்க தயக்கம் காட்டிவரும் ஜனாதிபதியைத் தாக்குகிறார். அவ்வாறே வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பை கையில் எடுத்து மக்களைக் கூட்டி ஆர்ப்பரித்து சட்டி பானைகளைத் தட்டவைத்து தனது காரியமாற்ற நிற்கின்றார். அவரது முழுக்கவனமும் அடுத்த ஜனாதிபதியாக வருவதிலேயே செலுத்தப்படுகிறது.

சந்திரிக்கா ரணில் ஆகிய ஆளும் வர்க்க தலைவர்களது பிரச்சினை மக்கள் சார்பானதோ நாட்டு நலன் சார்ந்ததோ அல்ல. ஆளும் அதிகாரப் பசிக்குத் தீனி தேடுவதாகவே உள்ளது. ஆனால் மக்களின் நிலை ரணில் வந்தால் என்ன? சந்திரிகா இருந்தால் என்ன? எல்லாம் ஒன்று தான் என்றே மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A.K.சிறில் சி.பெரரோ மாவத்தை, கொழும்பு 13.